
கல்கி

KALKI 14.11.1971 40 காசு




மாதம் ஒன்று, இரண்டு, மூன்று மெல்ல கவிழ்ந்து படுக்கும் நன்று

மாதம் நான்கு ஐந்து, ஆறு மெது
வாத்தவழ்ந்து உதைக்கும் பாரு



மூன்றுவது மாதத்திலிருந்து உங்கள் குழந்தைக்குப் பால் மட்டும் போதாது. சீரான உடல் வளர்ச்சிக்கு உங்கள் குழந்தைக்குத் தேவை பாரெக்ஸ்...அதன் முதலாவது திடஉணவு. குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு ஏற்ற சரியான புரதச் சத்து கொண்டது பாரெக்ஸ்.

குழந்தைக்கு எத்தனை சீக்கிரம் திட உணவு கொடுக்க ஆரம்பிக்கிறீர்களோ அத்தனை நல்லது என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். குழந்தையின் சீரான வளர்ச்சிக்கு வேண்டிய சரியான புரதச் சத்துடன், கார்போஹைட்ரேட்டுகள், கால்ஷியம், பாஸ்பரஸ், வைட்டமின்கள் மற்றும் தாது உப்புகள் யாவும் அடங்கியது பாரெக்ஸ். பாரெக்ஸ் புத்தகத்தை இலவசமாகப் பெற, 25 பைசா தபால் தலையை இணைத்து, டிபார்ட்மெண்ட் K-1 த.பெ. 16558, பம்பாய் 18 டபிள்யூ.பி. என்னும் முகவரிக்கு எழுதுக. (எந்த மொழியில் வேண்டுமென்று தெரிவிக்கவும்).



சீரான உடல் வளர்ச்சிக்குக் குழந்தையின் முதலாவது திடஉணவு.

பாரெக்ஸ்® – க்ளாக்ஸோ தயாரிப்பு

CMCF-21-202 Tam

RAJAJI - 93 SOUVENIR

A collection of tributes, reminiscences and experiences from many distinguished and eminent personalities from India and abroad and profusely illustrated with pictures portraying the many events in Rajaji's long and unique life.

With each copy of the Souvenir is given free a standard 45 RPM disc carrying





(Rajaji's talks are on 'God-fearing life' on one side of the disc and on 'World Government' on the other side)

A sumptuous and high-class production with more than 300 pages in 'Life' magazine size and priced at Rs. 12/- per copy plus Rs. 1.50 to cover packing, postage and registration charges.

Only a limited number of copies are printed of the Souvenir and therefore copies are reserved in the order of remittances received at the rate of Rs. 13.50 per copy inland and Rs. 25/- per copy abroad by sea mail.

The publishers of "Rajaji-93 Souvenir" have also great pleasure in offering a complimentary copy of RAJAJI-98 SOUVENIR along with the disc carrying the Voice of Rajaji to those who subscribe to 'Swarajya' for three years and remit Rs. 45/- in advance to the **Manager, Swarajya, Madras-31** on or before 10th December 1971 when Poojya Rajaji completes his ninety-third year.

In response to the request of several hundreds of regular readers of **Kalki**, the Publishers of "Rajaji-93 Souvenir" have also decided to offer a complimentary copy of "Rajaji-93 Souvenir" along with the disc carrying the voice of Rajaji to a limited number of the regular readers of Kalki who send Rs. 46/- in advance covering two years subscription for Kalki and the cost and postage of a copy of Kalki Deepavali Malar 1972 to the **Manager, Kalki, Madras-31**, on or before 10th December 1971.




T. Sadasivam

Convener, Rajaji-98 Souvenir Committee
Kalki Buildings, Chetput, Madras-31



கல்கி பொருளடக்கம்

விரோதிகிருது, ஐப்பசி 28, (14-11-1971)


மகிழ்ச்சி துள்ளும்
வளமான வாழ்வு
கிராமங்களிலே...
ராக்ஃபோர்ட் டால்மியா சிமெண்ட்
உறுதியான எதிர்காலத்திற்கு எழுப்பப்படும்
இன்றைய கட்டடம்.
டால்மியா சிமெண்ட் (பாரத்) லிட்.
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் தொழிற்சாலை
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
தலைமை அலுவலகம்: 4, சிந்தியா ஹவுஸ், புது டெல்லி 1.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிட்.
டால்மியாபுரம், (தமிழ்நாடு).

கல்கி
மலர் 31
இதழ் 16

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

உயர்வுக்கு வழி உழைப்பு ஒன்றே

வாழ்வுக்கு அவசியமான உண்மைகளைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதில் தவறில்லை. முன்பே எழுதியதை மீண்டும் வலியுறுத்துகிறோம். இந்திய தேசத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஒரே உபாயம் மக்களை உழைப்பில் ஊக்குவதுதான்.

சமீப காலத்தில் சீனம் பெற்றுவிட்ட முக்கியத்துவத்தைப் பார்க்குமிடத்து இந்த உண்மை தெற்றெனத் தெளிவாகிறது. பல்லாண்டுகளாக விரோதம் பாராட்டிய நாடுகள் உள்பட உலக நாடுகள் யாவும் இப்போது சீனத்திடம் நேசக் கரம் நீட்டுகின்றன. அது இவ்வளவு முக்கியத்துவம் அடைந்திருப்பதற்குக் காரணம் என்ன? அந்நாட்டு மக்கள் தங்களது உழைப்பினாலேயே அத் தேசத்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக்கி யுள்ளனர்.

வெறும் பொருட் செழிப்பால் மட்டும் ஒரு நாடு சக்தி பெற்றுவிட முடியாது. செல்வச் செழிப்பு மட்டும் அதிகமாகும் போது மக்களுக்கு அநுபோக ஆசை அதிகமாகும்; நாட்டுக்காக உயிரையும் கொடுக்க முன்வரும் பாங்கு குறைந்து போகும். இதுபோன்ற சந்தர்ப்பத்தில் அந்த நாட்டுக்குச் சக்தி குறைந்து போனதாகத்தான் அர்த்தமாகும். அந்நாட்டைப்போல் செல்வச் செழிப்பு இல்லாத ஒரு நாடு, உழைப்பு உணர்ச்சி கொண்ட மக்களையும், தேசத்துக்காக உயிரை விடக் கூடியவர்களையும் பெருமளவில் கொண்டிருக்குமாயின் உலக அரங்கில் சக்தி பெற்றுவிடுகிறது. அமெரிக்காவின் முக்கியத்துவம் மங்கி வருவதற்கும், சீனத்தின் முக்கியத்துவம் அதிகமாகி வருவதற்கும் இதுவே காரணம்.

ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த எண்ணும் நாடுகள் யாவும் சீனத்தைக் கவனிக்க வேண்டும். மக்களை உழைப்பாளிகளாக்கி, உற்பத்தியை உயர்த்தினால், பெருத்த மக்கட் தொகையால் சுபிட்சம் வளருமேயன்றி, குன்றாது.

மாறாக, நம் நாட்டிலோ கருத்தடை இயக்கத்துக்கு முதலிடம் தந்திருக்கிறோம். குடும்பக் கட்டுப்பாட்டின் மூலம், உண்கிற ஒரு வாயைக் குறைக்கும்போதே, உழைக்கிற இரண்டு கைகளையும் குறைக்கிறோம். ஜப்பானியரின் நாட்டுப் பற்றும், சீனரின் உழைப்புமே நமக்கு உதாரணமாகும். நம் நாட்டில் இதற்கு நேர் எதிர்த் திசையைக் காட்டுகின்றனர் அரசியல்வாதிகள். தொழிலாளர்களை நிர்வாகத்தினருடன் ஓயாமல் சண்டையிடச் செய்து, உற்பத்தியைக் குலைப்பதற்கே நமது அரசியல்வாதிகள் ஊக்கம் தந்து வருகிறார்கள். ஊதியத்தை உயர்த்தவேண்டும்; வேலையைக் குறைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தொழிற் சங்கத் தலைவர்கள் ஓயாமல் பூசல் மூட்டி விடுவதில் தீவிரமாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் உள் நோக்கம் அனைவருக்கும் தெரியும்.

போதாததற்கு, குறுக்கு வழியில் குபேரர்களாக்குவதற்காக 'லாட்டரிகள் வேறு ஏற்பட்டு மக்களின் உழைப்புணர்ச்சியை மேலும் நலிவுறச் செய்து வருகின்றன. அரசாங்க லாட்டரிகளும், அதற்கான பிரம்மாண்ட விளம்பரப் பிரசாரங்களும் உழைப்புணர்ச்சிக்கு எதிர்த் துருவத்தில் மக்களைச் செலுத்துகின்றன.

இந்த நிலையை மாற்ற முற்படுவதே தேசத்தின் அத்தியாவசியத் தேவை. உழைக்கச் சொன்னால் மட்டும் போதாது. உழைப்புக்கு உரிய ஊதியம் கிடைக்கும் என்ற நிச்சயத்தை ஏற்படுத்த வேண்டும். அதைவிட முக்கியமாக, உழைப்பினால் பெற்ற செல்வம் உழைத்தவனுக்கே பூரணமாக உரியது. அதைச் சர்க்கார் அபகரிக்க முடியாது என்ற உறுதியை ஏற்படுத்த வேண்டும். உழைத்துச் சேர்த்த செல்வத்தின் முழுச் சொத்துரிமை தங்களுக்கு உண்டு என்ற உறுதி ஏற்பட்டால்தான் மக்களுக்கு உழைப்பில் ஆர்வம் உண்டாகும். இதற்கெல்லாம் அடிப்படையாக, 'மக்கள் உழைத்துச் சேர்த்துத் தம்மிடம் உரிமையோடு வைத்துள்ள சொத்தே தேசச் செல்வம்; வரிகளைக் கொண்டும், பறிமுதல் சட்டங்களாலும் சர்க்கார் கஜானாவில் நிரப்புகிற பணம் தேசச் செல்வமல்ல' என்ற உணர்வு ஆட்சியினருக்கு ஏற்பட வேண்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

இந்திரா காந்திக்கு வாழ்த்து!

ஸ்ரீமதி இந்திரா காந்தி சர்வாதிகாரத்தை மேற்கொண்டிருப்பது பற்றியும், அவரது அரசாங்கக் கொள்கைகளைப் பற்றியும் நான் கடுமையாகக் கண்டனம் தெரிவித்து வந்திருக்கிறேன். ஆனால் அவர் ஆக்ஸ்ஃபோர்டில் பேசியிருப்பதைப் படித்து மெத்த மகிழ்ச்சி கொண்டேன். ஸ்ரீமதி இந்திரா ஆக்ஸ்ஃபோர்டில் டாக்டர் பட்டம் பெற்றுப் பேசுகையில், கடந்த முப்பது நூற்றாண்டுகளாக இந்தியா தேசம் எந்தப் பண்புகளால் தன்னைக் காத்து வந்துள்ளதோ அந்தப் பண்புகளை இன்றைய இந்தியா கைவிட்டுவிடக் கூடாது எனக் கூறியிருக்கிறார். இந்தியா தனது புராதன தர்மத்தைக் கைவிடாது என நம்புவதாகப் பேசியிருக்கிறார். இந்த நம்பிக்கையைக் காரியமாக்குவதற்கு ஸ்ரீமதி இந்திரா உதவி செய்ய முடியும். அதற்குத் தேவைப்படும் ஆத்ம சக்தியும், ஆத்மசுத்தியும் அவருக்கு இறைவன் அருள வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக. பகவான் திரு உளம் கொண்டால் செய்ய வொண்ணாதது ஏதுமில்லை.

கெடுதலில் நன்மை

கெடுதலுக்குள்ளும் ஒரு நல்லது இருப்பதுண்டு. அவ்விதமே, அந்நிய உதவி தருவதை அமெரிக்கா அடியோடு நிறுத்த வேண்டுமென 'ஸெனேட்' செய்துள்ள முடிவிலும் ஒரு நன்மை உண்டு. அமெரிக்க உதவியை வைத்து ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டு போரில் பிரவேசிக்கிற சிறிய நாடுகள் இனி அவ்விதம் செய்ய முடியாது. பொருளாதார அபிவிருத்திக்கு என்றே அமெரிக்கா நிதி உதவியும் கடனும் தந்து வந்த போதிலும், அதைக் கொண்டு உதவி பெறுகிற நாடுகள் தமது ராணுவ பலத்தை விஸ்தரிப்பதைத் தடுக்க முடியாமலிருந்தது. அந்நிய உதவியை அமெரிக்கா நிறுத்தி விட்டால் இவ்வித துஷ்பிரயோகத்துக்கு இடமில்லாமற் போகும். போர் செய்ய விரும்பும் நாடுகள் அதற்கான வசதிகளைச் சுயபலத்தில் தேடிக் கொள்வதே பொருத்தம்.

சிலந்திவலை, உஷார்!

கள்ளுக்கு இரையாயினோர் கீழ்ச்சாதியாவார். மூளையைக் கலக்கும் சாராயத்துக்கு இரையானோர் சர்வநாசம் அடைவார். அமிழ்தமன்ன கருப்பஞ்சாற்றைச் சாராயமாக்கி அதை முன்பின் அறியாத தமிழ்ச் சிறுவருக்கு விற்று நிதி சேர்ப்பது ராஜநீதியல்ல; விவேகமுமல்ல.

நிரா வியாதிகளைத் தந்து கொல்லும் சாராயப் பழக்கம். சிக்கியபின் தப்ப முடியாது. சிலந்தி வலையில் சிக்கிய ஈயின் கதியேயாகும். நற்பண்பு நாட்டுவதற்குப் பல நாட்களாகும்; கெடுப்பது மிக எளிது. சூதாட்டம் பரவியிருப்பதைப் பாருங்கள். கட்குடியும் சாராயக் குடியும் வெகு எளிதில் பரவிவிடும். அரசாங்கம் நிதி திரட்டும் முறை மக்களின் பண்பாட்டை வெகு சீக்கிரம் அழித்துவிடும்.

ஒரு முக்கிய அறிவிப்பு

விலைவாசிகள் எல்லாமே நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டு போவது போல் பத்திரிகைக் காகிதத்தின் விலையும் அச்சிடும் இதர சாதனங்களின் விலைகளும் விஷம்போல் ஏறிக்கொண்டே போகின்றன. இந்நிலையில் பத்திரிகைகளின் விலைகளை அதிகரிப்பது ஒன்றே வழி என்று எண்ணி வந்த காலத்தில் மத்திய அரசினரின் எக்ஸைஸ் வரி வேறு புதிய பெரிய பாரமாகப் பத்திரிகை நிறுவனங்களின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இ. ஈ. என். எஸ். ஸ்தாபனத்தின் தென் பிராந்தியக் கிளை முடிவு செய்தபடி எல்லாப் பத்திரிகைகளின் விலையும் நவம்பர் 15ந் தேதி முதல் ஐந்து பைசாவும் அதற்கு அதிகமாகவும் உயர்த்தப்படுகிறது.


இதையொட்டி வருகிற 21–11–71 இதழ் முதல் கல்கி பத்திரிகையின் தனிப் பிரதி விலையை 45 காசு ஆக உயர்த்தியுள்ளோம். தவிர்க்க வொண்ணாத சந்தர்ப்ப நெருக்கடியில் இவ்விதம் விலையை உயர்த்த நேர்ந்திருப்பதை வாசகர்கள் அநுதாபத்துடன் புரிந்துகொண்டு தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டுகிறோம். கல்கி சந்தாவும் கீழ்க்கண்டபடி மாற்றப்பட்டுள்ளது.


	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23 - 00	ரூ. 11 - 50
வெளிநாடு	ரூ. 50 - 00	ரூ. 25 - 00
இலங்கை	ரூ. 23 - 00	ரூ. 11 - 50

(இலங்கை நாணய மதிப்புப்படி)

மானேஜர் : கல்கி, சென்னை - 31

உறங்காதீர் ஊரைக் காக்கும் தமிழர்களே!







யாராண்டால் என்னவென்று அயர்ந்துறங்கும் மக்களிடை
சாராய வல்லரக்கன் ஏறினன் ராஜபீடம்
வள்ளுவர் வாக்கியம் காற்றிலே பறந்தது
சோற்றுக்குத் திண்டாட்டம் வயிற்றுக்குக் கஞ்சியில்லை
எழுந்தது கொண்டாட்டம் சாராயக் கடைகளிலே
போற்றவோ தமிழ்நாட்டரசை சாராய சகாப்தம் ஸ்தாபித்த
மாதர்கள் மானத்துக்கும் ஊரினமைதிக்கும் [ஆட்சியை?
திமை இயற்றினர் தெளிவிலா மதியினர்
மது விலக்கைத் தள்ளி விட்டு மது விலங்கு
போட்டு விட்டார் வரம் பெற்ற முதல்வர்
எதுவாயின் என்னவென்றுறங்காதீர்
மதுசூதனன் எச்சரிக்கை இதுவாகும்
விரும்பாதன நடக்கும் ஈசன் சோதனைகள்
இரும்பு பண்டமாவது செம்மட்டியினடியால்
கரும்பை வெல்லமாக்குவது ஆலையில் கசக்கியே
கல்மேலடித்தே துணியை வெளுப்பான் வண்ணான்
பல்வேறு வேதனை ஆண்டவன் சோதனையே
கருணைக் கடவுளினருளைப் பெற்று
எய்துவோம் விலங்கினின்று விமோசனம்
மதுசூதனன் பணிந்துரை மனதிற்கொண்டு
எழுமின் ஊரைக் காக்கும் தமிழ் மக்களே
கொள்ளைக் காரனுக்குக் கதவைத் திறந்து
உள்ளே வாங்கோ என்றழைப்பது போல்
கள்ளையும் சரக்கையும் வாய்க்குள் செலுத்தாதீர்
விரித்த மது வலையில் விழாதீர்
என்னன்புக்குரிய தென்னக மக்களே!
செல்லும் வழியில் கடை யிருந்தாலும்
நல்ல விளக்குகள் கண்ணைக் கவர்ந்தாலும்
கிட்ட நெருங்காதே கெட்ட கள்ளண்டை
என்னன்புக்குரிய தென்னக மகனே!
எல்லாரும் வந்திருக்க நீ மட்டும் வாராய்
குடிக்கத் தடையில்லை முன்னே போல்
பிடிக்காசை மிச்சம் செய்யவாவெனக் கின்னுவான்
கடைக்காரன் பேச்சுக்கு ஏமாற வேண்டாம்
என் அன்புக்குரிய தென்னக மகனே!

மதுசூதனன்

பூஜை

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஒவ்வொரு குடும்பத்திலும் ஈச்வர பூஜை நடக்க வேண்டும்.

சௌகரியப்பட்டவர்கள் விஸ்தாரமான பூஜைகளை எடுத்துக் கொண்டு செய்யலாம். சௌகரியமில்லாவிடில் சுருக்கமாகச் செய்தாலும் போதும். பத்தே நிமிஷம் போதும். ஆபீஸுக்குப் போகிறவர்களும் இப்படிச் சுருக்கமாகவாவது பூஜை என்று ஒன்றைச் செய்ய வேண்டும். எல்லாக் குடும்பத்திலும் ஒரு மணி சத்தம் கேட்க வேண்டும்.

ஈச்வரன், அம்பாள், விஷ்ணு, விநாயகர், ஸூரியன் இந்த ஐந்து பேருக்கும் மூர்த்தி வைத்துப் பூஜை செய்ய வேண்டும். இதற்குப் பஞ்சாயதன பூஜை என்று பெயர். அங்கங்களோடு கூடிய விக்கிரகங்களாக இல்லாமல், இந்த ஐந்தையும் இயற்கையாகவே கிடைக்கும் ஐந்து வஸ்துக்களில் ஆவாகனம் செய்து பூஜை செய்வது ஒரு சம்பிரதாயம்.

ஈச்வரனுக்குரிய பாண லிங்கம் நர்மதை நதியில் ஓங்கார குண்டத்தில் கிடைக்கிறது. அம்பிகையின் ஸ்வரூபமான ஸ்வர்ணமுகி சிலா என்ற கல் ஆந்திராவில் ஸ்வர்ணமுகியாற்றில் கிடைக்கிறது. அது தங்க ரேக் ஓடிய கல். விஷ்ணுவின் வடிவமான ஸாலக்கிராமம் நேபாளத்தில் கண்டகி நதியில் அகப்படுகிறது. ஸூரியனுக்குரிய ஸ்படிகம் தஞ்சாவூரில் வல்லத்துக்குப் பக்கத்தில் கிடைக்கிறது. விநாயகருக்கு உருவமான சோணபத்ரக் கல், கங்கையிலே கலக்கிற சோணபத்ர நதியில் அகப்படுகிறது. ஆக, இந்த ஐந்தையும் ஓரிடத்தில் வைத்தால் இந்தத் தேசம் முழுவதையுமே வைத்தது போலாகும்.

இந்த ஐந்தில் ஒன்றுக்காவது கண், மூக்கு, காது இல்லை. எனவே, இடுக்குகளில் அழுக்கேறுவது கிடையாது. அபிஷேகம் செய்து துடைக்க நாழியே ஆகாது. எல்லாம் சின்னச் சின்ன கற்கள். எல்லாமாகக் கொஞ்சம் இடத்தைத்தான் அடைத்துக் கொள்ளும்.

பெரிய பூஜா மண்டபம்கூடத் தேவை இல்லை. ஒரு சின்ன சம்புடத்தில் போட்டு வைத்துவிடலாம். ஆவாஹனம் பண்ணி, நாலு உத்தரிணி தீர்த்தத்தில் அபிஷேகம் பண்ணி, சந்தனம் குங்குமம் அக்ஷதை வைத்து, அர்ச்சனை செய்து, நைவேத்தியம் காட்டலாம்.

வெளியூருக்குப் போகும்போதுகூடப் பத்து நிமிஷம் இப்படிப் பூஜை செய்வதில் சிரமமில்லை. வெளியூரில் அர்ச்சனைக்குப் பூ கிடைக்குமா என்று கவலைப்பட வேண்டாம். வில்வத்தையும் துளசியையும் உலர்த்தி வைத்துக் கையில் எடுத்துப் போனால் ஈச்வரனையும் விஷ்ணுவையும் அதனாலே அர்ச்சிக்கலாம்; மற்றவர்களுக்கு அக்ஷதையால் அர்ச்சனை செய்யலாம். நைவேத்தியத்துக்குச் சுத்தமான அன்னம் வெளியூர்களில் கிடைக்குமா என அலட்டிக் கொள்ள வேண்டாம். காய்ந்த திராக்ஷைப் பழத்தைக் கையோடு வைத்திருந்து நிவேதித்து விடலாம்.

ஐந்து மூர்த்திகள், துளசி — வில்வ பத்திரங்கள், திராக்ஷை, அக்ஷதை இந்த எல்லாவற்றையுமே கையடக்கமாக ஒரே சம்புடத்தில் போட்டு வைத்துக்கொண்டு விடலாம்.

பூஜை என்பதற்காகப் பெரிய சிரமம் எதுவும் தேவையில்லை; மனசு இருந்தால் வெகு சுலபத்தில் எல்லாரும் எங்கேயிருந்தாலும் பூஜை செய்யலாம் என்பதற்காக இவ்வளவு சொன்னேன்.

வீட்டிலே இருந்தால் 'மகா நைவேத்தியம்' எனப்படும் அன்னத்தை ஸ்வாமிக்குக் காட்ட வேண்டியது அவசியம்.

நாம் அநுபவிப்பதற்காகப் பிரபஞ்சம் முழுவதையும் ஈச்வரன் நமக்கென விட்டிருக்கிறார். பலவிதமான போக்கிய வஸ்துக்களை வெளியிலே உண்டாக்கி, அவற்றை அநுபவிக்கிற இந்திரியங்களை நம்மிடம் வைத்திருக்கிறார். எனவே, நாம் அநுபவிப்பதை எல்லாம் அவருக்குச் சமர்ப்பித்துவிட்டே உபயோகித்துக் கொள்ள வேண்டும். உண்மையில் அவருக்கே என்று அன்னத்தைக் கொடுத்து விடுகிறோம்? வெறுமே அவரிடம் காட்டுகிறோம்; பிறகு நாம்தான் புசிக்கிறோம்.

நைவேத்தியம் செய்தால் ஸ்வாமி எங்கே சாப்பிடுகிறார் என்று சிலர் கேலியாகக் கேட்கிறார்கள். நிவேதனம் என்றால் ஸ்வாமியைச் சாப்பிடச் செய்வது என்று அர்த்தமே இல்லை. 'நிவேதயாமி' என்றால், 'அறிவிக்கிறேன்' என்றுதான் அர்த்தமே தவிர 'உண்பிக்கிறேன்' என்று அர்த்தமல்ல. 'அப்பனே, இந்த வேளைக்கு உன் கருணையில் நீ இந்த அன்னத்தைக் கொடுத்திருக்கிறாய்' என்று அவனுக்குத் தெரிவித்துவிட்டு அவனுடைய நினைவோடு உண்ண வேண்டும். அவன் அருள் இல்லாவிட்டால் இந்த அரிசி எப்படி விளையும்? ஸயன்ஸ் நிபுணர் அரிசி வகைகளை ஆராய்ந்து பெரிய பெரிய புஸ்தகங்கள் எழுதலாம்; ஆனால் அவரால் ஒரு மணி அரிசியைச் செய்ய முடியுமா? பரமேச்வரனால் கொடுக்கப்பட்டதை அவனுக்குக் காட்டாமலே நாம் அநுபவித்தால் திருடர்களாவோம்.

எங்கும் இருக்கும் அவன், நாம் இருக்கச் சொல்லும் இடத்திலும் நாம் சிரசிக்கும்படி வந்து நிற்பான். கல், மண், செம்பு முதலிய எந்த பிம்பத்தில் வைத்துக் கூப்பிட்டாலும் வருவான். அப்படிப்பட்ட யோக்கியதையும், கருணையும் அவனுக்கு நிச்சயமாக இருக்கிறது. இல்லை என்றால் அப்படிப்பட்ட ஸ்வாமி நமக்கு வேண்டவே வேண்டாம்.

அவனைப் பூஜை என்று வைத்து ஒவ்வொரு குடும்பத்திலும் கூப்பிட்டு, அவனால் கொடுக்கப்பட்டதை உபயோகிக்கிறோம் என்று அவனிடம் அறிவிக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் ஈச்வரப் பிரசாதமாக அர்ப்பிக்கத் தக்கதைத் தவிர வேறெதையுமே நாம் உபயோகிக்கக்கூடாது என்ற பக்குவம் நாளடைவில் உண்டாகும்; நல்லவர்களாவோம்!

6. சந்நியாசிக் கணவர்; கன்னித் தாயார்!

. . . . அன்னையே!
பின்னையும் கன்னி என மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே!
— தாயுமானவர்

சாரதாமணிக்கு நீராடித் திளைப்பதில் தனித்ததோர் ஆனந்தம்! ஜயராம் பாடியில் இருந்தவரை ஆமோதர் நதியில் ஆர அமர முழுகி ஆனந்திப்பாள். ஆமோதர் ஆற்றை அவள் 'கங்கை' 'கங்கை' என்றே கூறுவாள்.

இப்போது காமார்புகுரில் ஹால்தார் புகுர் ஏரியில் விந்தை நங்கையர் எண்மருடன் நீராடும்போது நீந்தவும் கற்றுக் கொண்டாள்.

சுத்தமாக ஸ்நானம் செய்து, ஈர முடியைப் பிழிந்து நுனியில் மட்டும் முடிச்சிட்டு, தண்புனலாடியதற்கு மாற்றாகக் காலைச் சூரியனின் கதகதப்பில் திளைத்துக் கொண்டு, கண்ணுடி நெற்றியில் சிந்தூரக் குங்குமத்தோடும், இடையிடையில் குடத்தோடும், திவ்விய மங்கையர் எட்டுப்பேர் புடைசூழ சாரதை வீடு திரும்பிய காட்சி என்ன அழகு?



'ஒரகத்தி' என்ற பதம் பண்டைய நாட்களில் சகோதரர்கள் தங்கள் மனைவியரோடும் குழந்தைகளோடும் ஒரே அகத்தில் இணைந்திருந்த பந்துத்வத்தைக் குறிப்பதாகும். சாரதை 'மதனியோ, மாதாவோ' என்றபடி ஒரகத்திக்கு அடங்கியும், அவளுக்கு உதவியாகவும் சிட்டுப் போலக் காரியங்களைச் செய்வாள். அப்போது சாரதையின் கணவர், மாமியார் இருவருமே காமார்புகுரில் இல்லை. எனினும் பெண்ணாகப் பிறந்தவர்களுக்குப் புக்ககம் என்ற ஒன்றிடம் பிறந்தகத்தைப் போலவே பிரியத்தை வைக்கப் பழக்குவது பாரதப் பண்பு. இதன்படியே சியாமசுந்தரி தேவி, சாரதாவைக் காமார்புகுரில் மைத்துனர் ராமேசுவரரின் அகத்துக்கு அனுப்பி வைத்திருந்தாள். புக்ககத்தினரை அரவணைத்து, வெகு நல்ல பெயர் வாங்கிக் கொண்டாள் சாரு.


சாரதையைவிடப் பத்து வயது சிறியவள் ராமேசுவரரின் பெண் லக்ஷ்மி. 'சித்தி சித்தி' என்று லக்ஷ்மி தன்னையே சுற்றி வருமாறு செய்துவிட்டாள் சாரு.

இப்படிச் சில காலம் புக்ககத்திலிருந்துவிட்டு ஜயராம்பாடிக்குத் திரும்பினாள். அங்கு சில காலம் இருந்துவிட்டு மீளவும் காமார்புகுருக்கு வந்தாள். புகுந்தவிடம், பிறந்தவிடம் இரண்டுக்கும் பொலிவூட்டி வந்தாள்.

பிறந்த இடத்தில் அவளால் பொலிவு இருந்தாலும் வேறு விதத்தில் நலிவும் ஏற்பட்டு வந்தது. சியாம சுந்தரிக்குப் பல குழந்தைகள் பிறந்தன. அவற்றில் சில குழந்தைகள் குழிக்குப் போயின.

புத்திர சோகத்தில் அம்மா கதறிப் புலம்பியது சாரதையின் மலர் மனத்தை வாட்டி எடுத்தது. சியாமா பெற்றுப் போடுவாளே தவிர அக் குழந்தைகளை எடுத்து வளர்த்தது முழுவதும் சாரு தான். பட்டு மேனியும், பவள உதடுகளும், வண்டுக் கண்களுமாக விளையாடிய சின்ன உருவங்கள் மண்ணிலே மட்கியது சாரதையின் அடிவயிற்றில் சுரீலென்று எரிந்தது.

அடிவயிற்றில் கண்ட நோவுக்கு மேலாகக் கோமள சாரதையின் நுண்ணிய இதயத்தின் அடியிலும் ஒரு பலமான அடி விழுந்து நோவு உண்டாக்கியது. அவளது கணவரைப் பற்றி ஊரார் பேசிக் கொண்ட பேச்சுக்கள் அவளைத் தாக்கித் துன்புறுத்தின. "சாரு ஆம்படையானுக்குப் பைத்தியம் முத்திப் போச்சு தெரியுமோ? அம்பாளுக்காக அரைச்ச சந்தனத்தைத் தானே பூசிக்கிறாராம். அம்பாளுக்கு நைவேத்தியம் பண்ணறதுக்கு முன்னாடியே பாயசத்தைத் தான் குடிச்சுட்டு அப்புறம் விக்கிரகத்தின் வாயிலே கிண்ணத்தைக் கொண்டு போய் வைக்கிறாராம். சியாமா மாமியோட தங்க மனசுக்கு இப்படியா ஒரு மாப்பிள்ளை வாய்க்கணும்? சமர்த்துக் கண்ணு சாருவுக்கு இப்படியா ஒரு வெறி ஆம்படையான் வாய்க்கணும்?" என்று ஊரிலே பேசியது சாரதையை உலுக்கியது.



அந்த ஊரிலே பல பெண்களுக்குக் கலியாணமாயிற்று. அந்தக் கலியாணங்களுக்குச் சாரு சென்றால் நூறு நூறு கண்கள் தன்னைப் பரிதாபத்துடன் மொய்ப்பதை உணருவாள். அந்தப் பரிதாபமே அவளுக்குப் பெரிய தாபமாக இருந்தது. சியாம சுந்தரியின் பெருமூச்சுக்கள் அந்தத் தாபத்தைத் தூண்டி விடும் காற்றாயின.

ராமசந்திரர் மனத்தில் என்ன இருந்ததோ, பகவானே அறிவார். எப்போதும்போல் அமைதியாகவே இருந்தார்.

தராசில் ஒரு தட்டு கீழே போகும்போது இன்னொரு தட்டில் பளுவை வைத்தால் அது மீண்டும் சம மட்டத்துக்கு எழும்புகிறது. இப்படியே மனச் சுமையை லேசாக்கிக் கொள்ள உழைப்புச் சுமையை அதிகமாக்கிக்கொண்டாள் சாரதாமணி.

பாலப் பருவத்தில் கால பாசத்துக்குத் தப்பிய தம்பி தங்கைகளுக்குப் பல் தேய்த்துவிட்டு, ஸ்நானம் செய்வித்து, உணவூட்டி, அவர்களது உடைகளைத் தோய்த்து — இப்படிப் பம்பரமாகச் சுற்றிச் சுற்றி உழைத்தாள். காதம்பினி என்ற தங்கையும், பிரஸன்ன குமார், உமேஷ்சந்திரன், காளிகுமார், வரதாப்பிரஸாத், அபயசரண் என்ற தம்பிகளும் ஆசை அக்கா சாருவை அனவரதமும் எதிர்பார்த்தார்கள். யந்திரமாக மட்டும் உழைக்காமல் மனம் பெருக்கும் அன்பின் ஈரத்தையும் பிழிந்து பணி செய்தாள் சாரதை.

இப்படியும் ஒரு சாதாரண மானுடப் பெண்ணால் உழைக்க முடியுமா என்று சியாமசுந்தரிக்கு நம்பவே முடியவில்லை.

''என் கண்ணே, நீ யாருன்னே தெரியல்லேயேடி அம்மா! உன்னை நான் புரிஞ்சுகப்பேனா, சொல்லு ராஜாத்தி'' என்று ஒரு நாள் தன் பெண்ணைப் பற்றிய அற்புத உணர்வுடன் கேட்டாள்.

பெற்ற தாயிடம் கற்ற வித்தை பலிக்காது என்பார்களே! சாரதைக்குக் 'குளிர்' கண்டது — அம்மா தன் ரகசியத்தைத் துப்புத் துலக்கி விடுவாளோ?

சட்டென்று அதை மறைக்கு முகமாக ''ஆமாம், 'உனக்கு என்னைப் புகழறது தவிர வேறு என்ன வேலை? நான் யாருன்னு என்ன கேள்வி வேண்டிக் கிடந்தது? நான் யாரு? யாரா இருக்க முடியும்? எனக்கு என்ன அம்பாளாட்டம் நாலு கை முளைச்சிருக்கா என்ன? அப்படியே நான் அம்பாளாவே யிருந்தாலும் உன்னைத் தேடிண்டுதான் வந்து பிறக்கணுமா என்ன?'' என்றாள்.

மறைத்துப் பேச வேண்டும் என்று நினைத்து, ரகசியத்தை மேலும் அம்பலமாக்கி விட்டாள்.

''அதென்னவோ, தேடிண்டு வந்திருக்கியே'' என்று தாரை தாரையாகக் கண்ணீர் வடித்துக் கூறினாள் சியாமா. ''இந்த ஜன்மாவிலே நான் இத்தனை பாடு பட்டதற்கு, இனிமே எனக்கு ஜன்மாவே வேண்டாம்னுதான் சொல்லணும். ஆனா ஒவ்வொரு ஜன்மாவிலேயும் நீ என் வயிற்றில் பிறப்பாயேயானால் எத்தனை ஜன்மாவும் எடுப்பேன்'' என்று திணறினாள்.

சாரதை இந்த மண்ணுலகத்துக்கும், தன்னுடைய மணித்வீபத்துக்கும் இடையில் அவதிப்பட்டாள், அந்த ஒரு நொடிப் பொழுதிலே! இரண்டு உலகத்திடையும் சமநிலை காணாமல் நிர்தாட்சிண்யமாகப் பேசினாள்:

''என்ன சொன்னே! என்னை மறுபடி வேறே கீழே இழுத்துண்டு வரப் போறயா? நான் திரும்பத் திரும்ப வரணும், நீ பெற்றுப் போடற குஞ்சு குளுவான்களுக்கு ஊழியம் செய்யணும் — அப்படித்தானே!'' என்று உறுமினாள்.

சாரு அப்படி உறுமியது சியாமாவுக்கு அதிசயத்திலும் அதிசயமாக இருந்தது. அவளையே உற்றுப் பார்த்தாள். சாருவின் அன்புப் பணி அவளை அன்னைத் தெய்வமாகக் காட்டிக் கொடுத்தது எனில், இப்போது அவள் அன்னைத் தெய்வத்தை மறைப்பதற்காக சிம்ம கர்ஜனை செய்தபோது அவளில் சிம்மவாஹினியையே கண்டாள் சியாமை.

''ஆமாம், மகளே! மறுபடி நானும் பிறக்கணும், நீயும் எனக்குப் பெண்ணாகப் பிறக்கணும்'' என்றாள் — அம்பாளிடம் வேண்டிக் கொள்ளும் குரலில்.

சாரதை அழுக்கு மூட்டையையும், தோய்க்கும் தடியையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்கு விரைந்தாள்.

துள்ளிக் குதித்து விளையாடிய நாட்கள் தீர்ந்தன.

சாரதாமணியின் பால லீலைகளிலிருந்து விடைபெறும்போது நமக்கு நெஞ்சு சிறிது கனக்கத்தான் செய்கிறது. கண்ணபெருமான் பெரியவரான பின்புதான் ருக்மிணி, சத்தியபாமாவை மணந்து அன்பைப் பரப்பினார், பாண்டவர்களுடன் கூடிக் களித்து இன்பம் பரப்பினார், பகவத் கீதையை உபதேசித்து ஞானம் பரப்பினார். ஆயினும் குட்டிக் கிருஷ்ணனின் லீலைகளிலிருந்து விடைபெற்று பிருந்தாவனத்திலிருந்து மதுராபுரிக்கு ''ஸ்ரீமத் பாகவதம்'' தாண்டு

கையில் ஏதுஞ்சு சிறிது கனக்கத்தான் செய்யும். பெரிய சாரதாமணி தேவி எத்தனையோ அரும் செயல்களைச் செய்து அன்பைப் பரப்பியது வாஸ்தவம். இருந்தாலும் குழந்தை சாருவின் மென்மையும் மதுரமும் தூய்மையும் அலாதியானவைதாம்!

குழந்தை தேகம் போயிற்று. இப்போது சாரதாமணி பதினாறு வயசுப் பருவ மங்கையானாள்.

ஆனால் — இங்குதான் அவதார ரகசியம் இருக்கிறது — பருவத்தின் அரிப்பு ஏதுமே அவளுக்கு உண்டாகவில்லை.

இனப் பெருக்கம் என்பதே இயற்கையின் முதற்பெரும் நியதி. தாவரமாயினும், கிருமியாயினும், மிருகமாயினும் எதுவுமே தன் இனத்தைப் பெருக்கிக் கொள்ளவே துடிக்கிறது. அதனால்தான் இந்த மாயா லோகம் மாயாமல் நடந்து வருகிறது. இதற்கு அடிப்படையாகவே சரீர இன்பத்தை மானுட மனத்துக்குள் விதைத்திருக்கிறாள் மகா மாயை.

இனப் பெருக்கத்தில் மனம் வைக்காமல் ஆதி மூலத்திலேயே சில வியக்திகள் மீண்டும் ஒடுங்குவதற்கும் பராசக்தி அருள் பாலிக்கிறாள். இவர்கள் பௌதிகமாகக் குழந்தைகளைப் பெறுவதில்லை என்பதோடு, தாங்கள் பெறாத பல குழந்தைகளிடம் கருணை கொண்டு தங்களைப் போலவே அவர்களும் பிறப்பு இறப்பிலிருந்து விடுபட வழி காட்டுகிறார்கள்.

ஒரு ஜன்மாவில் இந்திரிய நிக்கிரகத்தை நீண்ட காலம் பயின்றும் முக்தி நிலையைப் பெறாத ஒரு சாதகர் மீளவும் ஜன்மம் எடுக்கும்போது, அவரிடம் பல இயற்கை வேகங்கள் பிறப்பிலிருந்தே சமனம் அடைந்திருக்கும். கீதை கூறும் இவ்வித யோகப் பிரஷ்டர்கள் மறு ஜன்மாவில் தங்களது சாதனையை விட்ட இடத்திலிருந்து தொடங்குவர்.

யோகப் பிரஷ்டர்களைத் தவிர, பகவானே உருவெடுத்து வந்து பிறக்கும் அவதார புருஷர்களுக்கும், உலகை நல்வழிப் படுத்துவதற்காக பகவான் அனுப்பி வைக்கும் தூதர்களுக்கும் பிரகிருதி வேகங்கள் தொடக்கத்திலிருந்தே இரா.

சாரதாமணிக்குத் தேக இச்சை அடியோடு இல்லை.

ஆயினும் ஒரு விந்தை! அம்மாவாக வேண்டும் என்ற ஆசை மட்டும் அவளுள் கிளர்ந்தது. சிறிய பொறி மகா ஜோதியாக வளருவது போல் இந்த ஆசை நாளா வட்டத்தில் கொழுந்து விட்டெரியவும் தொடங்கியது.

'அம்மா அம்மா' என்று அழைக்கும் இளம் குரலுக்காக அவாவியது சாரதையின் உள்ளம்.

அவள் குழந்தையாக இருக்கும் போதே அம்மா விளையாட்டு விளையாடியவள். குழந்தைப் பருவத்தைத் தாண்டியவுடனேயே அம்மாப் பருவத்துக்கு ஆர்வம் கொண்டுவிட்டாள்.

சரீர போகம் கசந்தது அவளுக்கு; ஆனால் புத்திர சம்பத்தை மட்டும் எண்ணும்போதே இனித்தது.

இது எப்படிச் சாத்தியம்?

சாதனையின் முடிவாக எய்தப்படுவது எதுவோ அதுவே 'சாத்தியம்' எனப்படும். பற்பல சாதனைகளைச் செய்த கதாதரர்தான் சாரதாமணியின் அற்புத ஆசையையும் சாத்தியமாக்கப் போகிறார்!

சாரதாமணி கணவனைக் கண்டிராத இந்த ஏழு வருஷ இடைக் காலத்தில் கதாதரரை அம்பாள் படுத்தி வைத்த பாட்டைச் சொல்லி முடியாது; அவருக்கு அவள் அள்ளி அளித்த ஆனந்தத்தையும் அளவிட முடியாது. நானாவிதமான சாதனை சமுத்திரங்களின் அடிவரை கதாதரரை முக்கி முக்கி எடுத்து, அந்த ஆழத்திலிருந்த முத்துக்களைச் சரம் சரமாக அவருக்கு அணிவித்து அலங்கரித்தாள் அவருடைய மகா பெரிய அம்மா.

அந்த அம்மா, தான் பவதாரிணி என்ற உருவத்தில் மட்டுமில்லை என்பதை அவருக்கு உணர்த்தினாள். அத்தனை தெய்வ வடிவங்களாகவும் இருப்பது ஒரே மகா சக்தி என்பதை கதாதரர் உணர்ந்து, எல்லா தெய்வ மூர்த்திகளையும் தரிசித்து, சம்பாஷித்து, அநுபவித்து ஆனந்திக்குமாறு செய்தாள். ஹிந்து சமயத்தின் நீண்ட சரித்திரத்தில் கதாதரரைப் போல் சகல தெய்வங்களையும் ஒன்றாக வழிபட்ட மகான்களை அரிதாகவே காண்கிறோம்.

அதுமட்டுமல்ல, பகவானுக்குத் தாசனாக இருந்து அவனது மேன்மையை அநுபவிக்கலாம்; தோழனாக இருந்து அவனது நேசத்தை அநுபவிக்கலாம்; காமினியாக இருந்து அவனது பிரேமையை அநுபவிக்கலாம்; தாயாக இருந்து அவனது எளிமையை அநுபவிக்கலாம்; குழந்தையாக இருந்து அவனது தாய்மையை அநுபவிக்கலாம்; அவனாகவே ஆகி அவனது சாந்தத்தை அநுபவிக்கலாம். ஒவ்வொரு மெய்யடியார்



இவற்றில் ஒவ்வொரு வகையில் பக்தி செலுத்திப் பரமனை அடைந்ததாகக் காண்கிறோம். கதாதரரோ எனில் தாம் ஒருவரே இத்தனை பாவங்களிலும் பகவானை அநுபவித்தார்.

இதில் அவருக்கு முக்கியமான குருவாக இருந்தவள் பைரவி பிராம்மணி என்ற யோகேசுவரி.

தெய்வத்தைப் பெண் வடிவில் அம்பாளாக வழிபட்ட கதாதரர், பெண்ணாகப் பிறந்த பைரவி பிராம்மணியிடமே தந்திர — யோக சாதனைகளைப் பயின்றது குறிப்பிடத் தக்கது. அதோடு, அவர் தாமே முழுக்க முழுக்கப் பெண்ணின் பாவத்தில் தோய்ந்து அம்பிகைக்குச் சேடியாக இருந்து வழிபட்டார்; ராதையாகிக் கண்ணனை வழிபட்டார். அவர் பெண்ணுக்குத் தந்த பெருமையின் சிகரமாகவே சாரதாமணி பிற்காலத்தில் மகோன்னத அன்னையாக எழுச்சி கொண்டாள்.

பைரவி பிராம்மணிக்குக் கதாதரரிடம் ஒருபுறம் தாயன்பு; மறுபுறம் பகவானிடம் வைப்பது போன்ற பக்தி. அது ராமசந்திரனிடம் கௌசல்யாதேவி வைத்த அன்பு; கிருஷ்ணனிடம் யசோதை வைத்த அன்பு.

அந்த ராமசந்திரனும், கிருஷ்ண மூர்த்தியும் சேர்ந்த ராமகிருஷ்ணரே கதாதரர் என்று பைரவி பிராம்மணி ஒரு மகத்தான பண்டித சதஸில் பிரகடனம் செய்தாள்.

தக்ஷிணேசுவர ஆலயத்தை எழுப்பிய ராணி ராஸமணியின் மாப்பிள்ளையும், அந்த ஆலயத்தை நிர்வகித்து வந்தவருமான மதுரா நாதரின் அழைப்பை மறுக்க முடியாமலே அந்த வித்வத் சதஸிலே பண்டிதோத்தமர்கள் குழுமியிருந்தார்கள். அவர்களுக்கு முதலில் கதாதரரைப் பற்றி உயர்ந்த அபிப்பிராயம் ஏதும் இருக்கவில்லை. அவரை வெற்று ஆவேசத்துக்கு ஆளாகும் பலவீனப் பிரகிருதி என்றே அவர்களில் பலரும் எண்ணினர். ஆனால் இப்போது கதாதரரின் பரவச பாவங்களைக் கண்ணுக்கு நேராகக் கண்டதிலும், பைரவி பிராம்மணி காட்டிய சாஸ்திரப் பிரமாணங்களைக் கேட்டதிலும் அவர்களுடைய பழைய அபிப்பிராயம் பறந்தோடிற்று! இவர் ஓர் அவதார புருஷரே எனத் தெளிந்தனர்.

('ராமனாகவும் கிருஷ்ணனாகவும் வந்தவனே இவர்' என்று பைரவி பிராம்மணி நிலைநாட்டி விட்டாள். இனி நம் கதா நாயகரை கதாதரர் என்று கூறாமல் 'ராமகிருஷ்ணர்' என்று கூறுவதே பொருத்தமன்றோ?)

ராமகிருஷ்ணர் நிஷ்கபடக் குழந்தையாகச் சிரித்தார். ''அவதாரமோ இல்லையோ — அது கிடக்கட்டும்: மகா பெரியவாளான நீங்களெல்லாம் நான் பைத்தியம் இல்லேன்னு ஒப்புக்கறேளோன்னோ? அந்த மட்டும் பேஷ், பேஷ்'' என்று சொன்னார்.

அவதார புருஷர் என்பதாகப் பகவானின் பிரதியாகச் சிலர்தான் வருவார்கள். ஆனால் அவதாரத்துக்குக் காரணமான ஈசுவரனுக்கும் மேம்பட்ட சச்சிதானந்த பரப்பிரம்மமாக அனைவருமே ஆக முடியும். உண்மையில் நாம் காண்கிற அனைத்தும் பிரம்மம்தான். மாயையினால் நம்மை வேறாக நினைக்கிறோம். ஞான சாதனையால் மாயையை நீக்கிவிட்டால் பிரம்மமாகவே ஆகிவிடலாம் — இதுதான் வேதாந்தம். பகவானைப் பல பாவங்களில் அநுபவித்து பக்தி செய்ததன் எல்லை நிலமாக, தானே அவனாகிவிடுவதுதான் வேதாந்த சாதனை.

இந்த வேதாந்தத்தில் ராமகிருஷ்ணரைப் பயிற்றுவித்து, அவதார ராமகிருஷ்ணரை, பரப்பிரம்ம பரமஹம்ஸராக்குவதற்காக தக்ஷிணேசுவரத்துக்கு வந்து சேர்ந்தார் மகான் தோதாபுரி.

அவரே ராமகிருஷ்ணருக்கு சந்நியாசம் தந்தவர்.

குழந்தை சாரதை மாலையிட்டுத் தன்னை மனாளனுக்கிக் கொண்ட நினைப்பே இல்லாமல் ராமகிருஷ்ணர் சந்நியாச தீக்ஷை வாங்கிக்கொள்கிறார்!

மனைவியின் நினைவு இல்லாவிட்டாலும் தன்னைப் பெற்ற தாயின் நினைவு அவருக்குப் போகவில்லை. ஆதிசங்கரர், பட்டினத்தடிகள் போன்ற வைராக்கிய பர்வதங்களுக்கும் தாயன்பு மாறாமலே இருந்ததுபோல, ராமகிருஷ்ணருக்கும் அன்னையிடம் தனித்ததொரு பாசம் இருந்தது. தெய்வமாம் பவதாரிணி, குருவாகிய பைரவி பிராம்மணி, அன்னையாகிய சந்திரமணி, பத்தினி சாரதாமணி என்றிப்படிப் பெண்ணன்பின் பல சாயல்களிலேயே தமது அவதாரத்தை அலர்த்திக் காட்டியவர் ராமகிருஷ்ணர்.

ஜ்யேஷ்ட புத்திரன் ராமகுமாரர் மறைந்த துயரத்தை ஆறாத வடுவாகக் கொண்டிருந்தாள் சந்திரமணி. அவளது செல்ல கதாயி சந்நியாசியாகிவிட்டான் என்றால் அந்த வடு மீண்டும் பச்சைப் புண்ணாகிவிடும். இதை ராமகிருஷ்ணர் உணரத் தவற வில்லை.



தாம் சந்நியாசம் கொள்வது ரகசியமாகவே இருக்க வேண்டும் என குருவைக் கேட்டுக் கொண்டார். துரியாசிரமம் ஏற்ற பின்பும் தாம் காஷாயம் அணியாமல் சாதாரண வேட்டியைக் கச்சத்துடன் அணிய அநுமதி பெற்ருர்.

தோதாபுரி அநுமதிபூர்வமாகச் சிரித்தார். ''நீ அம்மா என்பவளைக் காரணம் காட்டி இப்படிக் கேட்கிருய். நான் இன்ெனரு காரணத்துக்காகவும் இதை வரவேற்கிறேன். உண்மையான சந்நியாசம் காஷாயத்திலும், முண்டனத்திலும் இல்லை; அது மனத்தில் இருப்பது. பக்கத்தில் பத்தினியை வைத்துக் கொண்டே சந்நியாசியாக இருப்பதுதான் சந்நியாசத்தின் உச்சநிலை. இந்த உச்ச நிலையை இந்த உலகுக்கு நீதான் பிரத்தியட்சமாக வாழ்ந்து காட்ட வேண்டும். நீ வெளி உலகம் அறியச் சந்நியாசியாகிவிட்டால், அதன்பின் வீட்டுக்குச் சென்று மனைவியுடன் இருந்து கொண்டே துறவை அநுஷ்டித்துக் காட்ட முடியாது. எனவே, இப்போதைக்குச் சிகை களைந்து, உபவீதம்நீக்கி, காஷாயம் புனைந்து, விரஜா ஹோமம் செய்து நீ சந்நியாச தீக்ஷை கொண்டாலும், இது நம்மோடு ரகசியமாக இருக்கட்டும். பிற்பாடு நீ கிருஹஸ்தனைப் போலவே வீட்டுக்குப் போ. அங்கு உன் புனிதத்தை நிலைநாட்டு'' என்ருர் தோதாபுரி.

சந்நியாச தீக்ஷை பெற்று மகா வாக்கியங்களைப் பெற்ற ராமகிருஷ்ணர், அந்த வாக்கியங்களின் பொருளான பரம்பொருளிலேயே இரண்டறக் கலந்து சமாதி நிலையை அடைந்தார். அந்த மகத்தான அத்வைத நிலையில் ஆறு மாதங்கள் அப்படியே உறைந்து கிடந்தார்.

அதன்பின் உலக சமய சரித்திரத்திலேயே கண்டிராத புனித தாம்பத்தியத்தை அவர் தொடங்குமுன், அவரை உலகம் முன்னேடியாகக் கொள்ளத்தக்க இன்ெனரு சாதனையிலும் அவரைத் தோய்த்து எடுத்தாள் அம்பிகை. அதாவது, ஹிந்து மதத்தினர் வழிபடும் சகல தெய்வங்களும் ஒரே பராசக்தியின் வடிவங்கள்தாம் என்று அவர் மூலம் உணர்த்தியது மட்டுமின்றி, ஹிந்து மதத்தைப் போலவே சகல மதங்களும் ஒரே மகாசக்தியின் சத்தியத்தைப் பற்பல கோணங்களில் காண்கிற அநுபவம்தான் என்பதையும் இந்த அருமைப் பிள்ளை மூலமே லோகத்துக்கு நிரூபித்துக் காட்டிஞள் தேவி. கிறிஸ்துவ மதம், இஸ்லாம் முதலியவற்



அவள்: நான் நிற்கிறேனே! நீங்க எழுந்து உதவி செய்யப்படாதா?

ஒருவர்: அம்மையே! இது ஒருத்தர் தனியா செய்யற உதவியில்லே. நாலுபேர் கூட்டா சேர்ந்து செய்ய வேண்டிய காரியம். அதனால்தான் யோசனை பண்ணிக்கிட்டு உட்கார்ந்திருக்கேன்.

றின் ஆசாரனைகளையும் அவர் வழுவறப் பின்பற்றி அவற்றின் மூலமும் ஆத்ம சாந்தி என்ற இலட்சியத்தைப் பிரத்தியட்சமாக அடைந்தார்.

அவர் சாந்த நிலையில் அழுந்திவிட்டால் உலகுக்கு பக்தி ஆவேசத்தை, புனித இல்லற வாழ்வை, எளிய உபதேசங்களை அளிப்பது யார்? எனவே, அவரை வியாதிப் பிண்டமாக்கிஞள் சர்வேசுவரி. குண்டலினியைக் கிளப்பிக் கொண்டு யோக சாதனை செய்ததால் அவரது வயிறு எரிந்து புண்ணுகிவிட்டது. அவரது ஜீரண சக்தி அடியோடு பாதிக்கப்பட்டது.

தக்ஷிணேசுவர ஆலய நிர்வாகி மதுராநாதர் ராஜ வைத்தியம் செய்தார். ஏதோ சிறிது பலன் இருந்தது. 'இடம் மாறி இருந்தால் நல்லது' என்ருர்கள்.

ராமகிருஷ்ணர் காமார்புகுருக்கு வந்து சேர்ந்தார்.

ஹ்ருதயரும் பைரவிப் பிராம்மணியும் உடன் வந்தனர்.

சாரதாமணியும் அங்கு வந்தாள்.

சந்நியாசிக் கணவரும், கன்னிமை குலையாமலே தாய்மையை விரும்பும் மனைவியும் மறுபடி சந்தித்தனர்!

ஏதுமறியா சாரதை தூய அன்பின் திரு உருவமாக நிற்க, மதுரபாவ சாதனைகளில் தேறிய பைரவி பிராம்மணியின் உள்ளத்திலோ அசூயையின் இருட்சாயல் விழுந்தது! (தொடரும்)


NEW! SUPER Surf
ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப்,
வேறெந்த சலவைப்
பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!
அமோகமான சலவைத் திறன் படைத்தது ஸூப்பர் ஸர்ஃப். கண்மறைவான அழுக்குகளையும் அகற்றிவிடும். காண்போர் பெருமைப்படும் கற்பனை கடந்த வெண்மை. கேட்பானேன், இந்தியாவின் தலைசிறந்த ரகம்: ஸூப்பர் ஸர்ஃப்!
ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

மௌனி எழுதாத ஜோக்குகள்..!

"ஹரே ராமா ஹரே கிருஷ்ணு" நாடகத்தைப் பார்த்துவிட்டு வந்ததன் விளைவாகச் சில ஜோக்குகள் தோன்றின. மௌனி எழுதாத இந்த ஜோக்குகள் பற்றி ஓர் எச்சரிக்கை: இந்த ஜோக்குகள் உங்களுக்குப் பிடித்திருந்தால் நாடகத்தைப் பார்க்காதீர்கள்! நீங்கள் ரசிக்கும்படி அது இராது. இந்த ஜோக்குகள் பிடிக்கவில்லை என்றால் என்னைக் கோபிக்காதீர்கள். அதற்குப் பதில் அவசியம் நாடகத்தைப் பாருங்கள். ரொம்ப ரொம்ப அனுபவிப்பீர்கள்!

"ஏண்டா, எதுக்குடா பழைய பத்திரிகைகளை யெல்லாம் எடுத்து வைச்சுக்கிட்டு அதிலே இருக்கிற ஜோக்குகளைக் காப்பி பண்ணிக்கிட்டிருக்கே!"

"பல்லே உடைத்துடுவேன், படவா! என்னடா பண்ணறே? நான் மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் அரங்கேற்றத் தேதியை நிச்சயம் பண்ணிட்டுப் புது நாடகம் எழுதிண்டிருக்கேன்; என்னவோ ஜோக்குகளை எழுதிண்டிருக்கிறதா இலேசா சொல்லிப்புட்டியே!"

* * *

"ஏன் சுவாமி, ஒரு குறிப்பிட்ட இக்கட்டான சிசுவேஷன்லே நாலு பேர் எப்படியெல்லாம் நடந்துக்கறா என்பதுதானே 'ஃபிளைட் 172' நாடகம்?"

"ஆமாம்."

"அது அமோக வெற்றி யடைஞ்சதால் தானே, 'ஹரே ராமா ஹரே கிருஷ்ணு' என்கிற நாடகம் அரங்கேறியிருக்கு. அதே பாணியில்?"

"ஆமாம்; இதுவும் நூறு நாடகத்துக்கு மேலே நடக்கலாம்."

"அப்படின்னு நாடகம் வெற்றிதானே?"

"நீ சொல்றது எப்படி இருக்கு தெரியுமா?"

"எப்படி?"

"ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்தது. ஆனால் நோயாளி செத்துவிட்டான் என்பார்களே..."

"அது மாதிரி?"

"அது மாதிரி இங்கே நாடகம் வெற்றி, ஆனால் நாடகக் கலை செத்துப் போயிடுத்து!"

* * *

"ஏண்டா, உனக்கு என்ன வயசு?"

"இருபத்தி நாலு!"

"அப்படின்னு, இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னாலே நான் லேடி மவுண்ட்பாட்டன் பக்கத்திலே ஃப்ரண்ட் ரோவிலே உட்கார்ந்துண்டு இதே மௌனி எழுதிய டிராமா ஒண்ணு பார்த்திண்டிருக்கேன்......"

"லேடி மவுண்ட்பாட்டனோடே சேர்ந்து உட்கார்ந்துண்டு....!"

"ஆமாம்; அப்போ லேடி மவுண்ட்பாட்டன் நாற்காலியிலே உட்கார முடியாமே துள்ளோ துள்ளோன்னு துள்ளறா!"

"பின்னே? மௌனியோட நகைச்சுவைன்னு சும்மாவா? ரசிக்காமல் இருக்க முடியுமா? ஸீட்டிலே நிலைகொள்ளாமல் குதிச்சிருப்பாள்!"

"அப்படித்தான் நானும் நினைச்சேன். அப்புறம் பார்த்தால் நாற்காலியிலே ஒரே மூட்டைப் பூச்சி!"

* * *

"ஏண்டா? உலகம் இன்னும் நாலு நாளிலே அழியப் போறதுன்னு வைச்சுக்கோ. அப்போ லோகத்திலே எல்லாரும் எப்படிடா நடந்துப்பா?"

"இதைத் தெரிஞ்சுக்கணும்னு நீ அவசியம் 'ஹரே ராமா ஹரே கிருஷ்ணு' நாடகம் பார்க்கணும்."

"அதிலே இது பற்றிச் சொல்றானா?"

"ஆமாம். நாடகத்தைப் பார்த்தால், நாலு நாளிலே உலகம் அழியப் போறதுன்னு நிச்சயம் ஆகிறச்சே ஜனங்கள் எப்படியெல்லாம் நடந்துக்க மாட்டான்னு நன்னு புரிஞ்சுடும். அப்போ உன் கேள்விக்கு விடை கிடைச்சுப் போயிடும் இல்லையா?"

* * *

"என்னங்க! சிவன் ஒசத்தியா, விஷ்ணு ஒசத்தியான்னு ஹரே ராமா ஹரே கிருஷ்ணு நாடகத்தில் சண்டை போட்டுக்கிட்டாங்களே இருவர்...?"

"ஆமாம், அதுக்கென்ன?"

"உண்மையிலே யார் ஒசத்தி?"

"சிவன்தான் ஒசத்தி. அதை நாடகாசிரியர் மௌனியே ஒத்துக்கிட்டிருக்காரே."

"ஒத்துக்கிட்டாரா? எப்போ?"

"பின்னே? நாடகத்தின் தலைப்பைப் பாரு! சிவன் பெயரை அதில் இழுத்து அவரைச் சங்கடப்படுத்தி யிருக்கிறாரா? சிவன்கிட்டே ரொம்ப மதிப்பு இருக்கிறதால்தானே அவரை விட்டு விட்டுத் தம் நாடகத்தின் தலைப்பிலே ராமனையும் கிருஷ்ணனையும் மட்டும் பிடிச்சுப் போட்டிருக்கார்?"

* * *

'ஹரே ராமா, ஹரே கிருஷ்ணு'வில் சிரிப்பு இருக்கிறது. நடிப்பு இருக்கிறது. டைரக்ஷன், ஸெட்டிங் எல்லாம் பிரமாதமாக, அமோகமாக இருக்கின்றன. இல்லாதது, நாடகம் ஒன்றுதான்!

— குட்டிகிருஷ்ணன்.









பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் எழுபத்தொன்று

'திருவயிறு உதித்த தேவர்'

செம்பியன்மா தேவியைப் பார்க்க வேண்டுமென்று சுந்தர சோழர் பல முறை சொல்லி அனுப்பிய பின்னர், அம்மூதாட்டி சக்கரவர்த்தியைக் காண்பதற்கு வந்தார். சக்கரவர்த்தி அவர்களும் செய்தி அறிந்து வாசற்படி வரையில் நடந்து சென்று காத்திருந்து வரவேற்று அழைத்துச் சென்றார். தம் பக்கத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

''அரசர்க்கரசே! அடுத்தடுத்துத் துயரமான செய்திகளைக் கேட்டு நொந்திருக்கும் என் உள்ளம் தாங்கள் உடல் நலம் பெற்றிருப்பதைப் பார்த்துத் திருப்தி அடைகிறது. இறைவன் அருளால் நெடுங்காலம் தாங்கள் சிரஞ்சீவியாக வாழ்ந்திருந்து இந்த உலகத்தைப் பரிபாலித்து வரவேண்டும்'' என்று முதிய பிராட்டியார் கூறினார்.

''அன்னையே! என் கால்கள் மீண்டும் நடக்கும் சக்தி பெற்றிருப்பதைக் குறிப்பிடுகிறீர்கள். அதைப் பற்றி எனக்கும் திருப்திதான்! இந்தச் சோழ நாடெல்லாம் போற்றி வணங்கும் தாங்கள் வரும்போது எழுந்து வரவேற்க முடியாதவனாயிருந்தேன். ஊமையும் செவிடுமான ஒரு தெய்வப் பெண்மணியின் அன்பின் சக்தியால் என் கால்கள் இழந்திருந்த இயல்பை மீண்டும் பெற்றன. எழுந்து நின்றும் நடந்தும் தங்களை வரவேற்கும் பாக்கியம் பெற்றவனானேன். ஆயினும், தேவி, நான் உயிர் வாழ்ந்திருப்பதுபற்றித் திருப்தி அடையவும் இல்லை; இனி நெடுங்காலம் உயிர் வாழ விரும்பவும் இல்லை. தாங்கள் அத்தகைய ஆசி எனக்குக் கூற வேண்டாம். விரைவில் சிவ பதம் கிடைக்க வேண்டுமென்று வாழ்த்துங்கள்!'' என்றார் சுந்தர சோழர்.

''சக்கரவர்த்தி! தங்கள் குலத்து மூதாதையர் எல்லாரும் வீர சொர்க்கத்தையோ, சிவ பதத்தையோ அடைந்தார்கள். தங்களுக்கும் பரலோகத்தில் அவர்கள் இடந் தேடி வைத்திருப்பார்கள். உரிய காலம் வரும்போது சிவ கணங்கள் வந்து தங்களை அழைத்துப் போவார்கள். ஆனால் அத்தகைய பதத்தை அடைவதற்குத் தாங்கள் அவசரப்படுதல் ஆகாது. இந்த உலகில் தங்களுக்கு இன்னும் கடமை எவ்வளவோ இருக்கிறது. நேர்மை நெறி பிறழாத தங்கள் ஆட்சியின் கீழ் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். சிவாலயக் கைங்கரியங்கள் நாடெங்கும் நடைபெற்று வருகின்றன. சைவர்கள், வைணவர்கள்,



புத்தர்கள், சமணர்கள் முதலான பல மதத்தினரும் தங்கள் ஆயுள் நீடிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து வருகிறார்கள்...''

''தாயே! அவர்கள் யாரும் இனி அத்தகைய பிரார்த்தனை செய்யலாகாது. என் ஆயுள் நீடிக்கப் பிரார்த்திப்பது என் மன வேதனையை நீடிக்கச் செய்யும் பிரார்த்தனையாகும். சோழ நாடு அளித்த வீரர்களுக்குள்ளே வீராதி வீரனை ஆதித்த கரிகாலனைப் பறி கொடுத்துவிட்டு, நான் இவ்வுலகில் நெடுங்காலம் உயிரோடு இருக்க வேண்டுமா? அவன் இறப்பதற்கு முன்னதாக என் உயிர் போயிருக்கக் கூடாதா?....

''சக்கரவர்த்தி! புத்திர சோகம் மிகக் கொடியதுதான். ஆனாலும் விதியின் வலிமையைப் பற்றிப் பேதையாகிய நான் தங்களுக்குச் சொல்ல வேண்டிய தில்லை. கிருஷ்ண பகவான் அர்ச்சுன னுடன் இணைபிரியாத் தோழராயிருந் தார். காக்கும் கடவுளாகிய திருமாலின் அவதாரம் கிருஷ்ண பரமாத்மா. அவ ராலேகூட அரவானையும் அபிமன்யுவை யும் காப்பாற்றிக் கொடுக்க முடிய வில்லை. அத்தகைய வீரப் புதல்வர்கள் இறந்தபிறகும் அர்ச்சுனன் உயிர் வாழ்ந்திருக்கவில்லையா? பெற்ற பிள்ளை களின் மீது ஆசை இல்லாதவன் அல்லவே அர்ச்சுனன்? 'மகனுயிரைக் காக்கும் பொருட்டு நீ உன் உயிரைக் காத்துக் கொள்ள வேண்டும்' என்று கிருஷ்ண பரமாத்மா போதித்ததை ஏற்



னுக் கொண்டு அர்ச்சுனன் உயிர் வாழ்ந்தான். சக்கரவர்த்தி! கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்குச் செய்த போதனை தங்களுக்கும் பொருத்தமானது.''

''தாயே! அபிமன்யு போர்க்களத்தில் வீரப் போர் புரிந்து மரணமடைந்தான்; வீர சொர்க்கம் எய்தினான்!''

''தங்கள் குமாரன் வீரத்தில் அபிமன்யுவுக்குக் குறைந்தவன் அல்லவே! பன்னிரண்டாம் வயதில் சேவூர்ப் போர்க்களத்திலும் பதினெட்டாம் பிராயத்தில் வீரபாண்டியன் இறுதிப் போரிலும் ஆதித்த கரிகாலன் புரிந்த வீரச் செயல்களை இந்த உலகம் என்றும் மறக்காதே! அபிமன்யுவைக் கடைசியில் பலர் சூழ்ந்து கொண்டு அவனை நிராயுதபாணியாக்கி அதர்ம யுத்தம் செய்து கொன்றார்கள். அது போலவே ஆதித்த கரிகாலனையும் தந்திரத்தால் தனிமைப்படுத்திச் சதிகாரர்கள் பலர் சூழ்ந்து நின்று திடீரென்று தாக்கிக் கொன்றார்கள்......''

''தாயே! அவன் இறந்தது எப்படி என்பதை மட்டும் நான் நிச்சயமாகத் தெரிந்துகொள்ள முடியுமானால் என் மனம் ஓரளவு நிம்மதி அடையும்.''

''சென்று போனதைப் பற்றி எதற்காக மனத்தைப் புண்படுத்திக் கொள்ள வேண்டும்? கரிகாலனுடைய விதி முடிந்தது; வால் நட்சத்திரம் விழுந்தது; சோழ நாடு ஒரு மகா வீரனை இழந்தது. ஏன், எப்படி என்று விசாரித்து என்ன ஆகப் போகிறது?''

''உண்மை தெளிவாகாதபடியால், யார் யார் பேரிலோ சந்தேகம் உண்டாகிறது. தாயே! பூமியை ஆதிசேஷன் தாங்குவது போல் சோழ சாம்ராஜ்யத்தையே தாங்கி வந்தவரான பெரிய பழுவேட்டரையர் மேலேயே சிலர் சந்தேகத்தைக் கிளப்புகிறார்கள்; வீண் பழி சுமத்துகிறார்கள்.''

''அவரையே கேட்டு உண்மையைத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?''

''பெரிய பழுவேட்டரையரைக் கேட்க யாருக்குத் தைரியம் உண்டு? எனக்கு இல்லை, தாயே! எப்படியோ அவர் இதில் சிக்கிக் கொண்டு மனம் நொந்து போயிருக்கிறார். என்ன நடந்தது என்று அவராகச் சொல்லாத வரையில், அவரை யார் கேட்க முடியும்? அம்மா! தக்கோலம் போர்க்களத்தில் என் பெரிய தந்தை இராஜாதித்தர் யானை மேல் துஞ்சி வீர சொர்க்கம் புகுந்த பின்னர், சோழ சைன்யம் சின்னாபின்னப்பட்டுச் சிதறி ஓடத் தொடங்கியது. ஓடிய வீரர்களை வழிமறித்து நிறுத்தி மறுபடியும் ஒரு சைன்யமாக்கிக் கன்னர தேவன் படைகளை விரட்டியடித்த மகா வீரர் பெரிய பழுவேட்டரையர். அன்று அவர் அவ்விதம் செய்திரா விட்டால், இன்றைக்குச் சோழ ராஜ்யமே இருந்திராது. தக்கோலத்துப் போரில் அவருடைய திருமேனியில் அறுபத்துநாலு காயங்கள் பட்டன. அப்படியும் அவர் சோர்ந்து விடாமல் போர்க்களத்தில் நின்று வெற்றி கண்டார். அதற்குப் பிறகு அவர் போர்க்களத்துக்கே போகக் கூடாதென்று கட்டுப்பாடு செய்து தனாதிகாரியாக்கினோம். அத்தகைய பெரியவரை, —என் தந்தைக்குச் சமமானவரை, — நான் என்ன கேட்க முடியும்?''

''உண்மை வெளியாவதற்கு வேறு வழி ஒன்றும் இல்லையா?''

''வாணர் குலத்து வந்தியத்தேவன் கரிகாலனுடைய உடலின் அருகில் இருந்தான் என்று சொல்கிறார்கள். அவனைக் கேட்டு உண்மை அறியலாம் என்று எண்ணினேன். அவனும் பாதாளச் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டான். இதைப் பற்றிச் சின்னப் பழுவேட்டரையர் முதன் மந்திரி மேல் குறை சொல்லுவதற்கு நியாயம் இருக்கிறது.''

இதுவரையில் மௌனமாக இருந்த குந்தவை இப்போது குறுக்கிட்டு, ''தந்தையே! அந்த வீரரை எப்படியும் கொண்டுவந்து ஒப்புவிப்பதாக முதன் மந்திரி பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறாரே?'' என்றாள்.

''குழந்தாய்! இம்மாதிரி முதன்மந்திரி பல தடவை பொறுப்பு ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால் நிறைவேற்றுவது நிச்சயமில்லை. சம்புவரையர் மகன் கந்தமாறன் ஓடியவனைத் துரத்திக் கொண்டு போயிருப்பதாக அறிகிறேன். கந்தமாறன் அவ்வளவு முன்யோசனைக்காரன் அல்ல; அவசர புத்தி படைத்தவன். அதிலும் சம்புவரையர் குலத்துக்குக் களங்கம் உண்டாகக் கூடாது என்ற ஆத்திரமுள்ளவன். அவன் வந்தியத்தேவனைத் தொடர்ந்து போயிருப்பது என் கவலையை அதிகமாக்குகிறது.''

''ஐயா! சென்று போனதை மறந்து விடுவதே நல்லது. இனி நடக்க வேண்டியதைப் பற்றி யோசியுங்கள்.''

''அன்னையே! அதற்காகவே தங்களை அழைத்து வரச் சொன்னேன். ஆளுக்கு மேல் ஆள் அனுப்பிக் கொண்டிருந்தேன். மேலே நடக்க வேண்டியதைப் பற்றி எனக்கு யோசனை கூறி உதவ வேண்டும்.''

''சக்கரவர்த்தி! அறிவிற் சிறந்த அமைச்சர்கள் பலர் தங்களுக்கு

இக்கட்டான நிலை கைகொடுத்த கலை!

நாகர்கோயில் வடிவீசுவரத்தில் பிறந்து, பூதப்பாண்டி ஸ்ரீ அருணாசல அண்ணாவியிடம் இளமையில் மிருதங்க சிக்ஷை பெற்று, அண்ணாமலை சர்வ கலாசாலையில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர் ஸ்ரீ தாணு. அண்ணாமலை சர்வ கலாசாலை மிருதங்கப் பேராசிரியர் வைலாட்டூர் சாமி அய்யரிடம் மிருதங்கப் பயிற்சி பெற்ற திரு தாணு ஏ. வி. ஸ. வி. (இந்தியா) கம்பெனியில் கணக்காளர்! காலப் பிரமாணம் தவறாது வாசிக்கும் மிருதங்கக் கலைஞருக்குக் கணக்குத் தப்புமா?

நாகர்கோயிலிலிருந்து ஐந்து மைலில் பறக்கை என்னும் ஊரில் கல்யாணக் கச்சேரி. திரு சங்கர நாராயணன் அன்று பாடிக் கொண்டிருந்தார். பிடில் வாசித்தவர் அகஸ்தீசுவரம் ஸ்ரீ சிங்காரவேலு. வித்வான் இரண்டாவது பாட்டுப் பாடிக் கொண் டிருக்கும்போது மிருதங்க வித்வான் ஸ்ரீ தாணு வாசிக்கையில் தொப்பித் தோல் கிழிந்து இடது கை மிருதங்கத்தின் உள்ளே போய் விட்டது. இந்த இக்கட்டான சமயத்தில் கச்சேரியில் எப்படித் தொடர்ந்து வாசிக்க முடியும்? சின்னக் கிராமத்தில் இன்னொரு மிருதங்கத்துக்கு எங்கே போவது?

ஆனால், யாரோ ஒருவர், "இந்த ஊர் பஜனை மடத்தில் ஒரு மிருதங்கம் இருக்கிறது. அதை வேண்டுமானால் வாங்கித் தருகிறேன்!" என்றார். சமய சந்தர்ப்பமாக வந்த அந்த மனிதரிடம், "சரி! கொண்டு வாருங்கள், பார்க்கலாம்!" என்றார் ஸ்ரீ தாணு அய்யர்.

கச்சேரியைப் பாதியில் நிறுத்த முடியுமா? பாடகர் பாடிக் கொண் டிருந்தார்.



பஜனை மடத்து மிருதங்கம் வரும் வரையில் தமது அனுபவத்தினாலேயே ஸ்ரீ தாணு 'இடந்தரை' இல்லாத குறை தெரியாமல் சமாளித்துக் கொண்டிருந்தார்.

பஜனை மடத்திலிருந்து வந்த மிருதங்கத்துக்கு ரவை வைத்துப் பக்குவமாகச் சரிப்படுத்திக் கொண்டு கிழிந்த மிருதங்கத்தை நிமிர்த்தி வைத்துக் கொண்டு வலந்தரையில் தபேலா மாதிரி வாசித்து அன்றையக் கல்யாணக் கச்சேரியை ஜமாய்த்து விட்டார் ஸ்ரீ தாணு அய்யர்.

"அன்றையக் கல்யாணக் கச்சேரியைச் சமாளித்தது என் வாழ்க்கையில் என்றும் மறக்க இயலாது!" என்கிறார் கணக்காளர், மிருதங்க வித்வான் ஸ்ரீ தாணு அய்யர்.

சிதம்பரம் பக்கத்தில் ஒரு சிறு கிராமம். நாதசுர வித்வான் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை அங்கு பிரபலஸ்தர் ஒருவரின் கல்யாணத்துக்கு நாதசுரம் வாசிக்க வந்திருந்தார். அன்று தவுல் வாசிக்க வேண்டிய நாச்சியார் கோவில் ராகவப் பிள்ளை ஏனோ கச்சேரி ஆரம்பிக்கும் வரையில் வந்து சேரவில்லை.

கல்யாணக் கச்சேரிக்கு டி.வி. நமசிவாயம் பாட்டுக்கு மிருதங்கம் வாசிக்க வந்திருந்தார் ஸ்ரீ தாணு.

"சுவாமி! தவுல் ராகவப்பிள்ளை வர்றேன்னவர் ஆளைக் காணோம். நீங்க மிருதங்கம் வாசிங்க! நான் வாசிக்கப்புடறேன்!" என்றார் ஸ்ரீ ராஜரத்தினம்.

அன்றைய கல்யாணக் கச்சேரியில் தவுலுக்குப் பதில் மிருதங்கத்துடன் ஸ்ரீ ராஜரத்தினம் நாதசுர விருந்து நிறைவேறியது.

— குண்டுமணி



யோசனை சொல்ல இருக்கிறார்கள். இந்தப் பேதை ஸ்திரீ என்ன யோசனை சொல்லப் போகிறேன்? என்னைக் கரம் பிடித்து என் ஜீவியத்தைப் புனிதப்படுத்திய மகா புருஷர் இவ்வுலகில் வாழ்ந்திருந்த காலத்திலும் நான் அரசாங்கக் காரியங்களில் கவனம் செலுத்தியதில்லை. அவர் தேவருலகம் சென்ற பிறகு சிவ கைங்கரியத்திலேயே ஈடுபட்டிருக்கிறேன். என்னால் என்ன யோசனை சொல்ல முடியும்?"

"தேவி! கோபித்துக் கொள்ளக் கூடாது. எங்கள் சோழ குலத்தில் தோன்றிய பெண்கள் எல்லாரும் பேதைகளாயிருக்கவில்லை. இதோ இருக்கிறாளே, என் அருமை மகள் குந்தவை, அவளுக்கு நிகரான அறிவு படைத்தவர்களை நான் கண்டதில்லை....."

"மன்னிக்க வேண்டும், சக்கரவர்த்தி நான் சோழ குலத்தில் பிறந்தவள் அல்லவே? மழவரையர் குலத்தில் பிறந்தவள் தானே?" என்றார் முதிய பிராட்டியார்.

"எந்தக் குலத்தில் பிறந்தாலும், பெண்கள் அறிவுடையவர்களாக இருக்கலாம்; பிறந்த குலம், புகுந்த குலம் இரண்டுக்கும் நன்மை உண்டாக்கலாம். பெண்கள் வெறும் பிடிவாதம் பிடித்துப் பிறந்த குலமும் புகுந்த குலமும் அழிந்து போவதற்குக் காரணம் ஆவதும் உண்டு, தாயே! தாங்கள் அத்தகைய குலநாசத்துக்குக் காரணமாகப் போகிறீர்களா?"

இவ்விதம் சுந்தரசோழர் கேட்டதும், செம்பியன் மாதேவி நெருப்பை மிதித்தவர்போல் துடித்து, "சக்கரவர்த்தி

இது என்ன வார்த்தை ? என்னால் ஏன் சோழ குலம் நாசம் அடைய வேண்டும்? நான் அவ்வளவு சக்தி படைத்தவன் அல்லவே ?'' என்று கண்களில் நீர் மல்க விம்மிக் கொண்டே கூறினார்.

''தேவி ! சிறிது கடுமையாகப் பேசுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். என் மூத்த குமாரன் இறந்து நான் உயிரோடிருக்கிறேன் என்னும் எண்ணம் என் நெஞ்சைப் பிளந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் இதைக் காட்டிலும் எனக்கு ஏற்படக்கூடிய துன்பம் ஒன்றும் உண்டு. என் மூதாதையர் காலத்திலிருந்து வலுப் பெற்றுப் பரவி வரும் இந்தச் சோழ ராஜ்யம் என் காலத்தில் சின்னாபின்னப்பட்டு அழிந்தது என்றால், அதைக் காட்டிலும் கொடிய தண்டனை எனக்கு வேறொன்றும் இல்லை. மூன்று வருஷங்களாக என் அருமைக் குமாரன் கரிகாலனை நான் பார்க்காமலே இருந்தேன். எனக்காகக் காஞ்சி நகரில் அவன் பொன் மாளிகை கட்டினான். அங்கு வந்து தங்கும்படி என்னை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தான். நான் போகவில்லை. என் உடல் நிலையைக் காரணமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். உண்மையான காரணம் அது வல்ல. நான் காஞ்சிக்குப் புறப்பட்டுச் சென்றால், பழுவேட்டரையர்களின் சிநேகத்தில் அவநம்பிக்கை கொண்டு நான் போய்விட்டதாக அவர்களும் நினைக்கலாம்; மற்றச் சிற்றரசர்களும் பெருந்தர அரசாங்க அதிகாரிகளும் கருதலாம். அதிலிருந்து என்ன சச்சரவு நேருமோ, என்ன விபரீதம் இந்தச் சோழ ராஜ்யத்துக்கு ஏற்படுமோ என்று எண்ணித்தான் நான் காஞ்சிக்குப் போகவில்லை. நான் போயிருந்தால் ஒரு வேளை என் அருமைக் குமாரன் கரிகாலன் இன்று உயிரோடு இருந்திருப்பான்....''

''மன்னர் மன்னா ! தாங்கள் எவ்வளவோ அறிவாளி. ஆற்றல் மிகப் படைத்தவர். ஆயினும் விதியை மாற்றி எழுதத் தங்களால்கூட முடியாது!....''

''ஆம், அன்னையே! விதியை என்னால் மாற்றியிருக்க முடியாது. ஆனால் என் குமாரனை அந்திய காலத்தில் பார்க்க முடியாமலே போய் விட்டதே, அவன் மனத்தில் குடிகொண்டிருந்த வேதனையை அறியாமல் போய் விட்டேனே என்று இன்றைக்கு நான் படும் பச்சாத்தாபம் இல்லாமற்போயிருக்கும். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன்? விஜயாலய சோழரும் அவர் வழியில் வந்த வீராதி வீரர்களும் இரத்தம் சிந்தி உயிரைக் கொடுத்து ஸ்தாபித்த இந்தச் சோழ ராஜ்யத்தின் நலத்தைக் கருதி என் சொந்த ஆசாபாசங்களையெல்லாம் நான் வேரோடு களைந்து விட்டிருந்ததைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்காகத்தான். ஆதித்தகரிகாலனை என்ன காரணத்தினாலோ பழுவேட்டரையர்களுக்கும் அவர்களைச் சேர்ந்த சிற்றரசர்களுக்கும் பிடிக்காமல் போய் விட்டது. தங்கள் குமாரனும், என் சகோதரனுமான மதுராந்தகனை எனக்குப் பிறகு சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைக்க வேண்டும் என்று பிரயத்தனம் செய்தார்கள். அவர்கள் அப்படிப் பிரயத்தனம் செய்ததில் தவறு ஒன்றுமில்லை. மகா புருஷரும் சிவஞான சித்தருமான கண்டராதித்தருடைய புதல்வன் சோழ சிங்காதனத்தில் ஏற எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்தவன். உண்மையில் நான் முடிசூட்டிக்கொண்டதே தவறான காரியம். அப்பொழுது பெரியவர்கள் எல்லோரும் சொன்னார்களே என்று மறுத்துப் பேச முடியாமல் இசைந்து விட்டேன். அதன் பலன்களை இன்று அனுபவிக்கிறேன். என் அருமைக் குமாரனைப் பறி கொடுத்து விட்டு நான் உயிரோடிருக்கிறேன். இவ்வளவு துன்பமே எனக்குப் போதும். இனி இந்தப் பெரிய ராஜ்யம் உள் நாட்டுச் சண்டையினால் அழிந்து போவதை என் கண்ணால் பார்க்க விரும்பவில்லை. தேவி! அத்தகைய அழிவு இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு நேராமல் தடுப்பதற்குத் தாங்கள் உதவி செய்ய வேண்டும்!'' என்றார் சுந்தர சோழர்.

செம்பியன் மாதேவி தம் கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''அரசர்க்கரசே! தாங்கள் கூறியது எதுவும் என் சிற்றறிவுக்குச் சரியென்று தோன்றவில்லை. என்னுடைய கணவருக்குப் பிறகு என் மைத்துனரும் தங்கள் தந்தையுமான அரிஞ்சய தேவர் சிங்காதனம் ஏறினார். என் கணவர் விருப்பத்தின்படியே அது நடந்தது. அரிஞ்சயருக்குப் பிறகு தாங்கள் சிங்காதனம் ஏற வேண்டும் என்பதும் என் கணவரின் விருப்பம்தான். மூன்று உலகையும் ஒரு குடையில் ஆண்ட தங்கள் பாட்டனார் பராந்தகத் தேவரும் அவ்வாறு ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றார். ஆகையால் தாங்கள் சோழ சிங்காதனம் ஏறியதில் முறை தவறு ஏதும் இல்லை. என்னுடைய நாதர் சிவ பக்தியில் ஈடுபட்டு ஆத்மாநுபூதிச் செல்வராக விளங்கினார். இராஜரீகக் காரியங்களில் அவருடைய மனம் ஈடுபடவில்லை. ஆகையால் அவருடைய காலத்தில் சோழ ராஜ்யம் சுருங்கிக்

கொண்டு வந்தது. தாங்கள் பட்டத்துக்கு வந்த பிறகு மறுபடியும் இராஜ்யம் விஸ்தரித்தது. தெற்கேயும் வடக்கேயும் தோன்றியிருந்த பகைவர் அழிக்கப்பட்டனர். இவ்விதம் இராஜ்யம் மேன்மையுறுவதற்கு முக்கிய காரணமாயிருந்தவன் தங்கள் அருமைச் செல்வன் ஆதித்த கரிகாலன். அவனுக்கு உலகம் அறிய இளவரசுப் பட்டம் கட்டப்பட்டது. அதை மாற்றி என் மகனுக்கு இராஜ்ய உரிமை அளிக்க வேண்டும் என்பதற்கு நான் எப்படிச் சம்மதிக்க முடியும்? நான் சம்மதித்தாலும் உலகம் சம்மதிக்குமா? இராஜ்யத்தின் மக்கள் சம்மதிப்பார்களா சக்கரவர்த்தி? உள்நாட்டுச் சண்டையினால் இராஜ்யம் அழிவதைத் தடுக்க விரும்புவதாகச் சற்று முன்னால் சொன்னீர்கள். ஆதித்த கரிகாலனைப் புறக்கணித்துவிட்டு என் புதல்வனுக்குப் பட்டம் கட்டியிருந்தால் அதே உள்நாட்டுச் சண்டை நேர்ந்திராதா? இராஜ்யம் அழிந்திராதா?'' என்று கேட்டார்.

''ஆம், தாயே! அதனாலேதான் நானும் தயங்கிக் கொண்டிருந்தேன். எல்லோரையும் சமரசப்படுத்தி அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஏற்பாடு செய்யப் பிரயத்தனப்பட்டேன். அது கைகூடுவதற்குள்ளே விதி குறுக்கிட்டு விட்டது; கரிகாலனுடைய ஆயுள் முடிந்து விட்டது. தாயே! அடுத்தாற் போல் நான் செய்ய வேண்டியது என்ன? தாங்களே சொல்லுங்கள்! இந்த இராஜ்யத்தின் பொறுப்பை என்னால் இனித் தாங்க முடியாது. யாரிடமாவது ஒப்புவித்துவிட்டுக் கரிகாலனுடைய கடைசி விருப்பத்தை நிறைவேற்ற விரும்புகிறேன். காஞ்சியில் எனக்காக வென்று கரிகாலன் கட்டியுள்ள பொன் மாளிகையில் தங்கி என் அந்திய காலத்தைக் கழிக்க விரும்புகிறேன். இப்போது யாருக்குப் பட்டம் கட்டுவது என்று சொல்லுங்கள். அருள்மொழியைக் காட்டிலும் மதுராந்தகன் பிராயத்தில் மூத்தவன். என்னைவிட இளையவன் ஆனாலும், அவனுக்குச் சிறிய தந்தை முறையில் உள்ளவன். கொடும்பாளூர் வேளாரும் திருக்கோவலூர் மலையமானும் அருள்மொழிக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்கிறார்கள். தர்மத்துக்கும் நியாயத்துக்கும் குல முறைக்கும் விரோதமான இந்தக் காரியத்துக்கு நான் எப்படி உடன்பட முடியும்? அல்லது தாங்கள்தான் எப்படி உடன்பட முடியும்? அன்னையே! எனக்கு உதவி செய்யுங்கள்! மதுராந்தகனுக்கு முடிசூட்டத் தங்கள் சம்மதத்தைத் தெரிவியுங்கள். அதை வைத்



துக்கொண்டு நான் சேனாதிபதி பெரிய வேளாரையும் திருக்கோவலூர் மலையமானையும் சம்மதிக்கச் செய்வேன்! தங்கள் சம்மதத்தையும் அநுமதியையும் தெரிவித்து இந்தச் சோழ சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிய புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளுங்கள்!'' என்றார் சுந்தர சோழச் சக்கரவர்த்தி.

செம்பியன்மாதேவி, ''ஐயா! என் சம்மதத்தைக் கேட்க வேண்டாம். சிவபதம் அடைந்த என் இறைவர் எனக்கு இட்ட கட்டளைக்கு மாறாக நான் நடக்க முடியாது. ஆனால் இராஜ்ய விவகாரங்களில் நான் இனிக் குறுக்கிடுவதில்லை. மதுராந்தகனை அழைத்து அவன் சம்மதத்தைக் கேட்டு எப்படி உசிதமோ அப்படிச் செய்யுங்கள்!'' என்றார்.

''ஆம், ஆம்! மதுராந்தகனை அழைத்து அவனுடைய சம்மதத்தைக் கேட்டுக் கொண்டுதான் எதுவும் தீர்மானிக்க வேண்டும். அதற்கும் தங்கள் உதவி வேண்டும் தேவி! மதுராந்தகன் எங்கே?'' என்றார் சக்கரவர்த்தி.

செம்பியன் மாதேவி தம் தொண்டை அடைக்க, நாத் தழுதழுக்க, ''மதுராந்தகன் எங்கே? சென்ற மூன்று தினங்களாக அந்தக் கேள்வியைத்தான் நானும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். யாரும் மறுமொழி சொல்லவில்லை. அரசே!

என் புதல்வன் எங்கே? கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரைக் கூப்பிட்டுக் கேளுங்கள்!'' என்றார்.

''சின்னப்பழுவேட்டரையர் தங்களைக் கேட்க வேண்டும் என்கிறார். தாங்களும் முதன் மந்திரி அநிருத்தரும் ஏதோ சூழ்ச்சி செய்து மதுராந்தகனை மறைத்து வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டுகிறார். அன்னையே! இப்போது சின்னப் பழுவேட்டரையரையும் முதன் மந்திரியையும் அழைத்து வரச் செய்கிறேன். அநுமதி கொடுங்கள்!'' என்றார் சக்கரவர்த்தி.

''அப்படியே அழைத்து வரச் செய்யுங்கள். நானும் அவர்களைக் கேட்கிறேன்!'' என்றார் செம்பியன் மாதேவி.

குந்தவை உடனே வாசற் பக்கம் சென்று அங்கிருந்த காவலர்களிடம் சொல்லி அனுப்பினாள். சிறிது நேரத்துக்கெல்லாம் சின்னப் பழுவேட்டரையரும் முதன் மந்திரியும் வந்தார்கள்.

சக்கரவர்த்தி சின்னப் பழுவேட்டரையரை நோக்கி, ''தளபதி! சோழ நாடு போற்றி வணங்கும் மூதாட்டியார் நீர் கேட்ட அதே கேள்வியைக் கேட்கிறார். 'மதுராந்தகன் எங்கே?' என்று வினவுகிறார். மதுராந்தகத் தேவரைப் பற்றித் தாங்கள் அறிந்ததைச் சொல்லுங்கள். தங்கள் சந்தேகத்தையும் ஒளிவு மறைவு இன்றிக் கூறுங்கள்!'' என்றார்.

சின்னப் பழுவேட்டரையர் கூறினார். ''தேவியாரின் சிவ பக்தியும் சீலமும் உலகம் அறிந்தவை. சோழ நாட்டு மக்கள் அவரை நடமாடும் தெய்வமாகக் கருதிப் போற்றுவது போல் நானும் போற்றுகிறேன். நான் இப்போது தெரிவித்துக் கொள்வதைக் குற்றம் கூறுவதாக எண்ணக் கூடாது. எந்தக் காரணத்தாலோ தேவியார் தமது குமாரர் சோழ சிங்காதனம் ஏறுவதை விரும்பவில்லை. இதுவும் எல்லோரும் அறிந்தது. மூத்தபிராட்டியாரைக் காட்டிலும் எனக்காவது மற்றவர்களுக்காவது அவருடைய புதல்வர் விஷயத்தில் அதிக அன்பு இருக்க முடியாது. ஆயினும் மர்மமாயிருக்கிற சில விஷயங்களை விளக்குதல் அவசியமாயிருக்கிறது. அதிலும் சக்கரவர்த்தி 'மதுராந்தகரைக் கொண்டு வருக!' என்று அடியேனுக்குக் கட்டளையிட்டிருப்பதால் என்னுடைய சில சந்தேகங்களையும் வெளியிட வேண்டியிருக்கிறது. மூன்று நாளைக்கு முன்னால் மூத்த எம்பெருமாட்டியும் மதுராந்தகத் தேவரும் கோட்டைக்கு வெளியே சென்றார்கள். புஷ்பத் திருப்பலி செய்யும் சேந்தன் அமுதனுடைய குடிசைக்குச் சென்று க்ஷேமம் விசாரித்தார்கள். பின்னர் தேவியார் மட்டும் கோட்டைக்குத் திரும்பினார். சிறிது நேரத்துக்குப் பிறகு நானும் என் தமையனும் கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் நின்று கொடும்பாளூர் வேளாருடன் பேசிக் கொண்டிருந்தோம். மதுராந்தகத் தேவரைப் பற்றி நான் விசாரித்துக் கொண்டிருந்த சமயத்தில் 'யானை பல்லக்குப் பரிவாரத்துடன் சிலர் கோட்டைக்குள் நுழைந்தார்கள். 'மதுராந்தகத் தேவர் வாழ்க!' என்ற கோஷமும் கேட்டது. முதன் மந்திரி அவர்கள் தான் அப்போது அதைச் சுட்டிக் காட்டினார். யானைமேலிருந்தவர் மதுராந்தகத் தேவர் என்று கூறினார். எனக்கு அதைப் பற்றிச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. பின்னர் சக்கரவர்த்தியின் கட்டளைப்படி கோட்டைக் காவல் என் வசத்தில் வந்தது. என் அரண்மனையில்தான் மதுராந்தகர் தங்குவது வழக்கம். அன்றிரவு அதைப் பற்றி நான் விசாரிக்கவில்லை. மறுநாள் விசாரித்தபோது என் அரண்மனைக்கு வரவில்லை என்று தெரிந்தது. பின்னர் கோட்டை முழுவதும் தேடிப் பார்த்தும் யார் யாரையோ விசாரித்துப் பார்த்தும் மதுராந்தகத் தேவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. கோட்டைக்குள் பிரவேசித்தவர் எப்படி மாயமாய் மறைந்தார்? தேவியாரும் முதன் மந்திரியும் இப்பொழுது நான் சொல்லப் போவதற்காக மன்னிக்க வேண்டும். அவர்கள் இருவரும் ஏதோ சூழ்ச்சி செய்து மதுராந்தகர் பீதி கொள்ளும்படியான செய்தி எதையோ அவரிடம் சொல்லி இந்த நகரை விட்டும் நாட்டை விட்டுமே ஓடிப்போகும்படி செய்து விட்டார்கள் என்று நான் ஐயுறுகிறேன். நான் சொல்வது தவறாயிருந்தால் மீண்டும் பெரிய பிராட்டியாரின் மன்னிப்பைக் கோருகிறேன்.''

செம்பியன் மாதேவி தழுதழுத்த குரலில், ''தளபதி! தாங்கள் இப்போது கூறியது முற்றும் தவறு. சிவபெருமானுடைய பாத கமலங்கள் சாட்சியாகச் சொல்லுகிறேன் முதன் மந்திரி அநிருத்தரிடம் சமீபத்தில் என் குமாரனைப் பற்றிப் பேசியதுமில்லை; சூழ்ச்சி செய்ததும் இல்லை. அன்று மாலை நானும் மதுராந்தகனும் சேந்தன் அமுதன் குடிசைக்குப் போனது உண்மைதான். நான் அங்கிருந்து புறப்பட்டபோது மதுராந்தகன் சிறிது நேரம் கழித்து வருவதாகச் சொன்னான். அதற்குப் பிறகு நான் அவனைப் பார்க்கவில்லை. மூன்று நாட்க


அற்புதமான
சூப்பர் டஸ்ட்!
அருமையான டீ!
Brooke Bond
Super
Dust
Tea
Super
Dust
உயர்
தரமான
டீ
உயரிய சுவை. மேன்மையான
டிகாக்ஷன். முற்றிலும்
உயர்ந்த தேநீரின் திருப் தியை
உங்களுக்குத் தருவது
ப்ருக் பாண்ட் சூப்பர் டஸ்ட்.
அருந்தி ஆனந்தமடையுங்கள்.
BB 6594



ளாக நானும் அவனைத் தேடிக் கொண்டுதானிருக்கிறேன்!'' என்றார்.

''தேவியார் கூறுவதை ஒப்புக்கொள்கிறேன். அப்படியானால் முதன் மந்திரி தான் இந்த மர்மத்தை வெளியாக்க வேண்டும்!'' என்றார் காலாந்தகர்.

''எந்த மர்மத்தை?'' என்று முதன் மந்திரி அநிருத்தர் கேட்டார்.

''தேவியின் புதல்வர் காணமற் போன மர்மத்தைப் பற்றித்தான்!''

''தளபதி! இந்தக் கோட்டை முழுவதும் தாங்கள் நன்றாகத் தேடிப் பார்த்ததாகக் கூறியது உண்மைதானா?''

''ஆம்; தங்கள் அரண்மனையைத் தவிர மற்ற எல்லா இடங்களையும் தேடித் துருவிப் பார்த்தாகி விட்டது.''

''என் அரண்மனையை மட்டும் விட்டு விட்ட காரணம் என்ன?''

''தாங்கள் சோழ சாம்ராஜ்யத்தின் முதன் மந்திரி என்கிற மரியாதை காரணமாகத்தான்!''

''ஆகா! அப்படியானால் தங்கள் கடமையைத் தாங்கள் சரியாகச் செய்யவில்லை என்று ஏற்படுகிறது. போனது போகட்டும். சக்கரவர்த்தி! தங்களுடைய பெரிய அன்னையும் சோழ நாடு போற்றும் சிவபக்த சிரோமணியுமான மூத்த எம்பிராட்டியார் தமது புதல்வரைப் பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. நான் அவருடன் சூழ்ச்சி எதுவும் செய்யவில்லை. ஆனால் ஒன்று சொல்கிறேன். தேவியாரின் திருவயிற்றில் உதித்த தேவர் என்னுடைய மாளிகையிலேதான் மூன்று நாளாக இருந்தார். இப்போது இந்த அறையின் வாசலிலே வந்து தங்களையும் அன்னையையும் தரிசிப்பதற்காகக் காத்திருக்கிறார். அநுமதி கொடுத்தால் அழைத்து வருகிறேன்!''

இவ்வாறு முதன் மந்திரி கூறியதும் அங்கிருந்தவர்கள் ஒவ்வொருவரும் அடைந்த வியப்பைச் சொல்லி முடியாது.

சக்கரவர்த்தி, ''முதன் மந்திரி! இது என்ன வேடிக்கை! தேவியின் புதல்வரை அழைத்து வருவதற்கு அநுமதி கேட்பானேன்! சீக்கிரமே வரவழையுங்கள்!'' என்றார்.

முதன் மந்திரி அநிருத்தர் வாசற்படியண்டை சென்று கைதட்டிவிட்டு மறுபடியும் உள்ளே வந்தார்.

அடுத்த கணம் சேந்தன் அமுதனை முன்னால் விட்டுக் கொண்டு ஆழ்வார்க்கடியான் நம்பி வந்தான்.

சின்னப் பழுவேட்டரையர் மிக்க ஆத்திரத்துடன், ''முதன் மந்திரியின் பரிகாசத்துக்கு ஓர் எல்லை வேண்டாமா?'' என்று கேட்டார்.

ஆனால் செம்பியன் மாதேவி இரு கரங்களையும் நீட்டித் தம் திருமுகத்தில் அன்பும் ஆர்வமும் ததும்ப, ''மகனே!'' என்று அழைத்ததும் தளபதிக்கு மனக் குழப்பம் உண்டாகி விட்டது.

சேந்தன் அமுதன், ''தாயே! என்னை அழைக்க இப்போதேனும் தங்களுக்கு உள்ளம் வந்ததோ? அது நான் செய்த தவத்தின் பயன்தான்!'' என்று கண்களில் நீர் ததும்பச் சொல்லிக் கொண்டு செம்பியன் மாதேவியை நெருங்கினான்.

மதுராந்தக உத்தம சோழன் என்று சரித்திரத்தில் புகழ் பெற்ற சிவபக்திச் செல்வனைத் திருவயிறு வாய்த்த தேவி அன்புடன் அணைத்துக் கொண்டு மெய் மறந்து ஆனந்தக் கண்ணீர் பொழிந்தார்.

(தொடரும்)

காப்பித் தோட்டக் காவலர்கள்



ஜாவாத் தீவிலுள்ள ஒரு பெரிய காப்பித் தோட்ட முதலாளி தமது தோட்டக் காவலருக்கு ஒரு புதிய முறையைக் கையாண்டு வருகிறார்.

இரவு நேரங்களில் தம் தோட்டங்களைப் பாதுகாக்க அவர், நன்கு பழக்கப்பட்ட புலிகள், சிறுத்தைகள், ஓநாய்கள் ஆகியவற்றை அமர்த்தியிருக்கிறார்.

''ஏன் இந்த ஏற்பாடு?'' என்ற கேள்விக்கு அந்த எஸ்டேட் முதலாளி கூறிய பதில்: ''லஞ்சம் வாங்கிக் கொண்டு எனக்குத் துரோகம் இழைக்காத ஜீவன்கள்!''


ஆதாரம்: 'ஜெர்மானிடேரியன்'

தகவல்: ஏ. சுவாமிநாதன்

விவா

இரு செயல் புரியும் ஆரோக்கிய பானம்

பகலில் உடலுக்கு உரமூட்டும்...
இரவில் நிம்மதியூட்டும்!



விவா பருகுங்கள்—சூடாகவோ, குளிர்ந்ததாகவோ, நீருடன் அல்லது பாலுடன் கலந்து. விவாவிலுள்ள ஆடைபபால் செழுமையாக்கப்பட்டுள்ளது — மால்ட், கோதுமை மற்றும் புரதச் சத்துக்கள் சேர்க்கப்பட்டு. இது உங்கள் திசுக்களுக்கு உரமூட்டி, நரம்புகளுக்கு இதமூட்டி, தசைகளுக்கு பலமூட்டுகின்றது.

காலையில் விவா பருகினால், பகல் முழுவதும் நீங்கள் உயிர்த்துடிப்புடன் விளங்குவீர்கள்! படுக்கும்போது அருந்தினால், இரவு முழுவதும் நிம்மதியுடன் உறங்குவீர்கள்!

விவா, எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவுப் பானம்— நோயாளிகளுக்கும் பிணியாறி வருபவர்களுக்கும் சஞ்சீவி!

சுவையில் சிறந்தது— விரைவில் கரைவது!



Shilpi J.I. 38-21 Tam.

இந்தியாவில் தயாரிப்போர்:
ஜகஜ்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
வோல்டாஸ் லிமிடெட்



திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில் ஆசிரியை வகுப்பு நடத்துகிறார். மாணவ, மாணவியர் கருத்தூன்றிப் பயில்கின்றனர்.

நக்கீரர் கழகத்தின் நற்பணி

ஆதிசிவன் பெற்று, அகத்திய முனிவர் வளர்த்த தமிழ் நம் தமிழ். ''தழற்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்'' என்று அகத்திய முனிவரைக் கம்பன் உயர்த்திப் பேசுகிறான்.

அகத்தியன் வளர்த்த தமிழை அன்போடு பேணிக் காத்த பல அறிஞர்களுக்குள் திரு வி. கல்யாணசுந்தரனார் தலையாயவர். தமிழ்மொழிக்கு இத்துணை மதிப்பும், இத்துணைச் சிறப்பும் இல்லாத காலத்தில், தூய தமிழில் நிறையப் பேசி, நிறைய நூல்கள் எழுதி, பத்திரிகைகள் நடத்தி அயராமல் பணியாற்றியவர் அவர்.

அத்தகைய பெரியாரின் ஆசியோடு 1941ம் ஆண்டு சென்னை, பெத்துநாயக்கன் பேட்டையில், ''தமிழகம்'' என்னும் ஒரு சிறு இல்லத்தில், நக்கீரர் கழகம் தமிழைப் பேணி வளர்ப்பதற்கென்றே தொடங்கப்பட்டது. திரு கா. சி. தனகோடி, திரு சிறுவை மோகனசுந்தரன், திரு கு. குலசேகரன், திரு கு. கல்யாணசுந்தரன், திரு எஸ். வி. நமச்சிவாயம் ஆகிய அன்பர்களின் கூட்டு முயர்சியினாலே தோற்றுவிக்கப்பட்டது இக்கழகம்.

தமிழ் வகுப்புகள் நடத்துதல், தமிழ்ப் புலவர்கள், தமிழ்ப் புரவலர்கள், தமிழ்ப் பெரியார்கள் திருநாட்களைக் கொண்டாடுதல், தமிழ் ஆராய்ச்சிக் கூட்டங்கள் நடத்துதல், நூல் நிலையம், இரவுப் பள்ளி முதலியன அமைத்தல், மாணவர்களைத் தமிழ் மொழியில் சொற்பொழிவாற்றவும் கட்டுரை, கவிதை எழுதவும் பழக்குவித்தல் — என்று வரிசையாகச் சொல்லிக் கொண்டே போகலாம், நக்கீர கழகத்தின் கோட்பாடுகளை.

''நாற்றுக்கணக்கில் மக்கள் சொற்பொழிவைக் கேட்பதற்காகக் குழுமிக் கடையில் கையொலி செய்வதோடு பொறுப்பு முடிந்ததென்று கலைந்துவிடும் போலிக் கூட்டத்தினால் தமிழ் ஒரு நாளும் வளராது. பழந் தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களில் ஒரு சிலருக்கேனும் பயிற்சி பளித்தால் அதுதான் உண்மையான தமிழ்த் தொண்டு'' என்று திரு வி. க. தெரிவித்த கருத்தைச் சிரமேற் கொண்டு நக்கீரர் கழக அன்பர்கள் இலக்கிய, இலக்கண வகுப்புக்களுக்கு ஏற்பாடு செய்து அவற்றை ஒழுங்காக நடத்தவும் முயற்சி எடுத்தனர்.

முன்னரே கூறிய கோட்பாடுகளேயன்றி நக்கீரர் கழகத்துக்கு வேறு சில சிறப்புக் கொள்கைகளும் உண்டு. சமய, இன, கட்சி வேற்றுமையற்ற வகையில் தமிழ் மொழி, இலக்கியம் பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றுவதை இன்றியமையாததாகக் கருதுகின்றனர், நக்கீரர் கழகத்தினர்.

தவிர, கழகத்துணைப் பிரிவுகள் பல உள்ளன.

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி இதுகாறும் எந்தத் தமிழ்ச் சங்கமும் செய்யாத அரும்பெரும் பணியை மேற்கொண்டு சிறப்பாகச் செய்து வருகிறது. அதாவது தமிழ் வித்வான் பரீட்சைக்குரிய வகுப்புக்களை மிகவும் சிரத்தையோடு நடத்துகிறது.

மறைமலை அடிகள் ஆராய்ச்சிக் குழு (A Study circle)வின் ஆதரவில் இதுவரையில் நாற்பத்தெட்டு சொற்பொழிவுகள் நடந்திருக்கின்றன.

நக்கீரர் கழகம் 1956ம் ஆண்டு டாக்டர் தருமாம்பாள் இலக்கிய வகுப்பைத் தொடங்கி அதன் மூலம் பல சங்க இலக்கிய நூல்களைச் சொற்பொழிவு வடிவில் கற்பிக்க முற்பட்டது. இது ஒவ்வொரு சனிக்கிழமையும் மகளிர்க்காக நடத்தப்படும் சிறப்பு வகுப்பு.

தமிழ் நூல்களின் காலமும், தமிழ்ப் புலவர்களின் காலமும் இன்னும் குழப்பமான நிலையில் உள்ளன என்பது யாவரும் அறிந்ததே. அக்குழப்பத்தைத் தவிர்ப்பான் வேண்டி 1959ம் ஆண்டில் மறைமலை அடிகள் ஆராய்ச்சிக் குழு தொடங்கி வைக்கப்பட்டது.

புலவர் வரலாறுகள், கல்வெட்டுக்களின் காலம், தமிழ்ச் சொற்களின் வர

இலக்கிய விரிவுரையைச் செவிமடுக்கும் தமிழ் வித்துவான் பரீட்சைக்குப் படிக்கும் மாணவ, மாணவிகள்.



லாறு, இலக்கியத் திறனாய்வு முதலிய இன்றியமையாத பொருள்கள் பற்றி நல்ல முடிவுகளைக் காணவும், அனைவரும் பயன்பெறவும் மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு செயல்படுகிறது.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் நூல் நிலையம் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்களும், உறுப்பினரும் மாணவர்களும் பயன்படுத்தும் பொருட்டு அமைக்கப்பட்டது. இந்நூல் நிலையத்தில் அன்பர் திரு சிறுவை மோகனசுந்தரன் அவர்களின் முயற்சியால் நூற்றுக்கணக்கான நூல்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இந்நூல் நிலையத்தை விரிவுபடுத்தி, பலரும் நூல்களைப் பயன்படுத்தும் வகையில் கல்லூரிப் பணிமனையிலேயே நடத்த வேண்டும் என்பது நக்கீரர் கழகத்தின் நோக்கம். அதற்கான ஏற்பாடுகளும் முயற்சிகளும் நடந்து வருகின்றன.

இவை தவிர, தமிழ்த் தென்றல் திரு வி. க. நினைவுக் கட்டுரைப் போட்டி, டாக்டர் எஸ். தருமாம்பாள் நினைவுக் கட்டுரைப் போட்டி, டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை நினைவுக் கவிதைப் போட்டி என்றிவ்வாறு எத்தனையோ இலக்கியத் தொண்டுகளைப் போட்டி போட்டுக் கொண்டு இடையறாது ஆற்றி வரும் நக்கீரர் கழகத்தின் நற்பணியைப் பாராட்டித் தமிழ் நாடு அரசு ஆண்டு தோறும் ஆயிரம் ரூபாயை மானியமாக வழங்கி உதவி செய்திருப்பது மெச்சத் தகுந்தது.

தமிழ் இலக்கிய, இலக்கண வகுப்புகளைத் தவிர, சமய நெறிகளைப் பற்றிய சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்து நக்கீரர் கழகம் நற்றொண்டாற்றி வருகிறது. அன்பு நெறி, அருள் நெறி, சைவநெறி, வைணவ நெறி ஆகிய அரும் பொருள்கள் பற்றி அரிய பெரிய புலவர்களைக் கொண்டு விரிவுரைகளும், ஆய்வுரைகளும் நடத்திச் சமயப் பற்றுள்ள மக்களுக்கு நல்விருந்து வழங்கி வருகிறது நக்கீரர் கழகம்.

வம்மின் உலகிரே! அறிவுப் பசியைப் போக்குவோம். ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்கு வழிகோலுவோம். மக்கள் அனைவரும் ஒரே குலம் — அதுவே சிவநெறி, அன்பு நெறி, அருள் நெறி, பண்பு நெறி எனப் போற்றுவோம் — என்று நக்கீரர் கழகம் தமிழ் மக்களை ஆர்வத்துடன் கூவி அழைக்கிறது. - ஸோமாஸ்

24-வது திருத்தமா? நல்லதைக் கெடுப்பது திருத்தமாகுமா?

பால்கிவாலா பாராளுமன்றத்தின் தாழ்வாரத்தில் உறுப்பினர்கள் சிலருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது ஓர் எம். பி. சாவகாசமாக அந்தப் பக்கம் வந்தார். அவர் மிகவும் ஈடுபாடு காட்டிய ஒரு விஷயத்தை அன்று சபை விவாதிக்கவிருக்கிறது என்பது பால்கிவாலாவுக்குத் தெரியும். ஆகவே அவர் கேட்டார்: ''சபை நடவடிக்கைகளைக் கவனியாமல் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?''

''அங்கே ஏதோ 'டிராஃபிக் பில்'லைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று அலட்சியமாகச் சொன்னார் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்.

உண்மை என்னவென்றால் பாராளுமன்றம் அப்போது 'டாரிஃப் பில்'லைச் சர்ச்சைக்கு எடுத்துக் கொண்டிருந்தது. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் விதிக்கப்படும் வரிகளை நிர்ணயிக்கும் டாரிஃப் பில்லானது அங்கத்தினருக்குப் போக்குவரத்துப் பிரச்னை (டிராஃபிக் பில்) ஆகிவிட்டது!

வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை என்ற நிலையில் மேற்சொன்னவரைப் போன்ற மேதைகளும் பாராளுமன்ற உறுப்பினராகப் பாமர மக்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுவார்கள் என்பதால்தான் அரசியல் சாஸனத்தில் மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதி கூறப்பட்டன. அதோடு அந்த உரிமைகளைக் குறைக்கப் பாராளுமன்றத்துக்கு அதிகாரமில்லை என்றும் தீர்க்க தரிசனமாய் வகுக்கப்பட்டது.



ஆனால் இன்று இந்திரா ஆட்சியில், அரசியல் நிர்ணயச் சட்டம் தங்களுக்கு அளிக்கும் அடிப்படை உரிமைகள் என்னென்ன என்பதுகூடச் சரிவர அறியாத அப்பாவி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயஞானமில்லாத பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த உரிமைகளை மக்களிடமிருந்து பறிக்கத் தயாராகி விட்டனர்.

• • •

ஸுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கறிஞர், அரசியல் சாஸனம் பற்றிய ஒரு பிரச்னையை விவாதிக்க வேண்டும் என்றால் அவர் எத்தனை ஆண்டுகள் கல்வி கற்று, பின்னர் ஸுப்ரீம் கோர்ட்டுக்குள் நுழைய விசேஷத் தகுதிகள் பெற்று வருகிறார்? அப்புறம் தாம் விவாதிக்க வேண்டிய விஷயம் பற்றி எவ்வளவு ஆராய்ச்சிகள் புரிந்து சட்ட பாயிண்டுகளைச் சேகரித்துக் கொண்டு வருகிறார்? ஆனால் அதே அரசியல் சாஸனத்தைப் பாராளுமன்றத்தில் உள்ள - பெரும்பாலும் விஷயஞானம் இல்லாத - உறுப்பினர்கள் தங்கள் இஷ்டத்துக்கு மாற்றலாம் என்றால் மக்களுக்கு இதைவிடப் பெரிய அநீதி வேறென்ன இழைக்கப்பட முடியும்?

• • •

மக்கள் தங்களுக்குள்ள சுதந்திரங்களை உயிர் மூச்சாகக் கருதும் பிரிட்டனில் அரசியல் சாஸனம் என்று ஏதும் எழுதி வைக்கப்படவில்லை. பரம்பரை பரம்பரையாக வந்துள்ள சம்பிரதாயங்களின்படி அவர்கள் அடிப்படை உரிமைகளைப் பெற்றுள்ளனர். அவற்றைக் கண்ணே போல் போற்றுகின்றனர். மக்கள் அங்கே விஷய ஞானமுள்ளவர்கள். தங்கள் உரிமைகளை ஒருநாளும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். ஆனால் அங்கேயும் கூட ஒரு பேரறிஞர் எச்சரிக்கிறார்: ''என்றேனும் ஒரு நாள் இங்கே ஆணவம் மிக்க ஒருவன் ஆட்சிக்கு வரலாம். அதிகார போதை தலைக்கேறி அவன் மக்களுக்கு அநீதி இழைக்க முற்படலாம்; மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்க முற்படலாம். ஆகவே அடிப்படை உரிமைகளை எழுதி வடிவம் பெறச் செய்து அதை அசைக்க முடியாத சாஸனமாக்க வேண்டும்!''

பிரிட்டனிலேயே அறிஞர்கள் கருத்து இதுவென்றால் கல்வி அறிவில்லாத மக்களே பெரும்பான்மையாக உள்ள இந்தியாவுக்கு அரசியல் சாஸனமும் அது அளிக்கும் அடிப்படை உரிமைகளும் எவ்வளவு முக்கியம்? அந்தச் சாஸனத்தை இப்போது வெறும் கந்தல் காகிதமாக்க முற்பட்டிருக்கிறதே இந்திரா ஆட்சி!

பால்கிவாலா லயோலா கல்லூரியில் பேசியது.

ஒரு பிடி, ஒரு தட்டு, ஒரு ஹுங்காரம்!

ஒரு பிடி, ஒரு தட்டு, ஓர் இடறல், ஒரு ஹுங்காரம் ஆஜானுபாகுவான மனிதனைக் கீழே சரியச் செய்துவிடுகிறது! அதுதான் ஜூடோ. இக்கலை ஜப்பானுக்கே உரித்தானது.

''ஜுஜுட்சுவில் பயங்கரமான முறையில் உடலைத் திருகி, கைகால்களை வளைத்து அபாயப் பிடிகளைக் கையாளுவர். அதனால் ஜுஜுட்சு என்றாலே அபாயம் என்று பலர் ஒதுங்கினர். பல மாறுதல்களுக்குள்ளான ஜுஜுட்சு ஆட்டத்துக்கு 'கோடோகான் ஜூடோ' என்று பெயர் வைத்தேன்!'' என்று பேராசிரியர் கானோ விளக்குகிறார்.

பன்னிரண்டு அடி அகலம், பதினெட்டு அடி நீளம் உள்ள மெத்தை 1882ல் கோடோகான் பள்ளியில் பயிற்சி ஹாலில் விரிக்கப்பட்டு ஒன்பது பேர் பயிற்சி பெற்றனர். இன்று கோடோகான் ஜூடோ பள்ளி மில்லியன் ஜூடோ பயிற்சியாளர்களைக் கொண்டிருக்கிறது. பயிற்சிக்கூடம் இன்று நூறு அடிக்கு நூறு அடி பரப்பளவுள்ளதாய் விளங்குகிறது.

டோக்கியோ மெட்ரோபாலிடன் போலீஸ் போர்டு ஜுஜுட்சுவுக்குப் புத்துயிர் கொடுக்க முயற்சி எடுத்தது. இந்தத் தருணத்தில் ஜுஜுட்சு மாஸ்டர் ஹிகோசுகியின் டோட்சுகா பள்ளிக்கும் கானோவின் ஜூடோ பள்ளிக்கும் பலத்த மோதல் ஏற்பட்டது.

1886ம் ஆண்டில் பிரதம மெட்ரோபாலிடன் போலீஸ் அதிகாரியின் முன்னிலையில் ஒரு பிரம்மாண்டமான போட்டியை இவ்விரு பள்ளிகளுக்கும் நடுவில் ஏற்படுத்தினர். இவ்விரு பள்ளிகளும் தேர்ந்த பதினைந்து ஆட்டக்காரர்களைப் பந்தயத்தில் கலந்து கொள்ள வைத்தன. இந்தப் பந்தயத்தில் தோல்வி கிட்டியிருந்தால் கோடோகான் ஜூடோ இருந்த இடம் தெரியாமல் மறைந்திருக்கும். ஆனால் கோடோகான் ஜூடோ ஆட்டக்காரர்கள் பதின்மூன்று பந்தயங்களில் வென்று, இரண்டு ஆட்டங்களில் வெற்றி தோல்வியின்றி முடித்து முடிசூடா மன்னர்களாயினர்.

ஜூடோ கலையில் தேர்ந்த கறுப்பு பெல்ட் பெற்ற இரு ஜப்பானியக் கலைஞர்கள் சென்னைக்கு விஜயம் செய்தனர். அவர்கள் பெற்ற பயிற்சியின் அளவுக்கு ஏற்ப பெல்டின் நிறம் மாறும். ரையோஸோ நக்கமுரா இருபத்தெட்டு வயதானவர்; பதினைந்து வருஷங்கள் ஜூடோ அநுபவம் வாய்ந்தவர். டோக்கியோ கோயிகு சர்வகலாசாலையில் பட்டம் பெற்று அதிலே ஆசிரியப் பணி புரிபவர். மற்றொரு 'கறுப்பு பெல்ட்' நிபுணர் டிஸுகியோ கோபாயாகஷி. டோயோ சர்வகலாசாலையில் பட்டம் பெற்ற இவர் ஹாகுஹோடோ விளம்பரக் கம்பெனியில் பணி புரிகிறார். இவ்விரு கலைஞர்களிடமும் சில கேள்விகளைக் கேட்டோம்.

''ஜூடோ கலையில் தேர்ச்சி பெற எத்தனை காலம் பயிற்சி தேவை? ஜூடோ பயிற்சியாளர்களுக்கு உணவுத் தடைகள் உண்டா?''

''ஒரு வருஷம் பயிற்சி தேவை. எல்லாவித சத்துக்களும் கொண்ட நிறைவான உணவு வகைகள் தேவை. சிகரெட், மது கூடாது. இரவில் அதிகநேரம் கண் விழித்தல் கூடாது!''

''ஜூடோ பயிற்சியாளர்களுக்கு உடல் எடை ஒரு பிரச்னையா?''

''பிரச்னை இல்லை. ஓர் ஒல்லி மனிதன் ஜூடோ கலையில் வல்லவனானால் பருமனான ஆசாமியைத் தூக்கியெறிந்துவிட முடியும்!''

'' ஜூடோ கலையின் வளர்ச்சி பற்றிச் சொல்லுங்களேன் ?''

''ஜூடோ கலைக்கு பிரான்சிலும், அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் அதிக மவுசு ஏற்




பட்டிருக்கிறது. அங்கிருந்து ஜப்பானியப் பள்ளிகளுக்கு நிறையப் பேர் வந்து கற்றுக் கொள்கிறார்கள். நாங்களும் அங்கே சென்று பலருக்குப் பயிற்சி அளித்திருக்கிறோம்!''

சென்னை ஒய். எம். ஸி. ஏ. கல்லூரி இன்டோர் ஸ்டேடியத்தில் நக்கமுராவும் கோபாயாகஷியும் ஜூடோவின் பல மாதிரி சண்டை முறைகளைப் போரிட்டுக் காட்டினார்கள். துப்பாக்கி, கத்தி அல்லது தடி வைத்திருப்பவனையும் ஜூடோவினால் வீழ்த்த முடியும் என்று சண்டையில் கண்டு கொள்ள முடிந்தது. தற்காப்புக்கு ஜூடோ, பெண்களுக்குக் கூடப் பெருதவி புரியும். சென்னை ஜூடோ கழகத்தைச் சேர்ந்த திரு விஜயகுமாரும் அவரது அணியினரும் ஜூடோ நிபுணர்களுடன் சண்டையிட்டது தமாஷா யிருந்தது.

ஜப்பானிய கான்சல் ஜெனரல் யாஷிரோ மாட்ஸுவாகா ஜூடோ விளக்கம் கொடுத்தார். இந்தோ—நிப்பன் கலைக் கழகத் தலைவர் திரு விசுவநாதன் வரவேற்புரை நல்கினார்.

ஒன்றரை மணி நேரம் அத்தனை ரஸிகர்களையும் ஆடாமல் அசையாமல் 'ஜூடோ' செய்துவிட்டது இந்தப் பயிற்சி என்பதே அதன் வெற்றியை நிரூபிக்கிறதல்லவா ?

—பி. எஸ். மணி



எங்கெங்குமே..அழகிய சினிமா நட்சத்திரங்கள், தூய, மெல்லினம்
லக்ஸ் பற்றி என்ன கூறுகிறார்கள், உங்களுக்குத் தெரியுமா?



பேரெழில் நட்சத்திரம் சாரதா கூறுவது கேளீர்:

'பாங்காக என் மேனியழகைப் பராமரிப்பது லக்ஸ்'

LUX
WHITE

நீங்களும் ஒருவரது இதய வானில் சுடர்விடுபவர் தானே?
—உங்கள் மேனியெழிலையும் பராமரிக்கட்டும் லக்ஸ்

லின்டாஸ் – 279 - 140 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்புகள்


7
மூன்று மந்திரவாதிகள்
கதை: வாண்டுமாமா
சித்திரம்:
வளர்ந்து சுருங்கும் உன் திறமையைப் பாராட்டுகிறேன். இந்த அடர்ந்த காட்டிலிருந்து வெளியேற ஒரு வழி சொல். உன்னை என் தோழனாக்கிக் கொள்ளுகிறேன்.
அத்தானகத்திலுள்ள மிக உயர்ந்த மரத்தைவிட மூன்று பங்கு அதிக உயரத்துக்கு வளர்ந்தான் நெட்டையன்.
இங்கிருந்து அரைக்காத தூரத்தில் பாதை தெரிகிறது. நான் வழி காட்டுகிறேன், கிளம்புங்கள்.
அதோ வருகிறானே, அவன் என் நண்பன். அவனையும் உங்கள் தோழனாக்கிக் கொள்ளுங்கள். உதவியாக இருப்பான்.
கண்ணுக் கெட்டிய தூரம் வரை யாரையும் காணோமே.
உங்களால் காண முடியாத தூரத்தில் அவன் வந்து கொண்டிருக்கிறான். அவனாக வந்தால் நம்மிடம் வந்து சேரப் பல நாளாகும். போய்க் கூட்டி வருகிறேன்.
அடுத்த நொடி நெட்டையன் 'நெடு நெடு' என்று வளர்ந்தான். மேகங்கள் அவன் உடலை உராய்ந்து சென்றன. இரண்டே எட்டில் நண்பனின் இருப்பிடம் அடைந்து அவனைத் தன் முதுகில் சுமந்து திரும்பினான்...
நெட்டையன் தன்னைக் குறுக்கிக் கொண்டு.
இவன் தான் என் நண்பன் குண்டோதரன். என்னைப் போலவே திறமைசாலி.
அப்பா, குண்டோதரா! உன்னிடமுள்ள திறமை என்ன?


என் திறமையைக் காட்டுகி றேன். சீக்கிரம் எங்காவது ஓடி ஒளிந்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் ஆபத்து...
அப்படியா?... ஏன்...?
ஆனால் குண்டோதரன் பதில் சொல்லவில்லை. கெட்டையனே ஒளிய ஓடும்போது விக்ரமன் சும்மா நிற்க முடியுமா? அவனும் ஓடினான்.
குண்டோதரன் மூச்சை உள்ளுக்கு இழுத்து மேலும் மேலும் தன் உடலைப் பெரிதாக்கி அந்தப் பிராந்தியம் முழுதும் நிறையும் படி வளர்ந்தான். பிறகு இழுத்த மூச்சை வெளிவிட்ட போது புயலே உருவாயிற்று...
அடேயப்பா! என்ன காற்று, என்ன வேகம்? மரத்தைப் பிடித்துக் கொண்டேன் பறக்காமல் தப்பினேன். உன் தோழன் உன்னை விடத் திறமைசாலி தான் கெட்டையா!
உன் பருமன் என்னைப் பயந்து ஓட வைத்தாலும் நீ ஓர் அதிசயமான பிறவி தான் குண்டோதரா. இனி நீ என் நண்பன்... வா, போகலாம்.
இதற்குமேல் வழி கிடையாது. செங்குத்தான இந்த மலைகளை ஏறிக் கடப்பதும் முடியாது. என்ன செய்யலாம்?
நம்மோடு நண்பனாகச் சேரத் தகுந்த இன்னும் ஒருவன் பாக்கி. அவன் இங்குதான் எங்கோ இருக்கிறான். அவனைக் கண்டு பிடித்தால் இந்தப் பிரச்னை தீர்க்கப்படும்.


நான் குறிப்பிட்டது அந்தா அவனைத் தான். அவன் உதவி நமக்கு ரொம்பத் தேவைப்படும்.
பார்வையற்றவனோ? கண்களை மூடித் திரையிட்டுக் கொண்டிருக் கிறானே. இவன் நமக்கு என்ன உதவி செய்ய முடியும்?
மனிதனின் வெளி வேஷத்தைப் பார்த்து மட்டும் அவன் குணத்தைச் சொல்லலாமா? உண்மையில் அவன் பொட்டையன் அல்ல. அந்தத் திரையை அகற்றினால் அவன் கண் பார்வையின் உக்கிரத்தை யாராலும் தாங்க முடியாது.
உங்கள் திறந்த கண்களால் நீங்கள் பார்ப்பதைக் காட்டி லும் மூடியிட்ட இந்தக் கண்க ளால் நான் தீர்க்கமாகப் பார்க்க முடியும். இந்தத் திரையை நான் விலக்கினேனோ...
எந்தப் பொருளையும் ஊடுருவிக் கொண்டு பார்க்கும் சக்தி என் கண்களுக்கு உண்டு. நான் உற்றுப் பார்த்தால் பொருள்கள் எரிந்து சாம்பலாகிப் போகும். எரியாத பொருள்களோ பொடிப்பொடியாகிப் போகும்.
உன் பார்வைக்கு அந்தளவு சக்தியா? எங்கே, எதிரிலுள்ள மலைச்சுவரைத் தகர்த்து வழி உண்டாக்கிப் பார்க்கலாம்...
பொட்டையன் தன் கண் திரையை அகற்றிப் பார்த்ததும்... இடியோசை கேட்டது. மலைச் சுவரில் விரிசல் ஏற்பட்டது. அடுத்து அது தகர்ந்து பெயர்ந்து விழுந்து பொடியாகியது. அங்கு ஒரு வழியும் ஏற்பட்டது.

தொடரும்

பரிசு பெறும் அட்டைப்படக் கவிதைகள்

19-9-71 கல்கி இதழில் 'மாருதி' தீட்டிய இளங் காதலர்களின் வண்ணப் படத்துக்குக் கவிதைகள் நூற்றுக் கணக்கில் வந்து குவிந்தன. இந்தப் பக்கத்திலுள்ள கவிதை முப்பது ரூபாய் பரிசைப் பெறுகிறது. ஆறுதல் பரிசாக, பிரசுரமாகும் ஒவ்வொரு கவிதைக்கும் பத்து ரூபாய் வழங்கப்படுகிறது. அடுத்த இதழில் மேலும் சில கவிதைகள் இடம் பெறும்.

-- ஆசிரியர்

நாணல் இதமாய் வளையுமா — அது
நங்கை இடைபோல் நெளியுமா — அங்கு
நாணம் மிதமாய் விளையுமா — அது
நட்பை மடைபோல் சொரியுமா ?

குங்குமம் சிவப்பாய்க் குழையுமா — உன்
குளிர்முகம் நிலவாய்த் தெளியுமா — அங்கு
சங்கமம் எளிதாய் நிகழுமா — உன்
தளிர்உடல் அமுதாய்த் திகழுமா?

அன்னம் அழகாய் நடக்குமா — அது
ஆயிழை நடைபோல் இருக்குமா — அங்கு
பரதம் புதிதாய்ப் பிறக்குமா — அது
பண்பை விடைபோல் கொடுக்குமா ?

குயிலின் குரலும் குழையுமா — அது
குமரியின் குரல்போல் ஒலிக்குமா — அங்கு
குழலின் இசையும் தொனிக்குமா — அது
குலவிடும் தமிழ்போல் இனிக்குமா?

சந்தனம் மணமாய்க் கரையுமா — உன்
பொன்னிறம் அதைப்போல் பொலியுமா—அதில்
செங்கதிர் நிகர்முகம் ஜொலிக்குமா — அது
செந்தழல் சுடர் போல் தெறிக்குமா ?

தேன்மலர் அழகாய்த் தெரியுமா — அது
தேவியின் முகம்போல் இருக்குமா — அதில்
தென்றலும் சுகமாய்ப் புரியுமா — அங்கு
தெரிசனம் மனம்போல் நடக்குமா ?

மல்லிகை மிருதுவாய் இருக்குமா — மலர்
மங்கையுன் உடல்போல் இன்பூட்டுமா — அதில்
மன்மதன் மலர்க்கணை தொடுக்குமா — உடன்
தண்மழை சரம்போல் தெறிக்குமா ?

நித்திலம் பனிங்காய் ஒளிருமா — உன்
முத்திரைப் பற்களாய் மினிருமா — அதில்
புத்திளம் புன்னகை புலருமா — அதில்
நித்தமும் கவிதை மலருமா ?

நீள்விழி மானைப் பழிக்குமா — அதன்
மேல்ஒரு வில்லும் சிரிக்குமா — நான்
இட்டிய புருவம் உரைக்குமா — நம்
தெய்வீகக் காதலை விளக்குமா ?

— எஸ். கே. அமர்நாத், பி. ஏ.





'விழிமாதர் நோக்கின்முன் வீரர் தாமும்
விலக்காமல் வீழ்ந்திட்டார்' என்று கூறும்
மொழிகேட்டும் படித்தும்நாம் உள்ளோம் ஏட்டில்!
மொழிந்திட்டால் அவ்விழியின் வலிதான் என்னே?
கழிமாற்றம் செய்கின்ற அந்தக் கண்கள்
ககமாயே இருப்பதற்கும், பகைவோர் மங்கி
வழிமாற்றம் கொள்வதற்கும் அரணும் புருவ
விழிமேடு தானோந் நாளும் மூலம்!

அந்தணிதம் இருமேட்டின் அழகு வாய்ந்தே
அழகினதன் தன்முன்னே உள்ளான் நன்னே
சுந்தரப்பெண் பாவையெனும் நிலைப்போ மிந்தே
குழிமைய ஓவியமாய் எண்ணிக் கொண்டு
குத்திஉளம் சுக்கின்ற குறும்புக் கண்ணின்
குவிமோட்டை எடுப்பாகப் பென்சில் கொண்டு
அந்திவிலே அழகாகக் கூட்டு கின்றான்!
அன்புதனை அவ்வழியும் காட்டு கின்றான்!

அரண்மோதி அடங்கிட்டே வீழ்ந்த வீரன்
அம்மடையில் சேர்ந்தேயின் அதனைக் காக்க
உரன்மேலும் உண்டாக்கல் போலே, ஆர்வம்
உந்துதே போல்வதும் சீர்மை செய்ய
முரண்டுமைப் பெண்ணவளும் அவனின் முன்னே
மூண்ட பெரும் காதலதன் கொள்கை யோடு
திரண்டுவரும் இன்பத்தில் ஆழ்ந்தே இந்தத்
தேயத்தின் நினைவெல்லாம் தான்மறந்தான்!

- அரி. இல. தமிழடியான்

பூவையின் உள்ளத்தில் புகுந்திட்ட காளை
புருவத்தில் மையிட்டுப் பூரிக்கும் வேளை;
பாவையின் திருமுகம் நனைத்தால் பின்னை
பருகிடும் விழிகளும் அசைவற்ற தென்னை?
ஆவலோ அடங்காத புதும்புனல் வெள்ளம்
ஆதலால் அப்பேறு காளையின் உள்ளம்
காவலாய்க் கட்டுண்ட காதலனைக் கண்டு
களிப்புறும் பாவைக்கும் பேரின்ப முண்டு!

விண்முட்ட வளர்ந்தது எதிர்கால எண்ணம்
விரல்பட்டுச் சிவந்தது கன்னியின் கன்னம்!
வெண்பட்டுத் திறந்தது காரிகை நெஞ்சம்
விரிவுற்ற நினைவுகள் மாக்கடலை மிஞ்சும்;
மண்பட்டு உயர்ந்திட்ட பெண்ணான அன்பால்
பாவையும் தன்னை அவனுடைமை என்பாள்;
கண்பட்டுப் போகுமோ அவன்செயல் என்று...
கன்னியும் சிரித்தே கவலையில் ஆழ்ந்தாள்!

அழகுக்கு அழகூட்டி அவனும் பார்க்க
அச்சமும் ஆவலும் அவளைத் தாக்க;
பழகிட்ட பருவத்தாள் தலை கவிழ்ந்தாள்
பாவிடும் உணர்ச்சியால் நிலை குலைந்தாள்!
குழம்பிட்ட நிலையிலும் எழிலினைக் கூட்டும்
குமரியின் பொலிவு வியப்பினை ஊட்டும்;
மழைவிட்ட வானம்போல் மதிமுகத் தோற்றம்...
மன்னிய காளையை மனத்துயர் வாட்டும்!

- இளந்திரன்

முகப்பினில் தோன்றுகின்ற
மூவர்ண ஓவியத்தை
அகத்தினில் ஒளியை ஏற்றும்
அழகார்ந்த மணிவி ளக்கை
நகக்குறி மெய்யில் கண்டு
நாணத்தில் மூழ்கிக் காதல்
முகத்தினில் ஒன்றி வாழும்
உயிர்போல்வளைக் கண்டு கொண்டான்

காடினை மறைக்கும் கூந்தல்
கருமணை மல்லாத் தாங்க
காதினில் வளையம் தூங்கக்
கரமதில் வளை துலங்கக்
காதலி வருதல் கண்டே
கரையிலா உணர்ச்சி பொங்கக்
காதலன் சந்திக் கின்ற
காட்சிதான் என்னே! என்னே!

என்னைத்தைக் காட்ட முந்தும்
இமைத்திரைக் குள்ளி ருக்கும்
வண்ணக்கண்; அதன்மேல் தன்னை
வளைந்ததனிற் புருவம், மேலும்
கண்மையால் துலக்க மென்று
கைவளையின் உள்ளி ருக்கும்
நுண்ணிய எழுதுகோலை
நொடிப்பொழுதில் அவனே தந்தான்.

எடுத்ததைத் தடுத்தி டாமல்
எத்தினை இருந்த தேனோ?
அடுத்தவன் தொடரும் போதில்
அஞ்சன மையி லேலே
துடித்திடும் இதயம் 'கூட்'த்
துடித்திடா வண்ணம் காத்து
வடித்தநற் சிலையைப் போல
மங்கையும் இருப்ப தேனோ?

- புலவர் மு. சிக்கந்தர்



செண்ட்ரல்

பி. வி. ஆர்

சிறந்த ஆட்டக்காரர்கள் பலர் அகில இந்திய ரயில்வேக்களில் பணி புரிகிறார்கள்.

அத்தியாயம் 15



அபிதம் கேதாரத்தின் நெஞ்சைப் பிளந்து விட்டாள். கோடானு கோடி மக்கள் அங்க அடையாளங்களிலும், முக விசேஷங்களிலும், நடையிலும், பாவனையிலும் வித்தியாசமாய், வேறுபாட்டுடன் இருக்கிறார்கள் என்றால், மன உணர்ச்சிகளில் இந்த வித்தியாசங்கள், வேறுபாடுகள் இன்னும் எத்தனை ஆயிரம் மடங்கு அதிகமாகத் தெரிகின்றன! அபிதம் கறை படியாத ஓர் உள்ளம். அதிலிருந்து பொழிந்த சத்திய மழை அவனை எவ்வளவு தூரம் நெகிழ வைத்து விட்டது!


கேதாரம் படுக்கையில் விழுந்தான். ஒரு கோடீசுவரனின் பெண் அவனுடைய காலில் விழுந்து கெஞ்சுகிறாள்! தான் அவனுக்கு அருகதையற்றவள் என்று வற்புறுத்துகிறாள். கேவலம் பணத்தால் ஒருவன் வாழ முடியாது. அது சௌகரியங்களைத்தான் கொடுக்கவல்லது. திருப்தியையும் அமைதியையும் கொடுக்காது என்று அறிவுரை வழங்குகிறாள்!

அவள் நேருக்கு நேராய் அவனுடன் பேசியபோது, அவன் அடக்கி வைத்திருந்த உணர்ச்சி இப்போது கட்டவிழ்த்துக் கொண்டு பீறிட்டது. திடீரென்று ஓர் அன்பு வெள்ளத்தில், மூழ்கி அவன் தன்னைத் தானே தேடலானான்.

கேதாரம் சென்னை செண்ட்ரலில் பம்பாய் மெயிலிலிருந்து இறங்கும் வரை வெறும் இயந்திரமாக வாழ்ந்தவன். ஓர் இன்ஜினியர் என்கிற முறையில் இயந்திரங்களுக்கு உயிரூட்டிக் கொண்டிருந்தவன். அன்பு, பாசம், பக்தி, பச்சாத்தாபம் இவையெல்லாம் அவனுடைய கண்ணுக்குத் தெரியாத தொலை தூரத்தில் மின்னின நட்சத்திரங்கள். இந்த நட்சத்திரங்களுக்கும் அவனுடைய



வாழ்க்கைக்கும் சிறிதும் சம்பந்தமே இல்லை. இதற்குக் காரணம் அவன் பிறந்த பிறவியும், வாழ்ந்த வாழ்க்கையும்தான்.



அவன் என்றைக்குமே மனத் திருப்தியுடன், தைரியத்துடன் வாழ்ந்ததில்லை. குழந்தைப் பருவத்திலிருந்தே அவனுடன் வறுமை இணையாக வளர்ந்து வந்தது. ஏழைமையை மறைக்க உற்றார் உறவினர் யாரும் இல்லை. ஜம்புநாதன் அவனுடைய படிப்பை ஏற்றுக் கொண்டார் என்றால், அது அவனுடைய முன்னேற்றத்தை உத்தேசித்து அல்ல. பிள்ளை இல்லாத அவர் அவனை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ள அவனுடைய சிறு பிராயத்திலேயே திட்டம் திட்டியிருந்தார். அவன் அவருக்குக் கடன்பட வேண்டும். அவன் பட்ட கடனை எப்போது, எப்படி, எந்த உருவத்தில் வசூல் செய்ய வேண்டும் என்பது அவருக்குத்தான் தெரியும்.

மாமாவின் உள் மனத்தைப் பற்றி அவன் முதலிலெல்லாம் கவலைப்படவில்லைதான். தான் ஓர் உயர்ந்த பதவியோடு உத்தியோக வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு அவர் தான் காரணம் என்று அவனுக்குத் தெரியும். இனிமேல் அவருடைய குடும்பம் அவனுடைய கையைத்தான் எதிர்பார்க்கும் என்பதையும் உணர்ந்திருந்தான்.

ஆனால் இதெல்லாம் இரண்டு மூன்று ஆண்டுகளாய்த் தோன்றிய எண்ணங்கள். அதற்கு முன்? முப்பது பைசா கொடுத்துப் பஸ்ஸில் போகலாமா? அல்லது நான்கு மைல் நடந்தே போய் விடலாமா என்று யோசித்த நாட்கள், மாதங்கள், ஆண்டுகள். பழுப்பேறிய வெள்ளை பாண்ட், இஸ்திரி இல்லாத ஷர்ட், அழுக்கான கைக்குட்டை இவற்றுடன் அவன் பொறி இயல் கல்லூரியில் பல மாணவர்களிடையே நடந்து சென்றபோது அவனுடைய மனத்தில் ஒரே ஒரு உணர்ச்சிதான் கொப்புளித்தது.

அதுதான் துக்கம்.

அவன் பிறந்தது ஒரு துக்கம். ஏழையாக வளர்ந்தது ஒரு துக்கம். நாலு பேர் அவனுடைய ஏழைமையைச் சுட்டிக் காட்டிப் பரிகசிக்கிறார்கள் என்று எண்ணி எண்ணி, மனம் வெந்து போனது ஒரு துக்கம். யாராவது அவனைப் பார்த்துவிட்டுப் பேசாமல் போனால், ஓர் ஏழையை ஒதுக்குகிறான் என்று அவன் தனக்குள் பொருமியது ஒரு துக்கம்.


பருவகாலப்
பூரிப்பைப்
பாங்குடன் கவரவே
தாவண்கெரே
'டெரீன்' காட்டன்கள், வாயில்கள்
மற்றும் கேம்ப்ரிக்குகள்

பிஞ்சு மனத்தில் தோன்றிய புண் ஆறவேயில்லை. ஏழ்மையை எதிர்த்து அவனால் போராட முடியாதுதான். ஆனால் அதை மறந்து, அலட்சியம் செய்து, தலை நிமிர்ந்து நடக்கலாமே? இதற்கு வேண்டிய நெஞ்சுரமும் திடமும் அவனிடம் இல்லை. தான் தாழ்ந்தவன், தாழ்த்தப்பட்டவன் என்ற எண்ணங்களே, மனப்பான்மையே அவனுடன் வளரலாயிற்று.

பொறியியல் கலையில் முதல் வகுப்பில் தேறி, ரயில்வேயில் பெரிய வேலையில் சேர்ந்த பிறகும், பழைய நிழல் அவனுடன் தொடர்ந்து வந்தது. டெரிலின் பாண்ட், டெரிலின் ஷர்ட், விதம் விதமான செருப்புக்கள், பூட்சுகள் எல்லாவற்றையும் அவன் சம்பளம் வாங்கிக் கொடுத்தது. ஏழ்மையை முறியடித்துவிட்டோம் என்று அவன் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். ஆனால் கண்ணாடி முன் நின்றபோது அவன் உடல் குன்றியது. வெளி வாழ்க்கையினால் மட்டும் ஒருவன் ஏழ்மையைக் களைந்துவிட முடியாது என்ற உண்மை முகத்தில் அறைந்தாற்போல் எழுந்தது.

மொத்தத்தில் கேதாரம் அதிருப்தி, ஏமாற்றம், சோகம் முதலான உணர்ச்சிகளைக் கக்கும் இயந்திரமானான். இந்த இயந்திரத்தில் என்றுமே அன்பு, பாசம், பக்தி போன்ற கனிப் பொருள்கள் பாய்ந்து சென்றதில்லை. அன்பும் பாசமும் இல்லாததால்தானோ என்னவோ, சுயநலம் மேலோங்கி நின்றது.

ஏழ்மையைப் பெண்கள் பரிகசிப்பார்கள் என்ற எண்ணம் — அந்த எண்ணம் ஏன் எப்படி அவன் மனத்தில் உதித்தது என்று அவனுக்கே தெரியாது— வெகு காலத்துக்கு அவனுள் வேரூன்றியிருந்தது. இதன் காரணமாக அவன் பெண்களையே வெறுத்து வந்தான். நாளடைவில் வெறுப்பு அலட்சியத்துக்கு இடம் கொடுத்தது. ஆனால் காரியாலயத்திலும், அக்கம் பக்கத்திலும் சில பெண்கள் அவனுடன் பேச நேர்ந்தபோது அலட்சியம் மெல்ல மெல்ல விலக ஆரம்பித்தது. ஆனால் அப்போதும் எந்தப் பெண்ணும் அவனுடைய மனத்தைக் கவரவில்லை. பெண்ணிடம் நெருங்கிப் பழகினால் அவள், மெள்ள மெள்ள அவனைத் தன் உடைமையாக்கிக் கொண்டு விடுவாள் என்ற பயம் — இதுவும் காரணமில்லாமல் தோன்றியதுதான் — பிறந்தது.

வெறுப்பு, அலட்சியம், பயம் காரணமாகத்தான் அவன் மனத்தில் ஒரு குதூகலமோ, கிளுகிளுப்போ உண்டாகவில்லை. அதே காரணத்தால்தான் வாழ்க்கையில் எவ்வளவோ ருசியான அம்சங்கள் இருக்கின்றன என்பதை உணர முடியவில்லை. இல்லறம், தாம்பத்தியம், குழந்தைகள் இவைகளைப் பற்றியெல்லாம் அவனால் மனம் விட்டுச் சிந்திக்க முடியவில்லை. ஆண்—பெண் உறவெல்லாம் வெறும் உடல் உறவில் தோன்றி உடல் உறவில் முடியக் கூடியது என்ற தப்பான, கேவலமான கருத்து அவனுடைய உள்ளத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையாகத் தோன்றியது. ஆண் — பெண் உறவு உள்ளத்தின் அடிப்படையில் பிறப்பது. அது தெய்விகமானது என்ற எண்ணங்களே அவனுள் எழவில்லை. யாராவது இந்த விஷயத்தில் சர்ச்சை செய்தாலும் அவன் ஒதுங்கிக் கொண்டான்.

இவ்வளவெல்லாம் இருந்தும் கடந்த ஓரிரு ஆண்டுகளாக, அவன் தன் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்கப் பாடுபட்டான். ஜனங்களுடன் கலந்து பழகி வாழ வேண்டும் என்ற துடிப்புப் பிறந்தது. ஆனால் பழைய வாழ்க்கை குறுக்குச் சுவர் எழுப்பியது. அதைத் தகர்க்க அன்பு, பாசம், பக்தியால்தான் முடியும் என்று எண்ணினான். குழந்தைகளிடம் எப்படி அன்பைக் காட்டுவது என்றுகூட அவனுக்குத் தெரியவில்லை. அவனைக் கண்டாலே குழந்தைகள் மிரண்டு ஓடின.

ஆனால் அவன் முயற்சியைக் கைவிடவில்லை. மனம் தளரவில்லை. காரியாலய விருந்துகளில் ஒதுங்கியே இருக்கும் அவன் கலந்து பழக ஆரம்பித்தான். சிநேகிதர் வீடுகளுக்குச் செல்லலானான். அங்கிருக்கும் குழந்தைகளுக்குச் சாக்லேட்டும் பிஸ்கட்டுமாய்க் கொடுத்து வசியப்படுத்தினான். பிறருடைய சுக துக்கங்களை விசாரிக்கலானான். எவ்வளவோ இடங்களில் தன் இதயம் உணராமல் உதடு மட்டுமே இயங்குகிறது என்று நொந்து கொண்டான். இதயத்தை உதட்டோடு இணைக்க அவன் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள முயன்றான்.

மெள்ள மெள்ள அவனுடைய முயற்சி பலனளித்தது. வாய் விட்டுச் சிரிக்கக் கற்றுக் கொண்டான். ஹாஸ்யத்தை அனுபவிக்க அவனால் முடிந்தது. துக்கத்தில் கண்ணீர் சுரக்கலாயிற்று. மறைந்து கிடந்த உணர்ச்சிகள், ஒவ்வொன்றாகத் தோன்ற ஆரம்பித்தன.

* * *

இப்பேர்ப்பட்ட கேதாரம் இப்போது அமிர்தத்துக்காகக் கண்ணீர் வடித்தான். அதே சமயத்தில் பம்பாய் விக்டோரியா டெர்மினலில் நற்செய



''நீ குற்றவாளியா இல்லையா?''
''குற்றவாளி இல்லை.''
''இதற்கு முன்னால் நீ ஜெயிலுக்குப் போன துண்டா?''
''இல்லீங்க! இதுதான் என் முதல் திருட்டு!''

லாகச் சந்தித்த ரேணுகாவின் மூல மாகப் பரிச்சயமான மங்களா நெஞ்சில் நின்றாள். அவள் ஏன் அப்படி இரவும் பகலும், உண்ணும்போதும் உறங்கும்போதும் அவனுடைய நெஞ்சில் நிறைந்திருக்கிறாள் என்று அவனுக்குப் புரியவில்லை. மணி சொல்லுவதுபோல, அவள் அவனை ஈர்ப்பதன் காரணம், அவனுடைய நெஞ்சிலே வியாபித்து நிற்பதன் காரணம், அவனுடைய மனத்தில் திடீரென்று பிறந்து விட்ட காதல்தானோ?

கேதாரத்தால் நம்ப முடியவில்லை. அவனுடைய மர மனத்தில் எப்படி நளினமான காதல் உதிக்க முடியும்? ஆண் — பெண் உறவு உடலுறவின் அடிப்படையில் இயங்குவது என்று ஒரு கொள்கையாகக் கொண்டிருந்த மனத்தில் எப்படிக் காதல் மலர முடியும்? மங்களா அருகில் இல்லாதபோது அவளைப் பார்க்கவும் முடியாத நேரங்களில் ஏன் அவள் அவன் கண் முன் தோன்றுகிறாள்? அவளுடைய சிரிப்பில் ஏன் மனம் லயிக்கிறது? பேச்சில் ஏன் மனம் பறி போகிறது? அவளுடைய அமைதியில் ஏன் அவன் நெஞ்சம் துடிக்கிறது? அவள் அருகில் இருந்தாலே ஏன் மனம் பதறுகிறது?

எல்லாப் பெண்களையும் போல மங்களாவும் ஒரு பெண். ஆனால், மற்றவர்களை ஒதுக்கிவிட்டு, அவள் தனித்து அவன் முன் நிற்கிறாள் என்றால் அதற்குக் காரணம் அவள் இல்லை. அவன்தான். அவனுடைய இதயம்தான். அவனுடைய உணர்ச்சிகள்தான்! இந்த உணர்ச்சிகள் மங்களாவைப் பற்றி நினைக்கின்றன. அவளுடைய உடலைப் பற்றியோ, உடலின் அங்கங்களைப் பற்றியோ, அங்கங்களின் அமைப்பைப் பற்றியோ, அமைப்பின் வசீகரத்தைப் பற்றியோ நினைப்பதில்லை. அவனுடைய தத்துவம், கொள்கை எல்லாம் பொய். அவனுடைய கற்பனை. ஈரமில்லா நெஞ்சின் வெடிப்பு. அவன் மங்களாவை விரும்பினான் என்றால், அவளுடைய இதயத்தைத்தான் விரும்பினான். அந்த இதயம் எந்த உடலில் இருந்தாலும் அந்த உடலுக்கு அவன் மங்களா என்றுதான் பெயர் சூட்டியிருப்பான்.

மங்களா!
மங்களா!

கேதாரம் பெருமூச்செறிந்தான்.

திடீரென்று எழுந்த மணியின் குரல் அவனைத் திடுக்கிட வைத்தது.

''ஹலோ கேதாரம்.''

''உள்ளே வா.''

வாசற்படியிலிருந்து மணி மெதுவாக நடந்து வந்தான். கேதாரத்தின் முகத்தைப் பார்க்கவே சகிக்கவில்லை.

''என்ன உன் உடம்புக்கு?''

''ஒன்றுமில்லை. உட்கார். யார் அங்கே வெளியே நிற்கிறார்கள்?''

''எட்மண்ட்... நீயும் உள்ளே வா!''

''ரயில்வே கார்டு ரொஸாரியோ என்று ஒரு நல்ல மனிதர் இருக்கிறார். அவருடைய பிள்ளை எட்மண்ட்.''

''உள்ளே வாங்க மிஸ்டர்!'' என்றான் கேதாரம்.

எட்மண்ட் அலட்சியமாக நடந்து வந்தாலும், ஒருவித பயம், அடக்கம் எல்லாம் முகத்தில் பிரதிபலித்தன.

''கேதாரம், இவனைப் பார்த்தாயா?''

''உம்... விஷயத்தைச் சொல் மணி!''

''இவன் ரொஸாரியோவின் பிள்ளை.''

''அதுதான் சொன்னாயே.''

''அவர் ரொம்ப நல்லவர்.''

''இதையும் சொல்லியாகிவிட்டது.''

''எட்மண்ட் பெரிய ஹாக்கி ஆட்டக்காரன். தமிழ்நாட்டுக் கோஷ்டியில் ஆடுகிறான்..... தென்னிந்திய ரயில்வே கோஷ்டியிலும் போன வருஷம் வரை ஆடியிருக்கிறான்.''

''இப்போ ரயில்வேயில் இல்லையாக்கும்?''

''ஆமாம்... அதை விட்டுத் தள்ளு... நல்ல ஸ்போர்ட்ஸ்மன்.''

''ஹூம், பேஷ்! அப்புறம்?''


மணி எட்மண்ட் பக்கம் திரும்பினான். எட்மண்ட் எழுந்தான்.

''நான் வருகிறேன் ஸார்!'' என்றான்.

கேதாரம் பதில் சொல்லுவதற்குள் எட்மண்ட் வெளியேறியாகிவிட்டது.

''ஏண்டா அவனை அனுப்பி விட்டாய்?'' கேதாரம் விழித்தான்.

''அவன் வந்த காரியம் முடிந்து விட்டது.''


உங்கள் உடலுக்குத் தேவை 23 ஊட்டச் சத்துக்கள்
பாலிலே உள்ளவை 9
காம்ப்ளான் 23 சத்துக்களும் கொண்டது
Complan
காம்ப்ளான் — முழுமையான உணவு



"பழமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்."



கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களையும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

கால்கேட் பற்பொடி நவீன பல் பராமரிப்பை சிக்கனமாக்குகிறது. அதன் குளுமையான, இன்மணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். உங்கள் குடும்பத்திற்கு இன்றே ஒரு டின் வாங்குங்கள்.

TP.G. 30. TM

சாதாரண சரும நோய்களுக்கு நிவாரணம்

CIBA

வயோஃபார்ம்

க்ரீம்

CIBA/VIO-69 TM

''என்னடா வந்த காரியம்? அதைப் பற்றி அவன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.''

''இனிமேல்தான் பேச்சு!''

''சரி, பேசு.''

''எட்மண்டுக்கு ஓர் ஆசை.''

''என்ன?''

''மேற்கத்திய ரயில்வே கோஷ்டியில் ஹாக்கி ஆடணும். பம்பாயில் ஆடினால்தான் 1972 ஒலிம்பிக்கில் ஆட சான்ஸ் கிடைக்கும் என்று நம்புகிறான்.''

''ஆடட்டும்.''

''அவன் ஆடறது, ஆடாதது உன் கையில் இருக்கிறது.''

''என் கையிலா?''

''ஆமாம்! உன் கையில்தான்.''

''இங்கே கொஞ்ச நாட்கள் ஸ்மித்தியாக இருந்திருக்கிறான். படிப்பு அதிகம் இல்லை. ஆனால் உடம்பில் வலு இருக்கிறது. இவனுடைய அப்பாவுக்கு இவன் இப்போது ஒரு முள். அந்த முள்ளை நீதான் எடுக்கணும்.''

''எடுத்து வெஸ்டர்ன் ரயில்வே காலில் குத்தணும்! அப்படித்தானே?''

''ஆமாம். ஆனால் அவன் ஹாக்கி ஃபீல்டில் மலர்களாகத் தூவுவான்! அவனை அங்கே கொண்டு வந்த பெருமை உனக்குத்தான் கிடைக்கும்.''

''நான் என்ன செய்ய முடியும்? நான் ஒரு என்ஜினீயர். ரயில்வே சர்வீஸ் கமிஷன்தான் தேர்ந்தெடுப்பார்கள்.''

''அந்தக் கமிஷன் தேர்ந்தெடுப்பதற்கு ஆதாரமாக சர்ட்டிபிகேட்கள் இருக்கின்றன. உன்னுடைய ஸ்பார்க் முத்தாய்ப்பாக இருக்கும்.''

''பார்க்கலாம்.''

''இது மந்திரிகளின் வார்த்தை.''

''சரி, பார்க்கிறேன்.''

''இது முதலாளிகளின் வார்த்தை.''

''என்ன சொல்லணும் என்பதை நீயே சொல்லு.''

''செய்கிறேன்.... கண்டிப்பாகச் செய்கிறேன். அவசியம் செய்கிறேன்.''

''சரி.''

''சொல்லு. நான் காதாரக் கேட்கிறேன்.''

''செய்கிறேண்டா.... நிச்சயமாகச் செய்கிறேன். நல்ல மனுஷன் பிள்ளை என்கிறாய்.....''

''தாங்க்யூ!'' மணி எழுந்தான்.

அதே சமயம் ஜம்புநாதன் பெருங்காய விளம்பரப் பையுடன் நுழைந்தார்.

''நான் அப்புறம் பார்க்கிறேன், கேதாரம்.''

அவன் தலை மறைந்ததும் கேதாரம் எழுந்தான். மாமா உட்கார்ந்த நாற்காலியின் அருகே வந்தான். அவனுடைய பார்வையே பயத்தை உண்டாக்கியது.

''கேதாரம்....'' அவர் நெகிழ்ந்தார். எஸ். எஸ். வின் அறையில் உண்டான அனுபவம், வலி எல்லாம் இன்னும் நெஞ்சைவிட்டு மறையவில்லை.

''மாமா...! நீங்கள் என் தாயாருடைய சகோதரர். என்னை ஆளாக்கியவர்.... நான் உங்களுக்கு ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இதற்காக நான் என் வாழ்க்கையை உங்கள் காலடியில் வைத்து நாசமாகப் போக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.... புரிந்ததா?''

''புரியலேடா... நீ என்ன சொல்றே?''

''புரியலே என்றால், நேரே ஆதிசேஷன் பங்களாவுக்குப் போங்கள். அங்கே அவருடைய பெண் அபிதம் என்று ஒரு தங்கக் கட்டி இருக்கிறது. அவளிடம் போய்க் கேளுங்கள்.''

''அங்கேயிருந்துதான் வருகிறேன். அபிதம் சிரிச்சுப் பேசினாளே.... ஒண்ணும் சொல்லவில்லையே, நீ ஏதோ உனக்குள்ளே நினைக்கிற மாதிரி.''

''என்னுடைய மாமா, என்னை முன்னுக்குக் கொண்டு வந்தவர், கேவலம் பணத்துக்காகப் பொய் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. நெற்றியிலே குங்குமம் இருந்தால் போதுமா மாமா? நெஞ்சில் சத்தியம் இருக்க வேண்டாமா?''

''என்னடா, என்னை வதைக்கிறே? நான் என்ன செய்துவிட்டேன்?''

''அபிதம் இங்கே வந்திருந்தாள். ஒரு மணி நேரம் இருந்தாள்! உங்களுடன் எப்படிச் சிரிச்சுப் பேசியிருக்க முடியும்?''

''சரி. இப்போ என்ன சொல்றே?''

''நானும் அபிதமும் எங்களுக்குள் பேசி, ஒரு முடிவுக்கு வந்தாச்சு!''

''அப்பாடா! என் கவலை விட்டது. நல்ல பெண்... தேதியையும் நீங்களே முடிவு பண்ணியிருக்கிறீர்களா? கண்ணை மூடிக்கொண்டு செய்யாதீர்கள். நான் நட்சத்திரமெல்லாம் பார்க்க வேண்டும்.''

''எங்களுக்குக் கலியாணம் நடக்காது. இந்த விஷயத்தில் நாங்கள் ஒருத்தருக்கு ஒருத்தர் வாக்குக் கொடுத்துவிட்டோம்.''

ஜம்புநாதன் எழுந்தார். ''நான் கட்டின கோட்டையை இடித்துவிட்டாய், கேதாரம்! இடித்து விட்டாய்!''

''கோட்டையை இடிக்கவில்லை, மாமா! குத்தாலம் ஆதிசேஷன் ஹாலைத்தான் இடித்தேன்.''

''கோடி ரூபாய்க்குச் சொத்து இருக்கு'' என்றார் ஜம்புநாதன்.

''வேறு ஏதாவது பேச்சு இருக்கா, மாமா?''

"நாளைக்குக் கிராம்ப்டன் என்ஜினியர் பெண்ணை...."

"இனிமேல் பெண் பார்க்கும் படலம் கிடையாது. இனி ஒரு பெண்ணையும் பார்க்கிறதாக உத்தேசம் இல்லே."

"இதுக்கு என்னடா அர்த்தம்?"

"நானே என் கல்யாணத்தைத் தீர்மானம் செய்து கொள்ளுகிறேன்..."

"டேய், கேதாரம்."

"நான் பெண் பார்த்தாச்சு. எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு."

"யாருடா அவள்?"

"போகப் போகத் தெரியும்."

"வரதட்சிணை எல்லாம் பேசியாச்சா.... நல்ல குலமா, கோத்திரமா...?"

"வரதட்சிணை காலணா கிடையாது."

"ரிஜிஸ்தர் கல்யாணமா?"

"அன்ரிஜிஸ்டர்ட்.... மாமா பேசாமல் போங்கள். நான்தான் அவளைப் பார்த்துத் தீர்மானம் செய்திருக்கேனே தவிர, அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கா இல்லையான்னு எனக்குத் தெரியாது!"

"அப்பாடா! உசிர் வந்தது! அவள் சம்மதம் வர்றதுக்குள்ளே, கிராம்ப்டன் என்ஜினியர் பெண்ணை..."

அவரை முடிக்கவிடவில்லை கேதாரம்.

"நோ" என்று கத்தினான்.

அதே சமயம் நாலாவது பிளாட்பாரத்திலிருந்து ஜோலார்ப் பேட்டை பாஸஞ்சர் குரல் கொடுத்து விட்டுப் புறப்பட்டது. (தொடரும்)



அபரிமித வரியும் அளப்பரிய காதலும்!



பிரிட்டிஷ் பிரதம மந்திரிகளும், அரசியல்வாதிகளும் பாராளுமன்றத்தில் நகைச்சுவையையும் நையாண்டியையும் கொட்டித் தீர்த்திருக்கிறார்கள்! இவற்றைத் தொகுத்துத் தருகிறது "தி விட் ஆஃப் வெஸ்ட் மினிஸ்டர்" என்னும் ஹாஸ்யக் களஞ்சியம். மாதிரிக்குச் சில:

□ 'லேடி ஆஸ்டர்' என்ற சீமாட்டியிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளாதவர்களே கிடையாது. ஒரு கூட்டத்தில் ஒருவர் இவருடைய வாயைக் கிளறுவதற்காக, "பன்றியின் காலில் எத்தனை விரல்கள் உள்ளன?" என்று கேட்டார். லேடி ஆஸ்டர் உடனே சொன்னார்: "பூட்சைக் கழற்றிவிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று!

□ ராப் பட்லர் இன்றைய 'பவிஷு' அன்றே சொல்லி விட்டார்:

"வரிகளையும் நீட்டி மக்களையும் மகிழ்விப்பதென்பது காதல் புரிந்து புத்திசாலியாகவும் இருக்க முயல்வது போலாகும்!"

□ ஆண்ட்ரூ போனர்லா என்பவர் சர்ச்சிலையே மடக்கியவர். சர்ச்சில் தம்முடைய பதவியைப் பற்றி அலுத்துக் கொண்டார். "போரே இல்லாமல் போர் மந்திரியாக இருப்பதால் என்ன பயன்?"

ஆண்ட்ரூ சொன்னார்: "போர் இருந்தால் உங்களைப் போர் மந்திரியாக ஆக்க மாட்டோம்!"


□ ஹரால்ட் மாக்மில்லனின் மகன் தன் தந்தையின் அரசாங்கத்தையே கிண்டல் செய்து 'டைம்ஸ்' பத்திரிகையில் ஒரு கடிதம் எழுதியிருந்தபோது எல்லோரும் அதைப் பாராட்டுவதைக் கேட்டு மாக்மில்லன் சொன்னார்: "அவன் அத்தனை புத்திசாலித்தனத்தை யாரிடமிருந்து பெற்றான் என்று நான் சொல்லத் தேவையில்லை!"


□ ஐரிஷ்காரர்களை நையாண்டி செய்தார் ஸர் நிகல்ஸன் இப்படி: "ஐரிஷ்காரர்கள் தங்களை யாரும் வாழ்த்துவதை விரும்புவதில்லை. தங்கள் எதிரிகளை மற்றவர்கள் தூற்றுவதையே அவர்கள் விரும்புகிறார்கள்!"

தொகுப்பு: கேஷிஸம்.









அரைப் பங்கு செலவில் இரு பங்கு வெளிச்சம் பெறுங்கள். பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்திப் பாருங்கள்.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் உடனே பொருத்துவதற்கு ஏற்றவாறு தயார் செய்யப்படுகிறது- லாம்ப், லாம்ப் ஹோல்டர், ஸ்டார்டர், ஸ்டார்டர் ஹோல்டர் மற்றும் பலாஸ்டுடன் சேர்ந்து, முன் கூட்டியே அது ஒரு கனெக்டருடன் இணைக்கப் படுகிறது. நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவுதான் — ஸ்ட்ரிப்பின் இரு முனைகளையும் சுவரிலோ அல்லது மேலிருந்து கீழாகவோ ஆணிகள் போட்டு முடுக்கி விட வேண்டும், மெயின்களை கனெக்டருடன் இணைக்க வேண்டும். இப்போது விளக்கு எரிவதற்கு தயார்.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டில் ஒரு 40 வாட் பிலிப்ஸ் TL ப்ளுரோசென்ட் லாம்ப் பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த லாம்ப் இரண்டு 100 வாட் பல்புகளை விட அதிக வெளிச்சம் தரக்கூடியது. இருப்பினும், ஒரு 40 வாட் பல்புக்கு வேண்டிய மின்சாரமே அதற்கு தேவையாகிறது. அதனால், மின்சார செலவுக் குறைப்பின் மூலமே உங்களுக்கு அதிகமான லாபம் ஏற்படுகிறது.

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா ?
பிலிப்ஸ் வாங்குங்கள்.

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்,

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டில் பொருத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு மூலப்பொருளும் அதை அதிக நாட்கள் உழைக்க உதவுகின்றது. அதன் மூலம் உங்கள் பணத்திற்கு அதிகப்படியாகவே வெளிச்சத்தை நீங்கள் பெறுகிறீர்கள். உதாரணமாக, அதில் பொருத்தப்பட்டிருக்கும் பலாஸ்ட் லாம்பிலிருந்து முழு அளவு வெளிச்சத்தையும் பெறுவதற்கு ஏற்றவாறு தயார் செய்யப்பட்டிருக்கிறது- லாம்ப் ஹோல்டரும், ஸ்டார்டர் ஹோல்டரும் கச்சிதமாக இணையுமாறு பொருத்தப்பட்டிருக்கிறது. அதனால் ஒவ்வொரு முறையும் உங்கள் லாம்ப் தடங்கலே இன்றி எரியும். ட்யூபை உருட்டவோ, திருகவோ வேண்டிய அவசியமில்லை.

வருங்காலத்தைப் பற்றி நன்கு சிந்தனை செய்து பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டில் பணத்தை முதலீடு செய்யுங்கள். அதைவிட சிறந்த லாம்ப் வேறெதுவுமில்லை.

பிலிப்ஸ் PHILIPS

தெளிவு



துர்கா ஜானகிராணி

ராமகிருஷ்ணய்யா எழுந்து உட்கார்ந்தார். சந்தேகமில்லை. யாரோ கதவைத் தடதட என்று தட்டத்தான் செய்கிறார்கள். யார் இந்த நடுநிசியில் நம்மைக் கூப்பிடுபவர்கள்? வெளியில் மழை பெய்யும் இரைச்சல். அதனை ஊடுருவிக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

''யாரு?'' என்று பலமாகக் குரல் கொடுத்தார். அவர் கொடுத்த குரல் கேட்காமலே வெளிப்பக்கம் இருந்தவர்கள் கதவைத் தட்டிக் கொண்டிருந்தார்கள்.

''வந்துட்டேன், வந்துட்டேன். யாரு நீங்க?'' என்றார் அவர்.

''வழிப்போக்கர்கள் ஐயா. தயவுசெய்து கதவைத் திறவுங்கள்'' என்று வெளியிலிருந்து ஒரு பெண்ணின் உரத்த குரல் கேட்டது.

ராமகிருஷ்ணய்யா கதவைத் திறந்தார். குளிர்ந்த தூவானக் காற்றுடன் இரண்டு மாதர்கள் உள்ளே நுழைந்தனர். அவர்களுக்குப் பின்னால் வண்டிக்காரன் தலையில் பெட்டியை எடுத்துக் கொண்டு உள்ளே வந்து கீழே வைத்தான்.

''இருட்டிவிட்டதால் இவர்கள் துறையில் இறங்க மறுத்து விட்டார்கள், ஐயா. நான் தான் வண்டி கட்டி அழைத்து வந்தேன்...''

''இவர்கள் பாயம் போக வேண்டுமாம். இவ்வளவு நேரத்துக்கு மேல் இவர்களால் போக முடியாது என்று நான்தான் இங்கே இறக்கி விட்டேன். இராத்திரி இங்கு தங்கி விட்டுப் பொழுது விடிந்ததும் போய் விடுகிறார்களாம்...'' என்றான் வண்டிக்காரன்.


அவர்களில் ஒருத்தி நடுத்தர வயதினள். இரண்டாமவள் நிறை மாதக் கர்ப்பிணி. ''ஐயோ! நிறைமாதக் கர்ப்பிணியை அழைத்துக்கொண்டு புறப்பட்டீர்களே, அம்மா, இந்த மழையிலும், நடு நிசியிலும்'' என்றார் ராமகிருஷ்ணய்யா. கர்ப்பிணிப் பெண் பெட்டியின் மீதமர்ந்து கொண்டாள். துணிகள் சொட்டச் சொட்ட நனைந்திருந்தன. முகத்தில் முத்து முத்தாக நீர்த்துளிகள்!

''அம்மா!'' என்று முனகிக் கொண்டே ஒரு பக்கமாக வளைந்து கொடுத்தாள். அவளை அந்த நடுத்தர மாது பிடித்துக்கொண்டு, ''ஏம்மா வலிக்கிறதா?'' என்று சொல்லிக் கொண்டு அவள் தலையை நிமிர்த்தினாள்.

''தேவருபள்ளி அம்மனுக்கு ஒரு வேண்டுதலை இந்தப் பெண்ணுக்கு. இதுவரைக்கும் போகத் தோதுப்படவில்லை. மாமியார்க்காரி இதுவரைக்கும் அனுப்பாமலே இருந்துவிட்டு இப்பொழுதுதான் அனுப்பி யிருக்கிறாள். மாப்பிள்ளை உடன் வரச் சௌகரியப்படாமல் போய்விட்டது. துறையில் இறங்கும்போதே வானம் மூடிக்கொண்டு வந்தது. அதனால் அங்கே இருக்க விரும்பாமல் வண்டிக்காரனைக் கெஞ்சிக் கேட்டு வந்தோம். எப்படியும் இன்றிரவுக்குள் தேவருபள்ளி போய்ச் சேர மாட்டோம். இது பெரிய ஊரு. எப்படியும் நம்மவர் என்று நாலு வீடுகள் இருக்கத்தானே செய்யும்? ராத்திரி இங்கு தங்கிவிட்டுப் போவோம் என்று முடிவு செய்தோம். என்ன சொல்வது போங்கள், எங்கள் கஷ்டத்தை!'' என்று சொல்லிக்கொண்டே மகளின் தலையை நீவிவிட்டாள் தாயார்க்காரி.

''ஆனால் எங்க வீட்டிலே பெண்டுகள் யாருமில்லை. நான் ஒண்டிக் கட்டை. உங்க பெண்ணுக்கு என்ன தேவையோ நீங்களே பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே வீட்டின் உட்பக்கம் போனார்.

இன்னொரு லாந்தர் விளக்கை எடுத்து வந்து ஏற்றினார். தம் வீட்டில் வேலைக்காரியைத் தவிர்த்து இன்னொரு பெண்மணி அடி எடுத்து வைத்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன!



இவர்களுக்கு என்ன வேண்டுமோ, என்னவோ! ஒன்றும் புரியவில்லை என எண்ணிக் கொண்டார் ராமகிருஷ்ணய்யா.

தம் சிறிய கட்டிலின் மீதிருந்த படுக்கையை எடுத்துக் கீழே போட்டு விட்டு, அந்தக் கட்டிலை இப்புறம் இழுத்து வந்தார். தம் வீட்டில் இருந்தவையே இரண்டு அறைகள்தாம். முன் அறை சமையலறை. தம் அறை போனால் சமையலறைக்கு ஒட்டினாற்போல் ஒரு சின்ன அறை உண்டு. அதில் வகை வகையான சாமான்கள் இருந்தன.

"அம்மா, இன்றைய இரவுக்கு இந்தக் கூடத்தில் படுத்துக் கொள்கிறீர்களா?" என்று கேட்டார்.

"அப்படியே ஆகட்டும், ஐயா. எங்களுனும் சரியே. என் பெட்டியில் போர்த்திக் கொள்ளப் போர்வைகள் முதலியன இருக்கின்றன. நீங்கள் ஒன்றும் சிரமப்பட வேண்டாம்" என்று சொன்னாள் அம்மாது.

ராமகிருஷ்ணய்யா உள்ளே போய், சமையலறைக் கதவைத் திறந்தார். ஒரு சிறிய செம்பு எடுத்து அதில் நிறையப் பாலை ஊற்றி, சர்க்கரையும் போட்டுக் கலந்து, வாசல் அறைக்கு எடுத்து வந்தார். அந்தப் பெண் படுத்திருந்தாள். பெரியவள் பக்கத்தில் பாயின் மீது உட்கார்ந்திருந்தாள்.

"இந்தப் பாலைச் சாப்பிடுங்கள். எப்போது என்ன சாப்பிட்டீர்களோ, பாவம்!" என்று சொன்னார் ராமகிருஷ்ணய்யா.

"நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள் ஐயா. சமையல் உள் அங்கேதானே இருக்கு! இராத்திரி வெந்நீர் ஏதாகிலும் தேவைப்பட்டால் போட்டுக் கொள்ளுகிறேன். பாவம், உங்களை இந்த நடுநிசி வேளையில் எழுப்பி வைத்தோம். நாங்கள் அவஸ்தைப் படுவது போதாதென்று உங்களுக்கும் சிரமம் கொடுக்கிறோம்."

ராமகிருஷ்ணய்யா ஒரு நிமிஷம் சும்மா நின்றார். பிறகு மெள்ளத் தமது அறைக்குச் சென்றார். விளக்கைச் சிறிது பண்ணிவிட்டுப் பாயை விரித்து அதன் மீது தலையணையைப் போட்டுப் படுத்துக் கொண்டார். பொழுது விடிந்தால் இவர்களுக்கு என்ன என்ன தேவைப்படுமோ என்ற கவலை அவரைப் பற்றிக் கொண்டது. பாவம், அந்தப் பெண்ணைப் பார்த்தால் ரொம்பவும் அலுத்துப் போனவளாகக் காணப்படுகிறாள். இன்னும் எட்டு மைல் வண்டியில் அவளால் போக முடியுமோ முடியாதோ? வேலைக்காரி அச்சம்மாவைக் கொஞ்சம் இருந்து அவர்கள் தேவைகளைக் கவனிக்கச் சொல்ல வேண்டும். ஒன்பதரைக்கெல்லாம் நான் பள்ளிக் கூடம் போயாக வேண்டும். கோடை விடுமுறைக்குப் பின் பள்ளி திறக்கப்படுவதால் வேலை நிறைய இருக்கும். இவர்கள் சாப்பாடு விஷயம் எப்படியோ?

இப்படிப் பல விதமான எண்ணங்களிடையே, 'யாரோ பார்த்துக்கொள்ளுகிறார்கள்' என்ற நம்பிக்கை பிறந்தது. அவர்கள் வந்ததிலிருந்து அவர் உள்ளம் அடைந்த கலவரம் சற்றுத் தணிந்தது. மெல்லத் தூக்கமும் வந்தது.

"ஐயா, ஐயா! உங்களைத்தான்!" என்று அழைக்கும் குரல் அவர் காதில் விழுந்தது.

கனவோ என்று எண்ணித் திரும்பிப் படுத்துக் கொண்டார். மெல்ல முக்கி முனகும் சத்தம் காதில் விழுந்தது. அம்முனகல் அவரைத் தூக்கத்திலிருந்தும் எழுப்பி விட்டது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். கனவல்ல; நிஜமே என்பதை உணர்ந்தார். அந்த நடுத்தர மாது தம்மை அழைப்பது காதில் விழுந்தது. எழுந்து வெளியே வந்தார்.

அந்த மாது கலவரமுற்றவளாகக் காணப்பட்டாள். "ஐயா, பெண்ணுக்கு இடுப்பு வலி ஏற்பட்டிருக்கிறது!" என்றாள்.

ராமகிருஷ்ணய்யாவுக்கு முனகல் மிகத் தெளிவாகக் கேட்டது. "ஐயோ! இப்பொழுது என்ன செய்யச் சொல்றீங்க?" என்றார் அவர்.

"ஐயா, உங்களுக்கு வேண்டிய தொல்லை கொடுக்கிறோம். இங்கு அருகில் யாராகிலும் பிரசவம் பார்க்கும் மருத்துவச்சி இருக்கிறார்களா? அழைத்து வருகிறீர்களா! எனக்குக் கைகால் ஆடவில்லை" என்றாள்.

"அப்படியே ஆகட்டும் அம்மா! போய் வருகிறேன்!" என்று சொல்லி மேல் வேஷ்டியை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே வந்தார். மணி நாலரை அடித்தது. "கதவைப் போட்டுக் கொள்ளுங்கள்! ஜாக்கிரதை!" என்று சொன்னார்.

* * *

வெளியே நிலவு மங்கலாகக் காய்கிறது. எங்கோ தூரத்தில் காக்கை ஒன்று கரைந்தது. தெருவில் ஆங்காங்கு தண்ணீர் தேங்கியிருந்தது. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு தம் மனைவி பிரசவ வேதனைப் பட்டுக் கொண்டிருந்தபோது, நடு ராத்திரி வேளையில் தம் மைத்துனன் இப்படித்தான் வெளியில் போனான். தாம் நடையில் உலாவிக் கொண்டும், வானத்தைப் பார்த்துக்கொண்டும் ஒன்றும் தோன்றாமல் நின்றுகொண்டிருந்தது நினைவுக்கு வந்தன. அப்பொழுது தான் சிரத்தையற்றிருந்ததற்குத் தண்டனையாக இப்போது இது ஏற்பட்டதோ என்றும் எண்ணிக் கொண்டார்.

"ராமுலு!" என்று அழைத்தார் தம் பள்ளிக்கூட சேவகன் வீட்டு வாசலில் நின்று.

"யாரு?" என்று உள்ளிருந்து குரல் வந்தது. இரண்டு நிமிஷங்களில் ராமுலு வெளியே வந்தான். இருட்டில் சற்றுக் கூர்ந்து பார்த்தான். "ஐயா, தாங்களா?" என்று கேட்டான் கவலையோடு.

"ஒன்றும் ஆகிவிடவில்லை ராமுலு. யாரு...! இங்கு மருத்துவச்சி மகாலட்சுமி இருக்கிறாள் அல்லவா?" என்றார்.

அதைக் கேட்டு அவன் ஆச்சரியப்பட்டது அந்த இருட்டிலும் தெளிவாகத் தெரிந்தது. "மருத்துவச்சியா ஐயா?" என்றான் அவன்.

"ஆமாம். யாரோ வழிப் போக்கர்கள் இராத்திரி என் வீட்டில் இறங்கினார்கள். அந்தப் பெண் பிரசவ வேதனைப்படுகிறாள். சீக்கிரம் மருத்துவச்சியை அழைத்து வர வேண்டும், ராமுலு" என்றார் ராமகிருஷ்ணய்யா.

"நீங்கள் போங்க ஐயா! நான் உடனே அழைத்து வருகிறேன்" என்றான் சேவகன் ராமுலு.

"இல்லை. நான் இங்கேயே இருக்கிறேன். நீ அழைத்து வா" என்றார் அவர். ராமுலு போனான். பத்து நிமிஷங்கள் இங்கும் அங்கும் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார் ராமகிருஷ்ணய்யா. கோழிகள் கூவத் தொடங்கின. ஆங்காங்கு மனிதர்கள் நடமாட்டம் காணப்பட்டது. பொழுது விடிந்து, வெளிச்சம் வந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது ராமகிருஷ்ணய்யாவுக்கு.

வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது, வாசற் கதவு நன்றாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இடைகழியில் லாந்தர் விளக்குப் பெரிதாக எரிந்து கொண்டிருந்தது. இவர்கள் வரும் காலடிச் சத்தம் கேட்டு அந்த நடுத்தர மாது வெளியே வந்தாள்.

"வந்துவிட்டாளா மருத்துவச்சி?" என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே அவள் உள்ளே போய் விட்டாள். பெண் அழுது கொண்டிருந்தாள். பெரிதாக முனகினாள். 'ஐயோ, பாவம்!' என்று தோன்றியது ராமகிருஷ்ணய்யாவுக்கு. ராமுலுவும் அவரும் வாசல் இரேழியில் நின்று விட்டனர்.

"ராமுலு! வெந்நீர் அது இது வேண்டுமல்லவா? அச்சம்மாவை அழைத்து வருகிறாயா? உதவியாக இருக்கும்" என்றார் அப்போது.

இரு மாதர்கள் வெளியே வந்தனர். பக்கத்து வீட்டு இரு அவதானி அவர்கள் மனைவியும் மருமகளும்தான் அவர்கள்.

"மாமா, நீங்களே மகா லட்சுமியை அழைத்து வரப் போனீர்களா? எங்களுக்கு ஒரு குரல் கொடுத்திருந்தால் எங்க பையனை அனுப்பியிருப்போமே!" என்றனர்.

"எனக்கு ஒன்றும் தோணவில்லை அம்மா! எப்படி இருக்கிறாள் அந்தப் பெண்?"

உள்ளே யிருந்து 'கூ' என்று குழந்தையின் அழுகுரல் கேட்டது. ராமகிருஷ்ணய்யாவை அது ஓர் உலுப்பு உலுப்பி விட்டது. தம் வீட்டிலா இந்தச் சப்தம்? ஆச்சரியமாகவுமிருந்தது. பயமாகவும் இருந்தது. உள்ளே போனார். பின்னர் இடைகழியிலேயே மேலும் கீழும் உலாவ ஆரம்பித்தார். கடிகாரம் மணி ஐந்தரை காட்டியது.

கொஞ்ச நேரம் கழித்து மகாலட்சுமி வெளியே வந்தாள். "பெண் குழந்தை. உங்கள் வீட்டில் லட்சுமி பிறந்திருக்கிறாள். சிவப்பா இவ்வளவு இருக்கிறாள்!" என்று சாணுக்கு மேல் சிறிது அதிகம் காட்டிச் சொன்னாள். அவள் முகத்தில் ஒரே மகிழ்ச்சி. பெரிய காரியத்தைச் சாதித்தவள் போல் பெருமிதத்துடன் இப்படியும் அப்படியும் திரிந்தாள்.

அன்றைய காலைப் பொழுதெல்லாம் எப்படிக் கழிந்தது என்று ராமகிருஷ்ணய்யாவுக்குத் தெரியாது. எல்லாம் தானாக நடந்து விட்டன. சமையலாயிற்று. அந்தப் பெண் சுகமாகத் தூங்கினாள். அச்சம்மா அங்கே அவர்களுக்கு உதவுவதற்காகத் தங்கி விட்டாள்.

எட்டு மணி சுமாருக்கு அந்த மாதினிடம் ராமகிருஷ்ணய்யா கேட்டார்: "யாருக்காகிலும் சமாசாரம் சொல்லி யனுப்ப வேண்டுமா" என்று.

அந்த அம்மாள் தலையைக் குறுக்காக 'இல்லை' என்ற பாவனையில் ஆட்டினாள். "எதற்கு ஐயா!. அவள் தகப்பனார் ஒருவர்

பெப்ஸ் இருமல் மற்றும் தொண்டைப் புண்ணைப்

போக்க ஒரு மூலிகைச் சத்துள்ள நம்பகமான நிவாரணி. பயனளிக்கும், இன்சுவையுள்ள பெப்ஸ்.



லாஸெஞ்சைப் போல வாயில் அடக்குங்கள் பெப்ஸ். அதில் மூலிகைச் சத்துக்களும் நச்சுமுறிப்புப் பொருள்களும் அடங்கியுள்ளன. அவை தொண்டை மற்றும் சுவாச கோசத்தில் பாதிக்கப் பட்டுள்ள பாகங்களில் ஊடுருவிச் செல்லுகின்றன. பெப்ஸ் அற்புதமாக செயல் புரிந்து, இருமலுக்கும் தொண்டைப் புண்ணுக்கும் விரைவில் இதமளிக்கிறது.


பயனளிக்கும், இன்சுவையுள்ள பெப்ஸ் எப்போதும் கைவசம் இருக்கட்டும்.

பெப்ஸ். 50 ஆண்டுகளுக்கும் மேலாக நம்பகமான இருமல் நிவாரணி.



வயிற்றுக் கோளாறா?

வாயுவா? அமில உபாதையா? நெஞ்சரிச்சலா? அஜீரணமா?





2 ரென்னி

மாத்திரைகளை மெல்லுங்கள்... விரைவிலேயே நிவாரணம் பெற.

ரென்னி துரிதமாக செயல் புரிகிறது என்று ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

விரைவில் செயல் புரிந்து நிச்சயமான நிவாரண மளிப்பதில் இதர ஜீரண மாத்திரைகளுக்கும், ரென்னிக்கும் உள்ள வேறுபாட்டை நிலை காட்ட ஒரு புதிய மின் இயல் ஆராய்ச்சி செய்யப்பட்டது.

காப்ஸ்யூல் வடிவில் உள்ள டிரான்ஸ்மிட்டர்களை குறிப்பிட்ட சிலர் விழுங்கச் செய்யப்பட்டனர். வயிற்றில் உண்டாகும் அமிலத்தின் அளவை பதிவு செய்து வெளியிட இந்த டிரான்ஸ்மிட்டர்கள் உதவின. மேலே குறிப்பிட்டவர்கள் ரென்னி உட்பட 4 வெவ்வேறு ஜீரண மாத்திரைகளை விழுங்கினார்கள்.

உபரி அமிலத்தைச் சரிசெய்ய, ஒவ்வொன்றுக்கும் ஆகும் நேரம் கணக்கிடப்பட்டது. ரென்னி மிக விரைவாக செயல் புரிவது காணப்பட்டது. இதர-ஜீரண மாத்திரைகள் செயல் புரிய 4½ நிமிடங்கள் தேவைப் பட்ட போது ரென்னி செயல் புரிய 2½ நிமிடங்களே ஆயிற்று. அதாவது ரென்னி இரட்டிப்பு விரைவில் செயல் புரிந்தது.

வயிற்றுக் கோளாறுக்கு ரென்னி ஏன் சிபாரிசு செய்யப்படுகிறது என்றால் ஒரு நல்ல ஜீரண மாத்திரை செய்ய வேண்டிய ஆறுவிதமான செயல்களையும் ரென்னி செய்கிறது.

1. ரென்னி நிச்சயமான நிவாரணத்தை நிமிடங்களில் அளிக்கிறது.
2. ரென்னி வாயு உருவாதலை கவனிக்கிறது.
3. ரென்னி வயிற்றில் சமமான அமில நிலையை நிர்வகிக்கிறது.
4. ரென்னி சரியாக உள்ள ஜீரணப் பாதையில் குறுக்கிடுவதில்லை.
5. ரென்னி வயிற்று ஜவ்வுகளுக்கு பாதுகாப்பான பூச்சு அளிக்கிறது.
6. ரென்னி அடிக்கடி உட்கொண்டபோதும் வயிற்றுப் போக்கோ அல்லது மலச்சிக்கலோ உண்டாக்குவதில்லை.

2 ரென்னி மாத்திரைகள் உங்கள் வயிற்றை சரி செய்கின்றன.

mcm/nl/2 tm

தான் செய்தியைக் கேட்டுச் சந்தோஷப் படுவதற்கு இருப்பவர். அவருக்குக் கார்டு போடுகிறேன். மாப்பிள்ளை என்னமோ வட நாட்டில் ஏதோ ஓர் ஊருக்கு உத்தியோக விஷயமாகப் போயிருக்கிறாராம். என்றாலும் நாங்களே நான்கு நாட்களில் புறப்பட்டுப் போய்ச் சேரப் போகிறோம். உங்களுக்கு ஏன் இந்தச் சிரமம்?'' என்றாள்.

''எனக்குச் சிரமம் என்ன இருக்கிறது? எங்க பள்ளிக்கூடச் சேவகனை அனுப்பி வைக்கிறேன், அவ்வளவுதானே!'' என்றார்.

''என்ன பக்கத்திலேயா இருக்கிறது, தகவல் நேரில் அனுப்புவதற்கு? ஒரு நாள் ரயில் பிரயாணம், வண்டி, படகு, நடை இத்தனை கஷ்டங்கள் அனுபவித்த பிறகல்லவா எங்கள் ஊர் போய்ச் சேர வேண்டும்? வேண்டாம் சுவாமி, வேண்டாம்!'' என்றாள் அந்த மாது.

சமையலறைக்குப் போய் அங்கு வேலையில் மூழ்கி விட்டாள். எவ்வளவோ பழக்கப்பட்டவள் போல எல்லா வேலைகளையும் செய்தாள்.

பள்ளிக்கூடத்துக்குப் புறப்படுவதற்கு முன் அந்த அம்மாள் பரிமாற, ராமகிருஷ்ணய்யா நன்றாகச் சாப்பிட்டார்.

அவர்கள் வந்து ஆறு நாட்களாகி விட்டன. காலையில் எழுவதே அந்தக் குழந்தையின் அழுகுரல் கேட்டுத்தான். பள்ளிக்கூடத்திலிருந்து ராமகிருஷ்ணய்யா இந்த நான்கு நாட்களாக மத்தியானம் வீட்டுக்கு வருகிறார், அவர்களுக்கு ஏதாகிலும் தேவைப்படுமோ என்று. முதல் நாள் மட்டும் பார்வதியம்மாள் சும்மா இருந்தாள். மறு நாள் தோசைக்கு அரைத்துத் தோசை வார்த்துக் கொடுத்தாள். அதனால் அவள் தம்மை எதிர் பார்த்திருப்பாளோ என்று தவறாமல் தினம் மத்தியானம் வரலானார்.

அன்று மத்தியானம், ''ஐயா, நானும் சீதாவும் நாளைக் காலையில் புறப்படுகிறோம்!'' என்றாள் பார்வதியம்மாள். அவள் வந்து வாசல் நிலைப்படியண்டை நின்றதை அவர் கவனிக்கவில்லை போலும். அவள்குரல் கேட்டுத் திடுக்கிட்டார்.

அவள் தொடர்ந்து, ''காலையில் புறப்பட்டால் சூரியன் உச்சிக்கு வருமுன்னரும் அக்கரை போய்ச் சேர்ந்து விடலாம்'' என்றாள்.


ராமகிருஷ்ணய்யாவுக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. அவர்கள் போக வேண்டும் என்னும்போது, அவர்களை இருந்துவிட்டுப் போகச் சொல்ல வேண்டும் என்பது என்னமோ அவர் உள் விருப்பம். ஆனால் வார்த்தை வந்தால்தானே?

''வந்து ஒரு வாரம் ஆகிவிட்டதல்லவா? அங்கே அவர்கள் எல்லாம் ஒரே கலவரம் அடைந்திருப்பார்கள்'' என்றாள் மீண்டும் பார்வதியம்மா.

''நீங்கள் கடிதம் எழுதவில்லையா, என்ன? பெண்ணைப் படுக்கையை விட்டு அசைய விடலாமோ கூடாதோ? எதற்கும் நானு தான்....''

பார்வதி யம்மாள், ''இல்லே ஐயா, நாங்கள் போக வேண்டும். ஒரு கார்டு எழுதினேன். அவ்வளவுதான்'' என்றாள்.

ஒரு நிமிஷம் ராமகிருஷ்ணய்யா பேசாமல் நின்றார்.



தாயார்: பல் வைத்தியர் இருக்காரா? குழந்தையை அவரிடம் காட்டணும்.

பெட்டி: அவர் இல்லையே!

குழந்தை: மறுபடியும் எப்போ இல்லா திருப்பார்?

பார்வதியம்மாள் உள்ளே போனாள். தேநீர் கொண்டு வந்து அவர் பக்கத்தில் வைத்தாள்.

''சரி. பதினோராம் நாள் ஸ்நானம் செய்து விட்டுப் புறப்படுகிறோம். அவளுக்கும் உடம்பு அவ்வளவு நன்றாக இல்லை'' என்றாள். அதைத் தொடர்ந்து, ''வந்து அழைத்துப் போகக் கூடியவர்களும் யாரும் இல்லை. அவள் அப்பா ரொம்ப வயசானவர். அதுவுமல்லாமல் 'நாங்கள் வருகிறோம்' என்று எழுதிவிட்டோம்'' என்று சொல்லிக் கொண்டே காலியான தேநீர் டம்ளரை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

* * *

ராமகிருஷ்ணய்யா படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தார். குழந்தை வீரிட்டு அழுதது. கொல்லைப்புறம் மெல்லப் போனார். சமையலறைக் கதவு தாழிடப்பட்டிருந்தது. வெந்நீர் அறையில் அடுப்பில் சுள்ளிகள் எரிந்து கொண்டிருந்தன. நீட்டுக் குளிக்கப் பார்வதியம்மாள் வெந்நீர் போட்டுக் கொண்டிருக்கிறாள் போயிருக்கிறது என்று நினைத்தார்.

''அச்சம்மா!'' என்று கூப்பிட்டார்; யாரும் பதில் சொல்லவில்லை. முகத்தைக் கழுவிக் கொள்ளலாம் என்று ஒரு செம்பு வெந்நீர் மொண்டு எடுத்தார். குழந்தையின் அழுகுரல் இன்னும் கேட்டுக் கொண்டிருந்தது. நிறுத்தும் வழியைக் காணோம். செம்பைக் கீழே வைத்து விட்டு வீட்டுக்குள் வந்தார். நாண் பக்கத்தில் லாந்தர் மெல்லியதாக எரிந்து கொண்டிருந்தது. பச்சிளம் குழந்தை வீரிட்டு அழுது கொண்டிருந்தது. உள்ளே தாயார்க்காரி இருக்கிறாளோ இல்லையோ என்பது தெரியவில்லை.

''பார்வதியம்மா!'' என்று அவர் கூப்பிட்டார். லாந்தர் விளக்கைப் பெரிது பண்ணி அறைக்குள் எட்டிப் பார்த்தார். அறையில் யாருமில்லை. அவர் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. கட்டிலில் ஒரு பக்கம் குழந்தை. லாந்தரை எடுத்துக் கொண்டு வாயிற்புறம் வந்து பார்த்தார். கடிகாரம் மணி மூன்றரை காட்டியது.

மீண்டும் அறைக்கு வந்தார். அறையில் அவர்கள் பெட்டி இல்லை. குழந்தையின் அழு குரல் அறையை நிரப்பியது.

அவருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. — இவர்கள் என்ன ஆனார்கள்? எங்கே போனார்கள்? சொல்ல முடியாத பயம் அவருள் தோன்றியது. மனதை ஒரு புகைப் படலம் சூழ்ந்து கொண்டது. குழந்தையைச் சமாதானப்படுத்தத் தோன்றவில்லை. கட்டில் அருகில் சென்று அதைப் பார்த்துக்கொண்டே நின்று விட்டார்.

"ஐயா!" என்று அச்சம்மா அழைத்தது அவர் காதில் விழுந்தது. வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகிறவனுக்கு ஆதாரம் கிடைத்தாற் போலிருந்தது.

"அந்த அம்மாமாரு இல்லையா, ஐயா?" அறைக்குள் வந்து கேட்டாள். பிறகு மெள்ளக் குழந்தையை எடுத்துத் துணிகளுடன் சேர்த்துத் தன் கையில் வைத்துக் கொண்டாள். குழந்தை அழுகையைக் குறைத்தது.

அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமலே வாயிற் பக்கம் வந்தார் ராமகிருஷ்ணய்யா. திண்ணையில் உட்கார்ந்து முகத்தைக் கழுவிக் கொண்டிருந்தார் பக்கத்து வீட்டு அவதானி.

"என்னங்க... எங்கள் வீட்டில் இருந்தவர்கள் எங்கே போனார்கள் என்பது உங்களுக்கு ஏதாவதும் தெரியுமா?" என்று அவரைக் கேட்டார் ராமகிருஷ்ணய்யா.

அவதானிக்கு முகம் வெளுத்து விட்டது. "எங்கே போனார்கள்? என்ன இது? உங்க வீட்டில் இல்லையா? குழந்தையின் அழுகுரல் கேட்கிறதே!" என்றார் அவதானி.

ராமகிருஷ்ணய்யாவுக்கு மனம் ஒரேயடியாகக் கனக்க ஆரம்பித்தது.

"அதுதான் ஸ்வாமி! குழந்தையை விட்டு விட்டு அவர்கள் போய்விட்டார்கள். சாமான் கூட இல்லை. உங்கள் வீட்டுப் பெண்களுக்கு ஏதாவதும் தெரியுமா?...." என்னும்போதே அவர் நெஞ்சம் தழுதழுத்தது.

அதற்குள் அவதானியாரின் மனைவி வெளியே வந்தாள். "என்னங்க! அவங்க குழந்தையை விட்டு விட்டுப் போய்விட்டார்களாமே! அச்சம்மா சொல்கிறாளே! என்னது இது?" என்றாள். இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, பிள்ளை, மருமகள் எல்லாரும் வாசல் பக்கம் வந்தார்கள். அச்சம்மாவும் வந்தாள்.

"பெரிய வேடிக்கையாக இருக்கிறதே! எந்த ஊருங்க அவர்களது?" என்று அவதானி கேட்டார் சற்றுப் பொறுத்து.

"ராஜமந்திரி என்று அந்த அம்மா சொன்னது என்னவோ வாஸ்தவம். ஆனாலும் இந்தக் குழந்தை நாதியற்ற குழந்தை போலிருக்கிறது" என்றாள் அவதானியாரின் மனைவி. எல்லார் மனத்திலும் ஊசலாடிக் கொண்டிருந்த சந்தேகத்துக்கு உருவம் கொடுத்தாற் போல் அமைந்தது இந்த வார்த்தைகள்.

ராமகிருஷ்ணய்யா பரிதாபமாகப் பார்த்தார். குழந்தையை அச்சம்மா கையில் எடுத்துக்கொண்டாள்.

"வாத்தியார் ஸார், நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள். சங்கதி என்ன என்று தெரிந்து கொள்ளலாம். இதோ பாருடி, அந்தக் குழந்தைக்குப் பால் வேண்டுமோ, வெந்நீர் வேண்டுமோ கவனி!" என்று அவதானி தம் மனைவிக்குச் சொன்னார். ராமகிருஷ்ணய்யா உள்ளே போனார். முகத்தைக் கழுவிக் கொண்டார்.

"ஐயா, நேற்று மத்தியானம் அந்தப் பெண் அழுது கொண்டிருந்தாள். அவளுடைய தாயார்க்காரி ஒரேயடியாகக் குசுகுசு வென்று ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். இந்தப் பச்சிளம் சிசுவை இப்படி உதறிவிட்டுப் போக வேண்டும் என்று அப்பொழுதே முடிவு செய்து விட்டிருக்க வேண்டும்!" என்றாள் வேலைக்காரி அச்சம்மா.

இதற்குள் அவதானியாரின் மனைவி வந்தாள். "வாத்தியார் ஐயா, அந்த அம்மாள் ராஜமந்திரி என்று சொன்னதினாலே, நீங்க இப்பொழுதே புறப்பட்டுப் போய் அவர்கள் இருப்பிடம் தெரிந்து கொண்டு வாருங்கள். நாங்கள் இந்தக் குழந்தையைப் பார்த்துக் கொள்ளுகிறோம். போய் வாருங்கள்" என்றாள் அந்த அம்மையார்.

குழந்தைக்கு உரியவர்கள் போனவுடனேயே அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க முயற்சி எடுக்க வேண்டும் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தார். இந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டு போய் அவர்கள் முகத்தில் எறிந்து விட்டு வந்துவிட்டால் தம் பாரம் குறைந்துவிடும். ஆனால் எப்படி இந்தப் பச்சிளங் குழந்தையை எடுத்துக் கொண்டு போவது? முதலில் குழந்தையைத் தூக்கும் பழக்கம் தம் கைகளுக்குக் கிடையாது. அதிலும் இவ்வளவு பச்சை மண்ணை எப்படி எடுத்துச் செல்வது? மேலும் அவர்கள் தங்களுக்கு வேண்டியதில்லை என்று உதறிவிட்ட குழந்தையைத் தாம் எடுத்துச் சென்றால் மட்டும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

அந்த அம்மையார் பக்கம் ஒரு முறை பார்த்தார். இக் குழந்தை தம் வீட்டில் பிறந்தது என்பதனால் அதற்கு உரியவன் தான்தானே. அதே போல் இவர்கள் இந்தக் குழந்தையை இரண்டு நாட்கள் பார்த்துக் கொள்கிறோம் என்கிறார்கள். அவர்களுக்கும் அந்தச் சிசு உரியதுதான். ஏன், வழியில் போகும் ஒவ்வொருவருக்கும் அந்தக் குழந்தை உரியதுதான். இந்த ஊருக்கே உரியதுதான். இப்படி நினைத்த மாத்திரத்தில் அவர் தலை கிர்ரென்று சுற்றத் தொடங்கியது. கைகளால் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டார்.

"அப்படியே செய்கிறேன், அம்மா" என்று சொல்லி விட்டுப் பள்ளிக்கூடத்துக்கு 'லீவ் லெட்டர்' எழுதி அனுப்பி விட்டுக் கிளம்பினார்.

பகல் மணி மூன்றாயிற்று — அவர் ராஜமகேந்திரபுரம் போய்ச் சேருவதற்கு. பார்வதி அம்மாள் பேச்சு வாக்கில் சொன்ன அடையாளங்களை வைத்துக் கொண்டு தேட முற்பட்டார். அந்த அம்மாள் புருஷன் பெயர் கூடத் தெரியாது. பின் என்ன சொல்லித் தேடுவார்?

எத்தனையோ சந்து பொந்துகளில் தேடினார். யார் சொல்லக் கூடியவர்கள்? யாரைக்

பெரியவனானதும் நான் ஒரு டாக்டர் ஆவேன்

அவனது ஆசை நியாயமானது. உங்கள் சிறுவனும் அதைப்போல் ஆசைப் படலாம். ஆசை நிறைவேறத் தேவையான பணத்திற்கு நீங்கள் இப்பொழுதே எல்.ஐ.சி. யின் 'கல்வி ஆண்டுத் தொகை பாலிசி' மூலம் வகை செய் யுங்கள்.

ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை.



CP-LIC-5/71

கேட்டாலும் அப்படிப்பட்டவர்கள் யாரும் இல்லையே என்கிறார்கள். அந்தப் பிராந்தியத்திலேயே அப்படிப்பட்டவர்கள் கிடையாது என்பது ஆறு மணிக்குத் தெளிவாயிற்று.

வெய்யிலில் சுற்றிச் சுற்றி அவர் கால் எரியத் தொடங்கியது. ஏதோ ஓர் ஆசை உந்த ரயிலடிக்கு வந்தார். சோடா வண்டிக்காரன் அருகில் போய்ச் சோடா வாங்கிச் சாப்பிட்டார். கண்ணில் பட்ட கூலிக்காரனைக் கூப்பிட்டுக் கேட்டார்.

இப்படி இன்னொருவனைக் கேட்டார்: ''பதினைந்து வயதுள்ள இளம்பெண், அவளுடன் நடுத்தர வயதுள்ள மாது கல்கத்தா பக்கம் போகும் ரயிலில் ஏறினார்களா?'' என்று கேட்டார். ஒருத்தருக்கும் தெரியவில்லை. பெஞ்சியின் மீது சிறிது நேரம் உட்கார்ந்தார். ரயில் சத்தம், பிரயாணிகள் போடும் கூச்சல், விற்பனையாளர்களின் கூக்குரல் — இந்தச் சத்தத்தினிடையே தம் ஆயுள் — வீட்டுக்குத் திரும்பிப் போகாமலே கழிந்து விட்டால் தேவலை என்று நினைத்தார். ஆனால் அவருக்கு அந்த அதிர்ஷ்டமில்லையே!

மனைவி இறந்த பிறகு இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் எத்தனையோ பேர் அவரை மீண்டும் கல்யாணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினார்கள். அவர் மனைவி இருந்தவரை அவளுடைய நோயுடன் போராடுவதற்கே அவருக்குச் சரியாக இருந்தது. அதன் காரணமாக அவர் வாழ்க்கையையும் மனதையும் தாங்க முடியாத பாரமாகச் செய்து விட்டது அவள் வியாதி. இந்த நிலையில் அவள் கர்ப்பவதி கூட ஆனாள். அந்தப் பிரசவமே அவள் உயிரையும் கொண்டு போயிற்று. இரண்டு மூன்று ஆண்டுகள் என்ன செய்வது என்று தெரியாமல் மன நிம்மதியின்றி அவரைப் பொசுக்கி எடுத்து வந்த அந்த நிலை, அவர் மனைவியின் மரணத்துடன் முடிவுற்றது. அப்பொழுதிலிருந்து பந்தபாசமற்ற வாழ்க்கையே அவருக்கு வழக்கமாகி யிருந்தது. அப்படிப்பட்டவருக்கா இந்தப் பந்தம்!

ராமகிருஷ்ணய்யா வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது குழந்தை அவதானியார் வீட்டில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது. அவர் சொன்ன செய்திகளைக் கேட்டு அவர்கள் பெருமூச்சு விட்டார்கள்.

''எந்த ஜன்மத்திலோ இவளுக்கு நீங்கள் கடன் பட்டிருக்கிறீர்கள். அதை இப்படி வசூல் செய்து கொள்ளுகிறாள்... இந்தக் குழந்தைக்கு என் பேரன் பெயர் கூட வைத்திருக்கிறான்: சசிரேகாவாம். நன்றாக இருக்கிறதா?'' என்று அவதானியார் கேட்டார். அவர் பேச்சின் பொருள் ராமகிருஷ்ணய்யாவுக்கு விளங்கவில்லை.

அன்றிரவு யாரோ வானத்தினின்று இறங்கி வந்து இவருடைய பிரச்னைக்குத் தெளிவு ஏற்படுத்தினாற்போல் தோன்றியது.

அந்த அமைதி எதற்கு ஏற்பட்டதோ தெரியாது. எனினும் அன்றைய இரவு நிம்மதியாகத் தூங்கினார். பொழுது விடிந்தது.

* * *

சசிக்கு ஜுரம். ஒரு வாரமாகவே இருந்து வந்தது. இப்பொழுது சற்றுக் குறைந்திருக்கிறது. கட்டில் மீது சோர்ந்து படுத்திருந்தாள். ராமகிருஷ்ணய்யா பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டு விட்டு அவளைத் தூங்காமல் கவனித்து வந்தார். ஜுரம் கடுமையுற்றபோது குழந்தை பட்ட பாடு, தாம் பட்ட வேதனை, இரவு தூக்கமில்லாமல் பட்ட அவஸ்தை, பணம் பஞ்சாய்ச் செலவு செய்ய நேர்ந்தது — இவையெல்லாம் ஒரு கெட்ட கனவு போல் அவருக்குத் தோன்றியது. உண்மை. பூர்வ ஜன்மக் கடன் இப்படிக் கழிகிறது போலும்!

தம்மை ஏன் இந்த நிலைக்கு வேறொருவர் கொண்டு தள்ள வேண்டும்? அவர் மனம் உளைந்தது! நிர்மலமான அமைதியான ஏரியில் ஒரு கல்லை எறிந்து அந்த அமைதியைக் குலைத்தாற் போல் தம் வாழ்வின் அமைதியை ஒரு சிறு சம்பவம் குலைத்து விட்டது.

அவர்களுக்குத் தாம் என்ன குற்றம் செய்தார் இப்படித் தம்மை அவர்கள் பழிதீர்த்துக் கொள்வதற்கு? நடு ராத்திரி வேளையில் தஞ்சம் என்று வந்தவர்களுக்குப் புகலிடம் தந்ததற்கா இந்தத் தண்டனை? அவர்கள்



மகாவித்வான் மறைவு

மகாமகோபாத்தியாய ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் மறைவு பண்டிதர் உலகுக்குப் பெரு நஷ்டமாகும். சம்ஸ்கிருத மொழியில் அவர் கல்விக் கடலாக இருந்தார். வேதம், காவியம், நாடகம், அலங்காரம், வியாகரணம் ஆகிய துறைகளில் விற்பன்னராக இருந்தார். தாமே அருமையான காவியங்கள் எழுதியுள்ளார். காஞ்சி ஆசாரியாரிடமிருந்து 'சாஸ்திர ரத்னாகரம்' என்ற விருதும், சிருங்ககிரி ஆசாரியாளிடமிருந்து 'வியாகரண பூஷணம்' என்ற விருதும் பெற்றவர். ராஷ்டிரபதிப் பரிசு பெற்றவர். சம்ஸ்கிருத மொழியை எல்லா மக்களுக்கும் கற்பிக்க வேண்டும் என்பதில் அவர் கொண்டிருந்த தீவிர ஆசை காரியத்தில் நடந்தால் அதுவே அவருக்கு நினைவாலயமாகும்.

என்னை ஏமாற்றி விட்டார்கள். என்னைப் பைத்தியக்காரனுக்கி அநியாயம் செய்து விட்டார்கள் — இந்த வேதனை அவரை உலுப்பி எடுத்தது.

ஒவ்வொரு தடவை இந்தக் குழந்தையைக் கொண்டு போய் எங்கேயாவது விட்டு விட்டு வரலாமா என்று தோன்றும். ஆனால் அது எப்படி? எப்படி முடியும்?

* * *

திருப்பதி மலைகளினின்று காற்று வீசிற்று. ஜிலுஜிலுவென்று குளிர்ந்திருந்தது. பையைப் படித்துறை மீதிருந்த கடைக்காரனிடம் ஒப்படைத்து விட்டு அங்கவஸ்திரத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். புஷ்கரணியில் பெண்கள், ஆண்கள், குழந்தைகள் நீராடிக் கொண்டிருக்கின்றனர்.

மேல் படியில் நின்று கொண்டு எந்தப் பக்கம் இறங்கலாம் என்று ராமகிருஷ்ணய்யா யோசித்தார். திடீரென்று அவர் கண் பார்வைக்கு அந்த மாது — பார்வதியம்மாள் — தட்டுப்பட்டாள். சந்தேகமில்லை. அவளே தான். அவள் அந்தப் பக்கம் படி ஏறி வருகிறாள். அவரைப் பார்த்தவுடன் அவள் நின்றாள். உடனே பின் பக்கம் திரும்பி மீண்டும் தண்ணீரில் இறங்கி விட்டாள். ராமகிருஷ்ணய்யா உள்ளம் தடதட வென்று அடித்துக்கொண்டது. அவரும் படியில் இறங்கினார்.

அம்மாது திரும்பிப் பார்த்தாள். பக்கத்திலிருந்த பெண்கள் பக்கம் பார்த்தாள். சட்டென்று கையைத் தூக்கி அவரை அங்கு வரவேண்டாம் என்றும் தானே வருவதாகவும் சமிக்ஞை செய்தாள். பிறகு தப தப வென்று படி ஏறி ராமகிருஷ்ணய்யா நின்று கொண்டிருந்த படிக்கு அருகில் வந்து நின்று, ''ஐயா, உங்களோடு பேச வேண்டும். வாருங்கள்'' என்றாள்.

யந்திரம் போல் அவளோடு சென்று ஜன சஞ்சாரமில்லாத ஓர் இடத்தை அடைந்தார்.

''ஐயா, இப்போது நீங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும். எங்கள் பிழைப்பு உங்கள் கையிலிருக்கிறது'' என்று கெஞ்சினாள். அவள் கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்தது.

அவருக்கு எவ்வளவோ சொல்ல வேண்டும் போல் வருகிறது. ஆனால் ஏதும் வரவில்லை வாயினின்று! அவளை எத்தனையோ வார்த்தைகளால் திட்ட வேண்டும் என்றுதான்; இந்த இரண்டு ஆண்டுகளாகத் தாம் பட்ட பாட்டையும் சொல்ல வேண்டும் என்றுதான். ஆனால் வார்த்தை வந்தால்தானே?

பார்வதியம்மாள் தனக்கு வந்த அழுகையை அடக்கிக் கொண்டு, ''ஐயா, ராமகிருஷ்ணய்யா அவர்களே, நீங்கள் கடவுளைப் போன்றவர்கள். நீங்களே எங்களுக்குப் புகல். பெண்ணுக்கு வேங்கடேசுவர சுவாமி சந்நிதியில் இன்றிரவு திருமணம் நடக்கிறது'' என்றாள்.

அவ்வளவு கோபத்திலும் அவர் கேட்டார்: ''எந்தப் பெண்ணுக்கு?''

''எங்க சீதாவுக்குத்தான், ஐயா! அவள் ஒரு துப்புக் கெட்டவள். வயிற்றிலே வந்தப் புறம் காலிலே விழுகிறாள். என் பெரிய பெண்ணுக்கு உடம்புக்கு வந்ததென்று அவளுக்கு ஒத்தாசை செய்ய நானும் அவளும் மாப்பிள்ளை வீட்டுக்குப் போனோம். அங்கே எங்க பெரிய மாப்பிள்ளையே... ஐயா! இவளைக் கெடுத்தான். நாலு மாதங்கள்வரை எனக்குத் தெரியாது. பிறகு அங்கிருந்து புறப்பட்டு விசாகப்பட்டினம் போய்க் குடித்தனம் போட்டோம். மூன்று மாதங்கள் எப்படியோ கழித்தோம்!''

ராமகிருஷ்ணய்யாவின் ஆவேசம் தணிந்தது. தம் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சந்தேகப்பட்ட விஷயத்தையே இந்த மாதின் வாய்மொழியாகக் கேட்டார். இருந்தாலும் அவருக்கு இது புதுமையாகத் தோன்றியது.

''அங்குள்ளவர்களும் குசுகுசுவென்று பேசத் தொடங்கினர். எத்தனை நாட்கள் ஊர் வாயை மூட முடியும்? 'மாப்பிள்ளை வரமாட்டாரா?' என்ற கேள்விகள். இவளுக்கு ஒன்பது மாதம் ஆவதற்கும் வீட்டுக்காரர்கள் வீட்டைக் காலி செய்யும்படி வற்புறுத்துவதற்கும் சரியாக இருந்தது. எங்கேயாவது யார் கண்ணிலும் படாமல் போய்ச் சேருவோம் என்று புறப்பட்டோம். சின்ன வயதில் பார்த்த ஊர், உங்கள் ஊர் ஞாபகத்துக்கு வந்தது. கண்ணில் பட்ட கதவைத் தட்டினோம். எங்கள் அதிருஷ்டம் காரணமாக நீங்கள் எங்கள் மீது கருணை கொண்டீர்கள். சீதா பிழைப்பாள் என்றே எண்ணவில்லை ஐயா'' என்று நிறுத்தும் உத்தேசமின்றியே அவள் அழத் தலைப்பட்டாள். அவள் மனத்திலிருந்த பாரம் தீர்ந்ததாலோ அல்லது அன்று அவள் இருந்த பரிதாப நிலையை நினைத்துக் கொண்டதாலோ — எதனால் அழுகிறாள் என்பது ராமகிருஷ்ணய்யாவுக்குப் புரியவில்லை.

அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள். ''அன்றிலிருந்து தேடாத இடமில்லை. இப்பொழுதுதான் ஒரு சம்பந்தம் நிச்சயமாகியிருக்கிறது. மதராஸ்காரர்கள். நாளை அவளை மாமியார் வீட்டுக்கு அனுப்பி விட்டால், அங்கே அவளுக்கு ஒரு வழி ஏற்பட்டுவிடும்'' என்றாள்.

மீண்டும் மேகங்கள் சூழ்ந்த வானம்போல் அவள் முகம் வாட்டமுற்றது. ''ஐயா, நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும் எங்களை. உங்கள் கையில் இருக்கிறது எங்கள் உயிர். அதோ பாருங்கள். அவர்கள் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு ராத்திரிதான் முகூர்த்தம்'' என்று சொல்லி விட்டுச் சட்டென்று புறப்படலானாள். ''ஐயா, நீங்கள் காப்பாற்றுவதாக வாக்குக் கொடுத்தாலன்றி நான் இங்கு விட்டுப் போக மாட்டேன். சீதா உங்களை நினைக்காத நேரமில்லை. அவளை மஞ்சள் துணியில் பார்த்து விட்டேனானால் பிறகு என் வாழ்க்கையைப் பற்றி அக்கறை யில்லை'' என்றாள்.

ராமகிருஷ்ணய்யா நெடுமூச்சு விட்டார். இவ்விஷயம் மிகவும் முற்றிப் போய்விட்டது. 'இனி அந்தச் சிறு குழந்தையை விட்டு விடுதலையாவதற்கு வழியில்லை' என்று எண்ணிக் கொண்டார்.

''நீங்கள் போங்கள்'' என்றார் அவர். பார்வதியம்மாள் பரிதாபம் தோன்றப் பார்த்தாள். ''உங்களையே நம்பி யிருக்கிறோம், ஐயா! உலகிடம் பட்ட கடனை



கண்களுக் கெட்டாத சிறப்புகள் பல கொண்டது "ஸான்ஃபரைஸ்டு" சின்னம்


"ஸான்ஃபரைஸ்டு" சின்னம் சுருக்கத்திற்கு எதிரான பாதுகாப்பை உங்களுக்கு அளிக்கிறது. "ஸான்ஃபரைஸ்டு" முத்திரையிட்ட பருத்தி மற்றும் பருத்தி கலந்த துணிகளிலிருந்து தயாரிக்கப்படும் ஆடை அணிகள், எத்தனை தடவைகள் சலவை செய்தாலும் உருமாறுவதோ சுருங்குவதோ இல்லை.

"ஸான்ஃபரைஸ்டு" முத்திரையிட்ட துணிகள் நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு நல்ல மதிப்பைப் பெறுவதற்கு உத்தரவாதம். "ஸான்ஃபரைஸ்டு" கலை நுட்பப் பிரதிநிதிகளின் சுருக்கத்திற்கெதிரான கடும் சோதனைகளில் தேறியவை இத் துணிகள். இந்த டிரேடு மார்க்கின் உரிமையாளர்கள் விதித்துள்ள தராதரங்களுக்கு உட்பட்ட துணிகள் இவை என்று உறுதி செய்வதற்காக அவர்கள் சோதனை செய்கிறார்கள், அளவெடுக்கிறார்கள், அளவுகளை ஒத்திட்டுப் பார்க்கிறார்கள், புள்ளி விவரங்களை சோதிக்கிறார்கள், குறிப்பெடுத்து அனுப்புகிறார்கள்.

·SANFORIZED·
REGD TD MK

'ஸான்ஃபரைஸ்ட்' என்னும் டிரேட் மார்க்கின் உரிமையாளர்களான க்ளுயெட், பீபாடி அண்ட் கோ. இன்க். (யு.எஸ்.ஏ.வில் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் இணைக்கப்பட்டது) வெளியிட்டது. சுருங்காத்தன்மையின் கடுமையான தேவைகளைப் பூர்த்தி செய்யும், பரிசீலிக்கப்பட்ட துணிகளுக்கு மட்டுமே உரிமையாளர்கள் இந்த டிரேட் மார்க்கை உபயோகிக்கின்றனர் அல்லது பதிவு செய்யப்பட்ட உபயோகிப்பாளர்களை உபயோகிக்க அனுமதிக்கின்றனர்.

maa SAN.728 TAHL



சென்னை, அசோசியேட்டட் பிரிண்டர்ஸ் (மதுராஸ்) பிரைவேட் லிட். சேல்ஸ் மானேஜர் ஸ்ரீ எஸ். சூரி அவர்கள் குமாரர் சிரஞ்சீவி வெங்கடரமணனுக்கும், சென்னை சத்திய மூர்த்தி கிருஷ்ணமூர்த்திபார் அட்லா அவர்கள் குமாரத்தி சௌ. பிரேமாவுக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்





அடுத்த ஜன்மத்திலாவது தீர்த்துவிடுகிறோம்!'' என்றான்.

மீண்டும் புறப்பட யத்தனித்தாள். ஆனால் சற்றுத் தயங்கி, ''ஐயா அந்தக் குழந்தை?'' என்று கேட்டாள்.

''நன்றாகவே இருக்கிறாள். இரண்டு வயசு ஆகிவிட்டது. இனி நீங்கள் போங்கள்!'' என்றார். அவள் போனாலன்றி அவர் மன சஞ்சலம் அடங்காது போலிருந்தது. தாம் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வர அவருக்கு அவகாசம் தேவைப்பட்டது.



''என்ன ஒரு மாதிரியா இருக்கே?''

''என் மனைவி ஒரு மாசத்துக்கு என்னுடன் பேசப் போவதில்லை என்று சபதம் எடுத்துக் கிட்டிருந்தாள்; அந்தச் சபதம் இன்றோடு முடிகிறது!''

அன்று கோவிலுக்குப் போனார் என்று பெயர்தானே தவிர அவர் உள்ளம் அலைமோதிக் கொண்டிருந்தது. அவர் என்றும் இவ்வளவு மன நிம்மதியற்று வேங்கடாசலபதியைத் தரிசனம் செய்ததில்லை.

மத்தியானம் பாபநாசத்துக்குப் புறப்பட்டார். இது நாலாவது தடவை திருப்பதிக்கு வருவது. இரண்டு நாட்களுக்கு முன் தான் ஏதோ இருந்தாற் போலிருந்து திருப்பதி வேங்கடாசலபதியைத் தரிசனம் செய்ய வேண்டும் என்று தோன்றியது. சரோஜாவை அவ்தாலியார் வீட்டில் ஒப்படைத்து விட்டுப் புறப்பட்டு வந்தார்.

அந்த மலைகளிடையே ஒற்றையடிப் பாதையில் இரண்டு பக்கமும் பரவியுள்ள காட்டினிடையே சென்று கொண்டிருந்த போது, தம் வாழ்க்கைப் பாதையும் முள்ளும் கல்லும் செறிந்த பாதையாகத்தானே இருக்கிறது எனத் தோன்றியது.

இன்னும் இரண்டாண்டுகளில் அவர் ஓய்வு பெற்று விடுவார். அந்தப் பெண்ணுக்குப் படிப்பு, பாட்டு, வயசு வந்ததும் கல்யாணம் இவையெல்லாம் நடத்தி வைக்க வேண்டும். இந்தப் பந்தங்கள் எல்லாம் எவ்வளவுதான் உதற வேண்டும் என்று நினைத்தாலும், அவரை அறியாமலே அவரைப் பற்றிக்கொண்டன. ''எனக்கு என்ன இந்தப் பெண்ணோடு?'' என்று எவ்வளவு உதறினாலும் 'இது உன்னுடைய பந்தமே' என்று சொல்லிற்போல் அப்பெண்ணின் புன்முறுவலும், கண்ணீரும் அவரை எச்சரிக்கை செய்து வைக்கும்.

* * *

''ஸார்த்துரைத் துடைத்து மண்ணெண்ணெய் ஊற்றி விட்டேன். நான் போய் வருகிறேன். குழந்தை இன்னும் வரவில்லை'' என்று சொல்லி விட்டு அச்சம்மா வெளியே போனாள். ராமகிருஷ்ணய்யா திண்ணை மீது உட்கார்ந்து தக்ளியில் நூல் நூற்றுக் கொண்டிருந்தார்.

வாசற்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. செருப்புச் சத்தமும் கேட்டது. அதன் பின்னர் ஓர் ஆண் குரல் கேட்டது: ''இங்கேயே வைக்கட்டுமா அம்மா!'' என்று சொல்லிக்கொண்டே வண்டிக்காரன் ஒரு பெட்டியைக் கொண்டு வந்து முன் கூடத்தில் வைத்தான். ராமகிருஷ்ணய்யா மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு பார்த்தார்.

ஓர் இளம் பெண், குழந்தையை எடுத்துக் கொண்டு மெள்ள நடந்து வந்தாள். இன்னொரு குழந்தை நான்கு வயசு இருக்கும், அவள் புடவைத் தலைப்பைப் பற்றிக் கொண்டு வந்தாள்.

ராமகிருஷ்ணய்யாவுக்கு ஒரு நிமிஷம் வியப்பினால் கண்கள் அகலமாயின! — ''யாரு?'' என்று கேட்டார்.

''நான்தான்!'' என்றாள் மெல்லிய குரலில்.

ராமகிருஷ்ணய்யாவுக்கு நினைவு வந்துவிட்டது. எழுந்திருந்து முன்னுக்கு வந்தார். ஒரு நிமிஷம் கூர்ந்து பார்த்தார் — சீதா.

அவருக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. ஒரு நிமிஷம் கழித்து, ''வா, அம்மா! இப்படி உட்கார்'' என்றார். அவள் உட்கார்ந்தாள். அவளைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்து விட்டார் ராமகிருஷ்ணய்யா. அவள் ஜொலித்துக் கொண்டிருந்தாள். கிளிப் பச்சை நிறத்தில் பட்டுப் புடவை கட்டிக் கொண்டு வந்திருந்தாள். உடம்பெல்லாம் நகைகள் நிரம்பி வழிந்தன.

கொஞ்ச நேரம் நிசப்தம் நிலவியது.

அவர் தெளிவுற்று, ''எங்கிருந்து வருகிறாய்?'' என்று கேட்டார்.

''விசாகப்பட்டினத்தில் ஒரு கல்யாணத்துக்கு வந்தோம். நாங்கள் இருப்பது மதராஸில்—அம்மா சொல்லி யிருப்பாளே?'' என்றாள்.

''காலை அலம்பிக்கொள். காய்ச்சின பாலைக் குடிக்கலாம்!'' என்றார்.

அவள் எழுந்து நின்றாள். பெட்டியைத் திறந்து சோப்பு, துண்டு எடுத்துக்கொண்டாள். பையனின் கையைப் பிடித்துக் கொண்டு புறப்பட்டாள். ''கொல்லையில் தண்ணீர் இருக்கும் அல்லவா?'' என்று கேட்டாள். 'இருக்கும்' என்ற பொருளில் அவர் தலையசைத்தார்.

அவள் எதற்கு வந்தாள்? இதுவரை இந்த இடத்தைப் பற்றி எண்ணியது கூட இல்லையே! இப்பொழுது வருவானேன்? எவ்வளவு அழகாக நிறைந்து காணப்படுகிறாள்! சரோஜா இன்னும் வரவில்லை. அவள் வந்தால் சீதாவை அவளுக்கு என்னவென்று சொல்லி அறிமுகப் படுத்துவது?

இப்படி அவர் யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். இதற்குள் சீதா வந்தாள் உள்ளிருந்து. பெட்டியைத் திறந்து தன் முன் வைத்துக் கொண்டு தன் தலைப் பின்னலை அவிழ்த்துக் கொண்டாள். அவள் வகிடு எடுத்துக் கொண்டு அவர் பக்கம் திரும்பினாள்.

''குழந்தை இல்லையா?'' என்று கேட்டாள். எவ்வளவு அலட்சியமாக, எவ்வளவு சாதாரணமாகக் கேட்டு விட்டாள்?

"இருக்கிறான்!" என்றார் அவர். இருவரும் ரொம்ப நேரம் மௌனமாக இருந்தனர். வாசல் பக்கம் வந்து நின்று கொண்டாள். அவருக்குப் பழைய ஞாபகங்கள் வந்தன. அன்றைய தினம், அவர்கள் வந்தது, அவர்களது பரிதாப நிலை யாவும் நினைவுக்கு வந்தன.

"சிற்றப்பா! குழந்தை உண்மையாகவே இருக்கிறாளா? எங்கிருக்கிறாள்?". அவள் கண்களில் கண்ணீர் கசிந்து சிவந்திருந்தன.

அவள் அவரை அழைத்த உறவு முறை அவருக்கு வியப்பாக இருந்தது. "இருக்கிறாள்; விளையாடப் போயிருக்கிறாள்" என்றார்.

அவரை ஒரு முறை பார்த்து மீண்டும் அழுதாள். "அவளை என்னுடன் அழைத்துக் கொண்டு போகிறேன். அவளை விட்டு விட்டு என்னால் உயிர் வாழ முடியாது. எப்பொழுதும் அவள் நினைவுதான். அவள் என்ன பாவம் செய்தாள் என்று அவளை இப்படி உதறி விட்டுப் போனேன். இங்கே அவள் க்ஷேமமாக இருக்கிறாள் என்று என் மனசு சொல்லிக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அவளைப் பார்க்க வேண்டும், என்னிடம் அழைத்துக் கொள்ளவேண்டும் என்றும் உள்ளம் துடித்துக் கொண்டிருக்கிறது. சிற்றப்பா எனக்கு அவள் வேண்டும். நான் அவளை அழைத்துக் கொண்டு போகிறேன்" என்றாள்.

அவளது இப்போதைய போக்கைப் பார்க்க ராமகிருஷ்ணய்யாவுக்கு வியப்பாக இருந்தது. சசிரேகாவை அழைத்துக் கொண்டு போகிறாளா, இவள் !

சசி, ஓடி வந்து ராமகிருஷ்ணய்யாவை ஒட்டிக் கொண்டு நின்றாள். "தாத்தா, யாரு இவங்க?" என்றாள் மெல்ல. தன் பக்கத்திலிருந்த சசிரேகாவைப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை அவருக்கு. சீதாவின் பக்கம் பார்த்தார். அவள் ஆச்சரியத்தால் கண்கள் அகலப் பார்த்தாள். தன் மகளை முதல் தடவையாகப் பார்க்கிறாள் அல்லவா ?

சசி கேட்ட கேள்விக்கு விழிப்புற்று, "அக்கா !" என்றார் அவர். சீதா இந்தப் பதிலைக் கேட்கவில்லை.

"பாப்பா ! வா, அம்மா!" என்று சீதா அழைத்துக் கொண்டு சசியின் அருகில் போனாள். சசியும் அவளிடம் போனாள். அவளைச் சீதா அணைத்துக் கொண்டாள். ராமகிருஷ்ணய்யாவின் கண்களில் கண்ணீர் மல்கி விட்டது. அவர் தொண்டையைத் துக்கம் அடைத்துக் கொண்டது. எதற்கு இந்தத் தொல்லையெல்லாம்? தாம் படும் வேதனையும் துன்பமும் இந்தப் பச்சிளம் குழந்தைக்கும் ஏற்படுவானேன்? அதற்கு என்ன அவசியம் இப்போது வந்தது? — என்று எண்ணினார் ராமகிருஷ்ணய்யா.

"இப்படி வா, சசி" என்று அழைத்தார் அவர். சீதையின் கையை உதறிவிட்டு வந்தாள் சசி. அவளை அழைத்துக் கொண்டு உள்ளே போனார். அவளுக்கு ஏதோ சொல்லிச் சமாதானப்படுத்த வேண்டும் என்ற துடிப்பு ராமகிருஷ்ணய்யா மனத்தில்.

"அக்கா உன்னைப் பார்த்துப் பல நாட்கள் ஆகிவிட்டன அம்மா. அதனால்தான் அவள் அப்படி அழுதாள். அவ்வளவுதான்! அக்கா நன்றாக இருக்கிறாளா? உனக்குப் பிடித்திருக்கிறாளா?" என்று கேட்டார்.

சசி தலையாட்டினாள். அவரை விட்டுக் கொல்லைப் பக்கம் போனாள். முகம் கழுவிக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்துக் கொண்டே ராமகிருஷ்ணய்யா நின்று கொண்டிருந்தார். அந்த மூக்கு, அந்தக் கன்னம் எல்லாம் தாயைப் போலவே எவ்வளவு தெளிவாக இருக்கின்றன!

அன்றிரவு சீதாவே சமைத்தாள். சசிக்குத் தட்டில் பரிமாறி அவள் பக்கத்தில் உட்கார்ந்தாள். தன் பக்கத்திலிருந்த கைக் குழந்தையைக் கூடக் கவனிக்கவில்லை. சசிக்குச் சாதம் பிசைந்து ஊட்டத் தயாரானாள். தன் கைக் குழந்தைக்குச் சசியைக் காண்பித்து, "அக்கா !" என்று அழைக்கக் கற்றுக் கொடுத்தாள்.

இரவு ரொம்ப நேரம் வரை சசி படுக்கவில்லை. சீதை, குழந்தையின் பொம்மைகளைக் கொண்டு வந்தாள். அவற்றோடு சசியும் குழந்தைகளும் வெகு நேரம்வரை விளையாடிக் கொண்டிருந்தனர். ராமகிருஷ்ணய்யாவுக்கு, இவற்றைப் பார்க்கப் பார்க்க ஒன்றும் தோன்றவில்லை. சசியையும் பையனையும் தூங்கப் பண்ணிவிட்டு வந்து உட்கார்ந்தாள் சீதா. அவளோடு என்ன பேசுவது? "உன் அம்மா சௌக்கியமாக இருக்கிறாளா?" என்று கேட்டார் ராமகிருஷ்ணய்யா.


"இருக்கிறாள்.... சசியை அழைத்துக் கொண்டு போகட்டுமா?"

'அதே கேள்வி! அதே கேள்வி! அழைத்துக் கொண்டு போ என்று சொல்வதற்கும், போகாதே என்று சொல்வதற்கும் தமக்கு என்ன உரிமை இருக்கிறது?' என்று எண்ணினார் ராமகிருஷ்ணய்யா.

கொஞ்சம் பொறுத்து அவர், "ஆனால் நீ அழைத்துப் போனால் உன் கணவர் என்ன சொல்வாரோ?" என்றார்.

உடனே அவள் சமாதானம் சொன்னாள். "ஒன்றும் சொல்ல மாட்டார். எங்கேயோ பஸ்ஸில், அநாதையாய் வழி தவறிப் போய் அழுது கொண்டிருந்த பெண்ணை அழைத்து வந்தேன் என்று சொல்லுகிறேன். அவர்

டேபிள் டென்னிஸ் வீரர் ஜகந்நாத் பிலிப்ஸ் சைக்கிள் உதவியினால் உடல் வளத்தை தெம்புடன் வைத்திருக்கிறார்



டேபிள் டென்னிஸ் பந்தயங்களில் ஜகந்நாத் மிகத் துடிப்புடன் விளையாடுகிறார். இந்தியாவின் தலை சிறந்த விளையாட்டு வீரர் ஜகந்நாத்துக்கு எப்பொழுதும் துடிப்புடன் இருப்பதன் அவசியம் தெரியும். தினசரி தன் பிலிப்ஸ் சைக்கிளில் சவாரி செய்வதன் மூலம் அவர் எப்போதும் தெம்புடன் செயல் படுகிறார். அதில் சந்தேகம் இல்லை. உலகப் புகழ்வாய்ந்த பிலிப்ஸ் ஜைக்கமிகு வாலிபர்களுக்கு உகந்தது. கவர்ச்சியானது. அனாயாசமாய் சவாரி செய்ய வல்லது. காடு முரடான சவாரிக்கும் ஈடுகொடுக்க வல்லது.

சுறுமையாக உழைத்து உங்களை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லும்.

ஜைக்கமிகு வாலிபர்கள் உகந்து வாங்குவது பிலிப்ஸ் சைக்கிள்.



TIC/PH/6541

பிலிப்ஸ்

இந்தியாவில் தயாரிப்போர்:

டி ஐ சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா

அம்பத்தூர், சென்னை-53.

உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட்

கடவுளைப் போன்றவர். என் பேச்சுக்கு மறு பேச்சு சொல்ல மாட்டார். அது ஒன்றுதான் என் அதிருஷ்டம்'' என்றாள்.

அவள் இப்படிச் சொல்ல வேண்டும் என்று ஒரு முடிவு செய்து கொண்டே வந்திருக்கிறாள் என்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது. தம்மைவிட அவனுக்கே சசியின் மீது அதிக உரிமை இருப்பதாகத் தோன்றியது. பிறகு மீண்டும் அப்படியல்ல என்றும் தோன்றியது.

ரொம்ப நேரம் இருவரும் பேசவில்லை. அவர் மனத்தில் ஏதோ பாரமாகக் கனத்தது. அன்று காலை, பொழுது பொலபொலவென்று விடியும் பொழுது, அச்சம்மா சசியைக் கையில் எடுத்துக் கொண்டு வந்து நின்றபோது அவர் உள்ளம் பட்ட பாட்டை இப்பொழுது அநுபவித்தார். வானத்தில் மேகம் இருண்டு திரண்டு 'சோ'வென்று பெரு மழை கொட்டுமுன் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது அவர் உள்ளம். ஏன் தம் மனம் இப்படி வேதனையுறுகிறது என்பதுதான் அவருக்குப் புரியாத புதிராக இருந்தது.

மெல்ல, ''சீதா !'' என்று கூப்பிட்டார். அவர் நெஞ்சம் தழுதழுத்தது. ''சீதா! நீயும் உன் அம்மாவும் எவ்வளவு அநீதி எனக்கு இழைத்து விட்டீர்கள். கவலையற்று நிம்மதியாக வாழ்ந்து வந்த என் தலையில் எவ்வளவு பெரிய சுமையை வைத்து விட்டுப் போய் விட்டீர்கள்! எனக்கு என்ன ஆயிற்றோ என்று ஒரு நாளாவது எண்ணிப் பார்த்திருப்பீர்களா?'' என்று கேட்டார். தாம் இருப்பதியிலேயே பார்வதி அம்மாளைக் கேட்க வேண்டுமென்றிருந்த கேள்வியை இன்று கேட்டு விட்டார்.

''நான் உங்களைப் பற்றி எண்ணாத நாள் இல்லை என்று சொன்னால் நம்புவீர்களா? ஆனால் அதைவிட அதிகமாக, மிக அதிகமாக என் வயிற்றில் உண்டான வேதனை என்னை ஒரு நிலைகொள்ள விடவில்லை. உங்களுக்கு விளங்காது சித்தப்பா என் துயரம். நாங்கள் புறப்பட்டுப் போகுமுன் அவள் எழுந்திருந்து அழுதாள். அதை எடுத்துச் சமாதானம் பண்ணித் தூங்கச் செய்து விட்டுப் போனேன். அது வீரிட்டு அழுதால், அப்பச்சிளம் சிசுவின் தொண்டையை நனைக்கும் நாதி கிடையாது என்று நினைத்தபோதெல்லாம் நான் எப்படித் துயரத்தினால் எரிந்தேன் என்பது யாருக்குத் தெரியும்? என் நரம்புகள் ஒவ்வொன்றும் அவ்வேதனையால் முறுக்கேறித் துடித்தன. எத்தனை நாட்கள், எத்தனை வருடம் இதே வேதனையில் உழன்றிருக்கிறேன்.....'' என்று அழுது கொண்டே சொன்னாள்.

நிஜமா ? என்னவோ, யார் கண்டது ? அவருக்குத் தெரியாது. எனினும், அவளுடைய இந்த வேதனையை இன்னும் தம்மால் கேட்க இயலாது. ராமகிருஷ்ணய்யா தம் இருப்பிடத்தை விட்டு எழுந்தார். ''அப்படியானால் அழைத்துப் போ!'' என்று சொல்லி விட்டுப் படுத்துக் கொள்ளப் போய் விட்டார்.

காலையில் சீதாவே காப்பி போட்டாள். சமையல் செய்தாள். ஒன்பது மணிக்குச் சாப்பாட்டுக் கடையும் முடிந்து விட்டது. சசி தன் துணி மணிகளை ஒரு சிறிய பெட்டியில் வைத்துக் கொண்டாள். ராமகிருஷ்ணய்யா கடைத் தெருவுக்குப் போய்ச் சீதாவுக்கு, சசிக்கு, குழந்தைகளுக்குத் துணிகள் வாங்கி வந்தார். தாம் செய்ய வேண்டிய கடைசிச் செலவு இதுதான் போலும். இத்துடன் (பூர்வஜன்ம) கடனும் தீர்ந்து போகுமோ!

சசி சின்னச் சின்ன சாமான்களைச் சேகரித்துக் கொண்டாள். மகிழ்ச்சியோடு இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரிந்தாள். திடீர் என்று, ''நீ எப்போது வருகிறாய்?'' என்று ராமகிருஷ்ணய்யாவைக் கேட்டாள், ஓடி வந்து.

''வரமாட்டேன்'' என்று வார்த்தை தொண்டை வரை வந்து விட்டது. ஆனால் ஏனோ வெளி வரவில்லை. ''வருகிறேன் அம்மா, பத்து நாளில் வந்து உன்னை அழைத்து வர மாட்டேனா?'' என்றார் அவர்.

என்னவோ குழப்பம்! பிரச்னை தீர்ந்தது என்ற இந்தச் சமயத்தில் தமக்குள் என்ன குழப்பம்?

வண்டி கொண்டு வந்தார். சீதா அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். மீண்டும் தலை குனிந்து கொண்டாள். சசியைக் கண நேரங்கூடத் தனியே விட்டு வைக்க விரும்பவில்லை.

வண்டிக்காரன் பெட்டியை வண்டியில் வைத்தான். சீதா குழந்தைகளை ஏற்றிவிட்டு மீண்டும் வாசற்படிக்கு வந்து நின்று கொண்டாள். அடுத்த வீட்டு அவதானியார், அவர் மனைவி மற்றுமுள்ளோர் வாசல் திண்ணையில் வந்து நின்றனர், வேடிக்கை பார்க்க.

''சரி, நான் போய் வருகிறேன், சித்தப்பா! கடிதம் போடுகிறேன். நீங்கள் மதராசுக்குக் கட்டாயம் வர வேண்டும். விலாசம் கொடுத்திருக்கிறேன்'' என்றாள் அவள் வேகமாக.

வண்டிக்காரன் சசியின் பெட்டியை எடுத்து வந்தான். சசி கூட வந்தாள். ராமகிருஷ்ணய்யாவின் வேட்டி முனையைப் பற்றிக் கொண்டாள் சசி. ''தாத்தா! நீ நிச்சயம் வருவாயா ? வராவிட்டால், பள்ளிக்கூடத்தில் பாடங்கள் போய்விடும்'' என்றாள்.

ராமகிருஷ்ணய்யாவின் மனம் பாறையாகக் கனத்தது. மூச்சுவிட முடியவில்லை.


சீதா இரண்டடி எடுத்து வைத்து வண்டியின் பக்கத்தில் நின்றாள் : ''வா சசி, உன்னை வண்டியில் ஏற்றி விடுகிறேன்'' என்றாள்.

யாரோ பின்னாலிருந்து பிடரியைப் பிடித்துத் தள்ளினாற் போல் ஓர் எட்டு எடுத்து வைத்துச் சசியை எடுத்துக் கொண்டார் ராமகிருஷ்ணய்யா. தபதப என்று வீட்டுக்கு உள்ளே ஓடினார்.

''நான் அனுப்பமாட்டேன். சசி வரமாட்டாள். நீ போ !'' என்று மடமடவென்று சொல்லி விட்டுச் சசியைத் தம் கழுத்தோடு கட்டிக் கொண்டார்.

''போக வேண்டாம் சசி, போக வேண்டாம், என்றைக்கும் நீ போக வேண்டாம்'' என்று சொல்லி விக்கி விக்கி அழுத தாத்தாவைப் பார்த்து, திக்பிரமை பிடித்து நின்றாள் குழந்தை சசி.

தெலுங்கிலிருந்து மொழிபெயர்த்தவர் :
எஸ். வி. எஸ்.



சுண்டைக்காய் கால் பணம்....


டென்மார்க்கைச் சேர்ந்த 'கோபன்ஹேகன்' நகர ரயில்வேயில் இப்போதெல்லாம் டிக்கட் பரிசோதகர் கிடையாது. அவரவர்களே தங்கள் டிக்கட்டுகளைப் பிளாட்பாரத்தில் உள்ள ஓர் இயந்திரத்தில் 'பஞ்ச்' செய்துகொள்ள வேண்டும்! நூற்றுக்கு இரண்டு பேரே ஓசிப் பயணம் செய்வதால், டிக்கட் பரிசோதகரே தேவையில்லை என்றும், டிக்கட் பரிசோதகர்களை நிறுத்தியதால் அரசுக்கு வருடத்துக்கு எழுபத்தைந்து லட்ச ரூபாய் மிச்சமாகிறதென்றும், சிலர் 'ஓசி'ப் பயணம் செய்வதால் ஏற்படும் நஷ்டம் இதைவிட மிகக் குறைவுதான் என்றும் அரசு காரணம் கூறுகிறது! டென்மார்க் முழுவதுமே இனி இப்படிச் செய்யப் போகிறார்களாம்! - சம்பத்குமாரி
ஆதாரம்: "காரவன்"

"அதோ போகிறானே அவன் நம்பர் ஒன் கஞ்சன்!"

"அப்படியா? என்ன செய்தான்?"

"ஹனிமூனுக்குக்கூடத் தனியாகவே போய்விட்டு வந்தான்!" - தெஹிமிடல்





தண்ணீர் இல்லாமலே துவைக்கலாம்!

தண்ணீரோ, சோப்போ இன்றிப் புழுதி படிந்த துணிகளைத் துவைக்க முடியுமா? முடியும்! சோவியத் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ள ஒரு கருவி இந்த அதிசய சாதனையைச் செய்கிறது. இக்கருவி தண்ணீர், சோப்புக்குப் பதில் காற்றை உபயோகிக்கிறது, புழுதியைப் போக்க. இக்கருவியிலிருந்து ஒரு விநாடிக்குப் பன்னிரண்டு மீட்டர் வீதம் பயங்கரப் புயல் வேகத்தில் காற்றடிக்கிறது. இந்தக் காற்றின் வேகத்திலேயே துணியிலுள்ள புழுதி பறந்து விடுகிறது! ஒரு துணிக்குச் சுமார் அரை நிமிட நேரம் இப்படிச் செய்தால் போதும். எல்லா அழுக்கும் பறந்துவிடுகிறதாம்!

சம்பத்குமாரி - "சோவியத் யூனியன்"

ஜப்பானில் டோக்கியோவின் கிழக்குப் பகுதியில், ஒரு வட்டாரம் முழுமைக்கும் 'ஏர்கண்டிஷன்' வசதி செய்ய ஜப்பான் நிபுணர்கள் திட்டம் தீட்டியுள்ளனர். தீ விபத்துக்களைத் தடுப்பதும், குறைந்த செலவில் நவீன வசதி செய்து தருவதுமே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகும்.


இத்திட்டத்தின்படி ஸிராக்கே பகுதியில் குப்பைகளை எரிக்கும் ஆலை நிறுவப்படும்; இங்கு கூடுதலாகக் கொதி கலன்கள் அமைக்கப்படும். இந்த ஆலையில் இருந்து கிடைக்கிற வெப்பத்தைப் பயன்படுத்தி இந்த வட்டாரத்தில் உள்ள பள்ளிகள், மருத்துவ மனைகள், பல மாடிக் குடியிருப்புக் கட்டிடங்கள் ஆகிய அனைத்துக்கும் வெப்பக் காற்று, குளிர்ந்த காற்று வெந்நீர் ஆகியவை வழங்கப்படும்.

ஆலை, தேவையான குழாய்கள் அமைக்க 200 கோடி யென் (ஜப்பான் நாணயம்) செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. வட்டாரம் முழுமைக்கும் வெப்பக் காற்றும் வெந்நீரும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டால், குளிர் காலத்தில் மக்கள் மண்ணெண்ணெய் ஸ்டவ்களைப் பயன்படுத்துவதை விட்டுவிடுவார்கள். பல தீ விபத்துக்களுக்கு மண்ணெண்ணெய் அடுப்புக்களே காரணமாக இருக்கின்றன. எனவே இம்மாதிரி விபத்துக்கள் நேர இனி இடமிருக்காது. - ஜப்பான் செய்திக் கதிர்



வட்டாரம் முழுமைக்கும் 'ஏர்கண்டிஷன்' வசதி




HEROS'-BE-104 TM
மிகச்
சிறந்த
வெளிச்சத்திற்கு
பஜாஜ்
bajaj
பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ்
லிமிடெட்

“என்னடா பாலு, உங்கப்பாவுக்குக் கடுதாசு எழுதட்டுமா, அல்லது நேரிலேயே போய் முடித்துக் கொண்டு வரட்டுமா?”

“ஸார், வேண்டாம் ஸார்...! இன்னும் நாலைந்து மாதங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள்; அப்புறம் நானே உங்களிடம் வந்து...”

“என்னப்பா இது, எங்க அலமுவைப் பிடிக்கவில்லையா—உனக்கு? அப்படியென்றால் ஏன் இவ்வளவு நெருங்கிப் பழகிறாய் எங்களுடன்? நான் ஒன்றும் புரியாமல் தவிக்கிறேன் பாலு. அலமுவும் அழுது அழுது முகமெல்லாம் வீங்கிக் கிடக்கிறாள். எனக்கு உடனே ஒரு முடிவு தெரியணும்...”

“ஸார்! நான் அலமுவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவது முக்காலும் உறுதி. நீங்கள் எனக்குச் செய்திருக்கும் உதவிகளுக்கும், என்னிடம் காட்டியிருக்கும் ஆதரவுக்கும், அத்தனைக்கும் மேலே நான் உங்கள் குடும்பத்தில் அவ்வளவு நெருங்கிப் பழக அனுமதித்ததற்கும் நான் ரொம்ப ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் என்றைக்கும் மாறவே மாட்டேன். எங்கப்பா, அம்மா நீங்கள் செய்யப் போகும் சீர் முதலியவற்றைப் பற்றிக் கவலைப்படவே மாட்டார்கள். ஆனால்... ஸார், தயவுசெய்து இன்னும் சில மாதங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள். அப்புறம் நானே உங்களிடம் வந்து...”

“என்னப்பா இது வேடிக்கை. நானும் போன வருஷத்திலிருந்து காத்துக் கொண்டிருக்கிறேன். ஆபீசிலும் அக்கம் பக்கத்திலும் உனக்கும் அலமுவுக்கும் முடிக்கப் போட்டுப் பேசுகிறார்கள்; வேறு இடத்தில் வரன் பார்ப்பது கூடச் சிரமம்தான்; எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?”


“ஸார்! தயவுசெய்து என்னைத் திரும்பத்திரும்பக் கேட்டுக் கொல்லுகிறீர்கள். இத்தனை நாட்கள் பொறுத்தீர்கள். இன்னும் சில மாதங்கள்.... தை பிறக்கிற வரைக்கும் பொறுக்கக் கூடாதா? ஸார், என் கஷ்டம்...”

“அதனால்தான் நான் ரொம்ப அவசரப்படுகிறேன். நீ கால் தேய உடம்பு ஓய நடக்கிற நடையையும், உன்னுடைய எளிய சட்டைத் துணிமணிகளையும் பார்க்கிறபோது எனக்கு ரொம்பப் பரிதாபமாக இருக்கிறது. நீ ஏன் இப்படியெல்லாம் கஷ்டப்படணும்? உன் அண்ணாக்கள் நிறையச் சம்பாதிச்சுண்டு நன்றாயிருக்கிறது எனக்குத் தெரியும். நீ மட்டும் ஏன் சம்பளத்தைக் கூடச் செலவழிக்க முடியாமல் காயக் கிலேசம் பண்ணிக்கணும்? ஊரில் ஏதாவது கடன் இருக்கிறதா? அப்படி இருந்தால் சொல்லு. அதைத் தீர்த்து விடுவோம். உனக்கே தெரியும், அலமுவிடம் எனக்கு எவ்வளவு பிரியம் என்று. பகவான் எனக்கும் ஏதோ கொடுத்திருக்கிறான். என் பையன்களும் நான் என்ன செய்தாலும் மறுக்கப்போவதில்லை. உனக்கு ஒரு கவலையும் வேண்டாம்; நானே உங்கள் ஊருக்குப் போய் விசாரித்து...”

“வேண்டாம் ஸார், நானே போய் முடிவு செய்து கொண்டு வருகிறேன்” என்று சொல்லிவிட்டு, பாலு மன்னார்குடிக்கு வந்தான். வந்தது முதல் அவனுக்கும் அவன் தாயாருக்கும் ஏகத் தகராறு. அவள் சம்மதிக்கவே யில்லை. அந்த வீட்டில் அந்தத் தாயார் வைத்ததுதான் சட்டம். சாயங்காலம் பாலு புறப்பட வேண்டும்.

“அம்மா, அம்மா, முடிவாய் என்ன சொல்கிறாய்?”

“நான் என்னடா சொல்லிப் பட்டணத்துக்கு அனுப்பிச்சேன்? பத்துப் பவுன் இல்லாமே இந்த வீட்டுக் குத்துச் செங்கல் ஏறக் கூடாதுன்னு சொன்னேனா இல்லையா? உன் மூத்தவ



அம்மா இட்ட கட்டளை

ஹரிச்சான் குஞ்சு

னுக ஒன்பது பேரையும் விட நீ என்னடா சாதிச்சே?''

''அன்னறு வெல்லாம் வாங்கினபோது பவுன் என்ன விலே? இப்போ என்ன விலே?''

''ரொம்பச் சமர்த்து! போடா, போக்கத்தவனே! அவனுக ஆரம்பத்தில் முப்பதும் முப்பத்தஞ்சும்தான் சம்பளம் வாங்கினனுக, நீ எடுத்த எடுப்பிலேயே நூற்றைம்பதும் இருநூறும் வாங்கறையே...''

''நானும் சும்மா வந்து கேட்கவில்லையே; எட்டுப் பவுன் வாங்கிண்டு வந்திருக்கேன்...''

''அதுக்குள்ளே கலியாணத்துக்கு அவசரம் வந்து விட்டது, பாவம்... ரொம்ப வயசு ஆயிடுத்து... பேசாமே உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு ஊருக்குப் புறப்படு. பாக்கி இரண்டு பவுனையும் வாங்கிண்டு வா; அப்புறம்தான் பேச்சு; உம், போடா...''

''அக்கிரமம், அநியாயம்'' என்று சொல்லியபடியே அப்போது அங்கு வந்தார் பாலுவின் தகப்பனர். ''நானும் பார்க்கிறேன், முப்பது வருஷங்களாய் நீ வெச்சதே சட்டமாய்ப் போய்விட்டது. பசங்கள் ஒவ்வொருத்தனும் உன் கையாலே பிடுங்கல் சோறு தின்னுண்டு கரியுண்டு கரியுண்டு, கச்சிப் போய், எப்போடா இந்த விடுங்கற சென்ட்ரல் ஜெயில்லேந்து வெளியே போகப் போகிறோம்னு துடிச்சுண்டுதான் போயிருக்கானுக. பாவம், அவனவன் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி இவளுக்குப் பத்துப் பவுன் கொண்டு வந்து கொடுப்பதற்கு என்ன பாடு பட்டிருப்பானுக. ஏதோ எங்கள் பெரியவா புண்ணியம் அவனுக எல்லாருமே நன்னச் சம்பாதிச்சுண்டு சௌக்கியமா இருக்கானுக. அவனுகளுக்கு வந்த பெண்களும் ஒவ்வொண்ணும் ரத்தினம். நல்ல வேளையா உன் கொடுங்கோல் நடக்கும் இந்த வீட்டில் அவர்களை விட்டு வைக்கவில்லை நம் பசங்கள். கல்யாணப் பெண்ணுக்கு நகை பண்ணுவது மாதிரின்னு ஒவ்வொரு நகையாப் பண்ணியாகிறது! இறங்கு இறங்கா வளையல் ஆச்சு; சரளை சரளையா கழுத்துத் தாங்காமே சங்கிலி ஆச்சு; கண்டு விரல் பருமனுக்குக் கொடி பண்ணிண்டே; இப்போ நாற்பது பவுனில் பெல்ட் ஒட்டியாணம் பண்ணியாகிறது. பரமசிவப்பத்தன் அக்கிரகாரத்திலேயே பழமும் தின்னு கொட்டையும் போட்டவன். அவன் கூட யாரிடமோ விளையாட்டாச் சொன்னனும். வைத்தி அய்யா வீட்டு அம்மா புதுக் கல்யாணப் பொண்ணு மாதிரி அப்படி இப்படின்னு'-என்னை வேண்டிக்கிடக்கு...''

''ஏன் வேண்டிக் கிடக்கலே? ஆமாம், புதுக் கல்யாணம்தான். வரப்போகிறதே, அறுபதாம் கல்யாணம்...''

''போதுண்டி. எனக்கு அது ஒண்ணுதான் குறைச்சல்...''

''போறுமே; உங்களாலே என்னமுடிஞ்சுது? உங்களுக்கு என்ன தெரியும்னேன்? என்னைக் கேட்க வேண்டாமே; ஊரைக் கேட்டால் சொல்லுமே; இந்தக் காமாட்சி இல்லேன்னு இந்த அம்மாமி வைத்தி குடும்பம் அம்பலமாப் போயிருக்கும். அவளாய் இருக்கக் கொண்டு இந்த அபார சம்சாரத்திலே நீஞ்சிக் கரைக்கு வர முடிஞ்சுது. பத்துப் பசங்களும் படிச்சு முடிச்சு வேலைக்கும் போயிருக்கானுகன்னு, இத்தனையும் காமாட்சியாலேதான்; ஆணுக்கு ஆணாய், பெண்ணுக்குப் பெண்ணாய் அவள் அப்படியே அஷ்டாவதானம் பண்ணியிருக்காள்னு, மன்னார்குடியே சொல்லுமே. அக்கரை அய்யார் சமாதியிலிருந்து ஹரித்ராநதிவரைக்கும் போயிருக்கு என் நெய்யும் அப்பளாமும்; இந்தக் கை மரக்கால் மரக்காலாய்த் தயிர் கடைந்த கை. கலக் கணக்கில் உளுந்து களைஞ்சு, கையாலே எந்திரத்தில் அரைத்து, இடித்து, அப்பளாம் இட்டே தோல் உரிஞ்ச கை இந்தக் கை. இத்தனை வருஷமா இந்தக் குடும்பம் கௌரவமா நடந்துண்டு வரதே, அதுக்கு யார் சம்பாதிச்சுப்போட்டா? நீங்களா சம்பாதிச்சேள்? இந்த உலகத்திலேயே ஒருத்தரும் செய்யாத மாதிரி என் நாட்டுப் பெண்களுக்குச் செய்யப் போகிறேன். என் கையிலே என்ன இருக்குன்னு ஒங்களுக்கே தெரியாது. உங்க பிள்ளைகளும் நாட்டுப் பெண்களும் என்னைத் தெய்வம்னு கொண்டாடும்படியாய் மணக்கப் போகிறேன். ஆச்சு. பாலு கலியாணம் ஆய்விட்டால் அப்புறம் நீங்கதான் ராஜா. நான்தான் உண்மையிலேயே ராணி. மூணு மூணரை வேலி நிலத்தை உங்கள் தமக்கை தங்கைகளுக்குக் கல்யாணம் பண்ண வாங்கின கடன்களுக்கும் கோவாபரேட்டில் கடனுக்கும் சேர்த்துக் குழி ஒன்னேகால் ரூபாய்க்குச் சாட்டி விட்டுட்டு உங்கப்பா கண்ணை மூடிண்டார். நீங்களோ படுத்த படுக்கை. உடம்பெல்லாம் வெளுத்து இளைச்சுத் துரும்பாய்ப்போய்க் கிடந்தேள். பீம் சிங்கும் ராஜா டாக்டரும்கூடக் கைவிட்டுட்டா. இவ்வளவும் நான் இந்த வீட்டுக்கு வந்த மறு வருஷம். என் கையில் கிடந்த காப்பும் கொலுசும் இரட்டை வடம் சங்கிலியும் அடகு வைச்சு உங்களுக்கு வைத்தியம் பண்ணினேன்; தாலி கிடந்தால் போதும்; மற்ற நகையெல்லாம் தானே வரும்னு நினைச்சுச் செலவழிச்சேன். அடகிலிருந்து மீட்கவே முடியாமல் வட்டி முழுங்கி விட்டது என் நகைகளை. ஜாம் ஜாம்னு நீங்க எழுந்து நடக்க ஆரம்பிச்சேள். உங்க ஆயுசு கெட்டின்னு பொதக்குடி ஜோஸ்யர் மாமா வந்து சொன்னார். அன்னிக்கு வைச்சேன் வைராக்கியம். கல்லுக் கல்லாய் நகையைத் தோத்துப்புட்டேன்; இதுக்குப் பத்துப் பங்காப் பூட்டிக்கணும்னு வைராக்கியம் வைச்சேன். நீங்க இருக்கிற தைரியத்திலே மாட்டை வாங்கிக் கட்டிண்டு குடித்தனத்தை ஆரம்பிச்சேன். பசங்க ஒவ்வொருத்தனும் பொறந்தானுக. குடித்தனமோ துரைத்தனமோ என்பாளே. பிள்ளையாண்டானுகளை அப்படி அடக்கி ஆண்டதனலே இன்னிக்கு அவனுக நன்ன இருக்கானுக. இல்லேன்னு தறுதலையும் தத்தாரியுமாய், சந்தியிலே நின்னிருப்பானுக. வேலைக்குப் போன புதுசில் அவன்களுக்குக் காசு பணம் அருமை தெரியணும், அம்மா கொண்ணுப்பிடுவாளேன்னு பணத்தைச் சேர்த்துப் பவுனை வாங்கினதுதான் பின்னாடி கருத்தாய்க் குடித்தனம் பண்ணுகிற வழி வகை புரியும்கிறதும் என் நோக்கம்.''

''அம்மா! மானேஜர் வசதி உள்ளவர்; நான் அநேகமாய் அவர் வீட்டிலேதான் சாப்

ழீன் டெக்லியர்
(பிரான்ஸ் ஆடவர்திலகம்)"
கூறுகிறார்



சார்போனிலே ஒரு மாணவர் ழீன் டெக்லியர். 1969 ஜூனில் மிஸ்டர் பிரான்ஸ் எனும் விருதுபெற்றார். அவருடைய உடல் அளவுகளாவன: உயரம் 1.79மீ. எடை 78 கிலோ, மார்பு 1.21மீ, தோள்கள்: 53 செமீ, கழுத்து: 42 செமீ, முன்கைகள்: 31 செமீ, இடுப்பு 74 செமீ, தொடை 60 செமீ, பின் கால்கள்: 41 செமீ.

"புல்ஒர்க்கர் கன்றுகளையும் ஆற்றலுள்ள ஆண் சிங்கங்களாக்கிவிடும்"

18 வயதிலே சிறுபிள்ளைபோல் தோற்றமளித்தேன். உயரம் 1.79மீ. ஒல்லியான தேகம். 65 கிலோ. எக்ஸ்பேண்டர்கள், எடைகளோடு வீணே பாடுபட்டுப் பார்த்தேன், ஏமாற்றம்தான் கண்ட பலன். அதன் பிறகு கண்டுகொண்டேன் புல்ஒர்க்கரை. எடுத்த எடுப்பிலேயே அதிசய முன்னேற்றம். எடை ஏறியது. கடிதில் கட்டுடல் அமைந்தது: திரண்ட தோள்கள், பரந்த மார்பு. V வடிவ இடுப்பு, வடிவான கை கால்கள். வேகமாகக் கட்டுடல் அமைப்பதிலே புல்ஒர்க்கரை மிஞ்ச எதுவுமேயில்லை தான்

நித்தமும் 5 நிமிடங்கள் வீதம் லகுவாக இரண்டே வாரப் பயிற்சி செய்த பின் கண்ணாரக் கண்டு அளவிடக் கூடிய பயன்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறது புல்ஒர்க்கர்.. இல்லையேல் பணம் தராதீர்


பேஷாக. ஆடவர் பொறாமைப்படவும் பெண்கள் மெச்சவும் தக்க கட்டுடலை உங்களுக்கு அமைக்கிறது புல்ஒர்க்கர்; சுவாசத்திற்கு ஆகும் நேரம் கூட ஆகாது அன்றாடம்... ஐந்தே நிமிடங்கள் தான்: குச்சிபோன்ற கரங்களுக்குப் பதிலாக, திரண்டெழும் தசைத் திண்டுகள்; வாட்ட சாட்டமான மார்பு; பரந்த தோள்கள்; இரும்பு போன்ற வயிற்றுத் தசைகள்; வலிமையேறிய தொடை, பின் கால்கள். இரண்டே வாரங்களில் நேரில் கண்டு, டேப்பினால் அளவிடலாம்: இல்லையேல் செலவேதும் இல்லை உங்களுக்கு. முழு விவரமறிய இக் கூப்பனைத் தபாலிடுக. நிர்ப்பந்தம் ஏதுமில்லை. விற்பனையாளர் எவரும் உங்களை அணுகமாட்டார்.

©Mail Order Sales Pvt. Ltd. 15 Mathew Road, Bombay 4

இலவசம்

காளையரின் கட்டுடல் அமைக்கும் புல்ஒர்க்கரின் உத்தரவாதமான முறை பற்றிய இலவச நூல், சான்றுகள், முழு விவரங்கள் யாவும் எனக்கு அனுப்புக இலவசமாக.

78-T



பெயர் ....

முகவரி .... வயது ....

BULLWORKER SERVICE 15 Mathew Road, Bombay 4

தயவு செய்து உமது முகவரியை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பவும்

கவர்ச்சிகரமான வட்டி வரிச்சலுகைகள்

‘பாங்கு ஸீரிஸ்’ ஏழு ஆண்டு தேசீய சேமிப்புப் பத்திரங்களின்

II, III, IV வெளியீடுகள் மூலம் அடையலாம்.

- 5 சதவிகித வட்டி II. III வெளியீடுகளுக்கு—வரி விலக்கு உண்டு
- 7½ சதவிகித வட்டி IVவது வெளியீட்டிற்கு — வரிக்குட்படும் இதர பத்திரங்கள் மூலம் கிடைக்கும் வட்டியையும் சேர்த்து ரூ. 3000 வரையான வட்டிக்கு வருமான வரி கிடையாது.

- வாரிசு நியமனம், அடமானம் இவற்றுக்கான வசதிகள் உண்டு.

ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவிலும் அதன் துணை பாங்குகளிலும் இந்தச் சேமிப்புப் பத்திரங்கள் கிடைக்கும்.

தேசீய சேமிப்பு நிறுவனத்தின் வெளியீடு

71/35

பிடுகிறேன். அதையும் கொடுத்திருக்கிறார், வாடகை இல்லாமல். நானும் அந்தக் குடும்பத்தில் ரொம்ப நெருங்கிப் பழகி விட்டேன்; அவர் இப்போது மிகவும் அவசரப்படுகிறார். அவர் நிறையச் செய்வார். அதிலே வேணும்னாலும் நீ இரண்டு பவுன் வாங்கிக் கொள்ளலாம்; அந்தப் பெண்... பாவம்...''

''சீச்சீ, வாயை மூடுடா. உன் மாமனார் பதினாயிரம் ரூபாய் கொடுத்தாலும் கூட அதில் ஒரு பைசா தொட மாட்டேன், தெரியுமா? எலே, நான் பிச்சை கேட்கலைடா; அதிகாரம் பண்ணிக் கேட்கிறேன். போயி, நீயே சம்பாதிக்க மீதிப் பவுனை வாங்கிண்டு இங்கே வரணும். உங்க மானேஜரிடம் நாலஞ்சு மாசம் பொறுத்துக்கச் சொல்லு. பாக்கி இரண்டு பவுனையும் வாங்கிண்டு வா; உடனே ஜாம் ஜாம்னு கல்யாணம்; அது மட்டுமில்லே. உடனே இந்தக் குடித்தனத்தைக் கலைச்சுட்டு, நாங்க ரெண்டு பேரும் பெங்களூருக்குப் போகப் போகிறோம். அங்கே இருக்கும் உங்க அண்ணாவும் மன்னியும் ஏழெட்டு வருஷங்களாய்க் கூப்பிடுகிறார்கள். அப்புறம் மதுரை அண்ணாவிடம். அப்புறம் பட்டணத்துக்கு வருவோம். பிறகு கல்கத்தா நாக்பூர். ஏண்டா எங்களுக்கு இருக்கவா இடமில்லே? ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒரு வருஷம் இருந்தால் போதுமே. நான் வந்தால் வெறுங்கை வெங்கடம்மாவா வருவேன்னு நினைக்காதே. ஒவ்வொருவருக்கும் காசும் பணமும் நகையும் நட்டும் கொடுக்க இருக்கு என்னிடம். அப்புறம் கடைசியா... காசிக்குப் போய் அக்கடான்னு நானும் உங்கப்பாவும் சௌக்கியமா இருப்போம். எங்களுக்கென்னடா... நாழி ஆயிடுத்து; பஸ் ஒன்பதேகால் மணிக்கு. கும்மாணமே போ. ஜனதாவிலே அவ்வளவாக் கூட்டம் இராது. புறப்படு... ஓடுடா, நான் சொன்னதையெல்லாம் தலைப்பிலே முடிஞ்சுக்கோ.''

பாலு தெளிவுடனும் உறுதியுடனும் புறப்பட்டுச் சென்றான். ''காமாக்ஷி... காமாக்ஷி'' என்று கூப்பிட்டார், வைத்தி. ''என்ன ஒரே படியா உருகியாறது...'' என்றாள் காமாக்ஷி.

''இத்தனை வருஷமா இப்படிப் பேசினதே இல்லையேடி நீ...''

''நீங்களும் இன்னிக்கு நிமிர்ந்து பேசினப்பிலே என்னிக்காவது இரைஞ்சு பேசினது உண்டா...'' என்று கேட்டாள் காமாக்ஷி. சிரிக்கும் இருவர் கண்களும் கலந்தன.

அட்டைப் பட விளக்கம்

ஒரே வாரத்தில் இரு பிறந்த நாட்கள்

தந்தையும் மகளும் ஒரு மாபெரும் நாட்டின் பிரதமர்களாக இருப்பதென்பது உலக சரித்திரத்திலேயே அபூர்வம்தான். அப்படிப்பட்ட தந்தைக்கும் மகளுக்கும் ஒரே வாரத்தில் பிறந்த தினம் வருவதோ அதனினும் அபூர்வமாகும்.

உடலால் மறைந்தும், நம் நினைவில் மறையாமல் நிற்கும் பண்டித ஜவாஹர்லால் நேருவின் எண்பத்திரண்டாவது ஜனன தினம் இம்மாதம் 14ந் தேதி கொண்டாடப்படுகிறது. அவரது அருமைப் புதல்வி ஸ்ரீமதி இந்திரா காந்தியின் ஐம்பத்தைந்தாவது பிறந்த தினம் இம்மாதம் 19ந் தேதி நிகழ்கிறது.

ஜவாஹர்லால்ஜிக்குத் தேசத்திடமிருந்த உள்ளார்ந்த அன்பு குறித்தும், சுதந்திரப் போராட்டத்தில் அவர் செய்த மாபெரும் தியாகங்கள் குறித்தும் கருத்து வேற்றுமைக்கு இடமே இல்லை. ஆனால் சுதந்திர இந்தியாவின் கேந்திர ஸ்தானத்தில் அவர் வீற்ற பின் மேற்கொண்ட கொள்கைகள்தாம் கருத்து வேற்றுமைக்கு உரியன. இருவிதமான கருத்துக்கள் இருக்கையில் ஜவாஹருக்கு மாறான கருத்து மட்டுமே சரி என்று ஒப்புக் கொள்வது எனக் கேட்கலாம். கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டியதில்லை. பொருளாதார ரீதியிலும் சர்வதேச அந்தஸ்திலும் பாரதம் தாழ்மட்டத்துக்குப் போவது நிதர்சனமான போது, நேருஜியின் சோஷலிஸத்துக்கு மாற்றாக ராஜாஜி அளித்த சுதந்திரக் கொள்கைகளே சரியானவை என்று நிச்சயமாயிற்று.

ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் பிதுரார்ஜிதச் சொத்தைக் காப்பது போல, தமது தந்தையின் கொள்கைகளையே பெரும்பாலும் பின்பற்றி வருகிறார். சமீபத்திய சாஸனத் திருத்தங்களைக் காண்கையில் தந்தையை விடவும் அவர் அதிகமாக இடப்பக்கம் சாய்ந்து விட்டார் என்ற நியாயமான ஐயமும் எழுந்துள்ளது. இவ்விதம் மேலட்டையில் நேருஜிக்கு இடதுபுறத்திலே ஸ்ரீமதி இந்திரா தம்முடைய இடப்பக்கம் மட்டுமே தெரியுமாறு காட்சியளிப்பதில் இந்த உள்அர்த்தமும் தொனிப்பது போலிருக்கிறது!

ஸ்ரீமதி இந்திரா பிரதமர் பதவிக்குத் தகுதியற்றவரல்லர். அவர் மதிப்புக்குரியதொரு மகத்தான தேசபக்தக் குடும்பத்தின் வாரிசாவார். இளம் பருவத்திலேயே தேச நடப்புக்களில் ஆழ ஈடுபட்டவர். உயர்ந்த கல்வியறிவு பெற்றவர். உலக நாடுகள் பலவற்றைக் கண்டவர். அயராது உழைப்பவர். தந்தையை நினைப்பூட்டும் விதத்தில், ஓரளவு மக்களை ஆகர்ஷிக்கும் காந்த சக்தியும் வாய்ந்தவர். இவற்றுக்கெல்லாம் மேலாக நெஞ்சுறுதி கொண்டவர். ''ஜவாஹர்லால்ஜியைப் போல் சஞ்சலத்துக்கு ஆட்படுபவர் அல்லர்'' என ராஜாஜியால் பாராட்டப்பட்டிருப்பவர். சமீபத்தில் அவர் துணிச்சலுடன் ருஷியாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டு நமது அந்நியக் கொள்கையில் ஒரு நல்ல திருப்பத்தை விளைவித்திருப்பது குறிப்பிடத் தக்கது. இவ்வாறே தேர்தல் கூட்டாளிகள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களது கோரிக்கைகளுக்கெல்லாம் 'ஆமாம் சாமி' போடுவதில்லை என்ற உறுதியுடன், மாநில அரசாங்க அதிகாரத்தை இப்போதைக்கு அதிகரிப்பதற்கேயில்லை என்று அவர் கண்டிப்புடன் இருப்பதும் பாராட்டுக்குரியது.

ஸ்ரீமதி இந்திரா காந்தி மட்டும் கட்சிப் பற்றுக்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு, தேச நலனை மட்டுமே நிறைந்த உள்ளத்துடன் கருதுவாரானால் இந்திய உபகண்டத்துக்கு மகத்தான நன்மை விளைச் செய்ய முடியும். சரித்திரத்தில் தமது பெயரைப் பொன்னெழுத்தால் பொறித்துக் கொள்ள முடியும். இதற்கு அவர் செய்ய வேண்டியதெல்லாம், கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட அரசியல் முனிவர் ராஜாஜி காட்டும் அறப் பாதையில், அறிவுப் பாதையில் அடியெடுத்து வைப்பதுதான்!

பாரத தேச சரித்திரத்தில் பல அற்புதங்கள் நடந்திருக்கின்றன. நேரு குடும்பத்திலும் பல அற்புதங்கள் நடந்திருக்கின்றன. தேசத்துக்கு ஓர் அற்புதமாகவும், நேரு குடும்பத்துக்கோர் அற்புதமாகவும் ஸ்ரீமதி இந்திரா, ராஜாஜி காட்டும் தர்ம மார்க்கத்தில் செல்ல இறைவன் அருள்பாலிப்பானாக. ஸ்ரீமதி இந்திரா மேலும் பல பிறந்த தினங்களைக் காண இறைவனை வேண்டும்போதே, தேசத்திலும் நன்மைகளும் சுபிட்சமும் பிறப்பதற்கு அவரைக் கருவியாகக் கொள்ளுமாறும் பிரார்த்தனை செலுத்துகிறோம்.



மடியினிலே வைத்திருந்த ரூபாய் இரண்டினிலே ஒன்றுக்கு மதியிழந்து லாட்டரியினை வாங்கிவிட்டபோது கையினிலே, புட்டியைக் கொடுத்து மற்ற ரூபாயினை மடியினிலே போட விடாமல் எடுத்துவிட்டு, மது உடலுக்கு நல்லது ஆனால் குடிக்காதே என்று அறிவுரையும் பகன்றுவிட்ட தனிப் பெருமை தற்போதைய தமிழக ஆளுனருக்கன்றி வேறு எவர்க்கு?

மைசூர்-6
24–10–71 தயாளன்

★ இப்பொழுதெல்லாம் அடிக்கல் நாட்டுவது என்பது குழந்தைகள் தெருவில் மண் வீடு கட்டுவது போலாகி விட்டது. வேலூர் அரசினர் பெண்ட்லண்ட் மருத்துவமனையின் பொன் விழா சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கொண்டாடப் பட்டது. பொன் விழாக் கட்டடம் ஒன்று கட்ட முடிவு செய்யப் பட்டு மறைந்த ஜனாதிபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்கள் அடிக்கல் நாட்டினார். பல அமைச்சர்கள் கலந்து கொண்டனர் அந்த நிகழ்ச்சியில்.

அக்கட்டடத்துக்குப் பொன் விழாக் கமிட்டியினரின் நன்முயற்சியினால் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 'வியட்நாம் வீடு' நாடகம் ஏற்பாடு செய்யப்பட்டுப் பொதுமக்களிடம் நன்கொடையாகச் சுமார் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் திரட்டப்பட்டது. அப் பணத்தைப் பாங்கில் டெபாசிட் செய்துள்ளனர்.

அண்மையில் சுகாதார அமைச்சர் திரு அன்பழகனைப் பத்திரிகை நிருபர் ஒருவர் அக் கட்டடம் பற்றிக் கேட்டதற்கு ''அக்கட்டடத்துக்கு ஆறு லட்சம் ரூபாய் செலவாகும். மேலும் எந்த இடத்தில் கட்டடம் கட்டுவது என்று முடிவு செய்யப்படவில்லை'' என்று கூறியுள்ளார். அடிக்கல் நாட்டி மூன்று ஆண்டுகளாகியும் எந்த இடத்தில் கட்டுவது என்று கூட முடிவு செய்யாமல் இருக்கிற நேர்த்தியை என்னவென்பது?

வேலூர்,
28–10–71 ந. ஜோதி

★ இக் குறிப்பிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

சென்ற வாரம் ஆங்கில தினசரி ஒன்றில் வெளியாகியிருந்த செய்தி ஒன்றைப் பார்த்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். தீபாவளிக்கு முந்தின சனிக்கிழமை யன்று ஒரு நர்சரிப் பள்ளிக்கூடத்தில் சுமார் இரண்டரை வயதுடைய குழந்தையை உள்ளேயே விட்டுப் பூட்டிவிட்டனர். பெற்றோர்கள் குழந்தையைத் தேடிவந்தபோது அவர்களுக்குச் சரியான தகவல் தரவில்லை. நாலு நாட்கள் கழித்துத் தீபாவளி விடுமுறை முடிந்து பள்ளியின் கதவைத் திறந்தபோது குழந்தையின் சடலம் வெளியே விழுந்ததாம். இந்தச் செய்தியைப் படித்த என்னைப் போன்ற தாய்மார்களின் உள்ளங்கள் எல்லாம் தவித்தன. அந்தக் குழந்தையின் பெற்றோர்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. அக்குழந்தை தன் உயிர் பிரிவதற்கு முன் எவ்வளவு அழுது துடித்ததோ, அக் குழந்தையின் மனத்தில் எவ்வளவு பீதி இருந்ததோ? எப்படிப் பசியால் துடித்ததோ? என்று பலவாறாக எண்ணித் தாய்மார்கள் பலர் கண்ணீர் வடித்திருப்பார்கள்.

நிர்வாகத்தினர் மீது போலீஸார் நடவடிக்கை எடுத்தாலும் அந்தக் குழந்தையுடைய தாயின் மன வேதனையை யாராலும் தீர்க்க முடியாது. பல லட்சக் கணக்கான தாய்மார்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். இதையே ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு குழந்தைகளை சர்வ ஜாக்கிரதையாக எல்லா நர்ஸரிப் பள்ளிகளும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சென்னை–32
28–10–71 பத்மாமணி

ஹனுமந்தையா - காங்குலி 'நாடகத்'தைப் போல பெங்களூரிலும் (இ)காங்கிரஸ் மேயர் லிங்கய்யா அவர்களுக்கும், கார்ப்பரேஷன் கமிஷனர் ஹனுமந்தப்பாவுக்கும் கடந்த ஆறு மாதங்களாகச் சண்டை! கமிஷனர் தம் ஆணைக்கு உட்பட்டு நடப்பதில்லை, கவுன்சில் மீட்டிங்கில் முடிவு செய்யப்பட்டதை நிறைவேற்றுவதில்லை, கவுன்சில் மீட்டிங்குகளுக்கு வருவதில்லை, இன்ஸ்பெக்ஷனுக்குச் செல்லும் பொழுது கூட வருவதில்லை என்று கவர்னரிடமும், பல பொதுக் கூட்டங்களிலும் மேயர் கூறுகிறார்.

திரு ஹனுமந்தப்பா கவர்னருக்கு அனுப்பியுள்ள பதிலில், ஒவ்வொரு இன்ஸ்பெக்ஷனுக்கும் மேயருடன் சென்று என் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை என்று கூறியுள்ளார். மேலும், ஒரு முறை அவருடன் சிடி மார்க்கெட் 'சப்-வே'யைப் பார்வையிடச் சென்ற பொழுது 'லாட்டரி டிக்கெட்' விற்றுக்கொண்டிருந்த ஒரு பையனை அடித்து, லாட்டரி டிக்கட்டுகளைக் கிழித்தெறிந்து விட்டார் மேயர் லிங்கய்யா என்றும், இன்னொரு தடவை ஜெயநகரைப் பார்வையிடச் சென்றபோது ஒரு சண்டையில் ஒருவரை மேயர் அடித்து விட்டார் என்றும், இவருடன் சென்று தம் பெயரைக் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

மேயரோ, கமிஷனரை 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டுமென்று கூறுகிறார்! எப்படி இருக்கிறது கதை!

பெங்களூர்,
28–10–71 எஸ். நடராசன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon